

# கிராமத்தின் சாரல்

கொழும்புத்துறை கிராம வரலாறு கூறும் நூல்












வெளியீடு:
கொழும்புத்துறை
சனசமூக நிலைய நிர்வாக சபை
2019

பொதுசன நூலகம்
03 SEP 2019
யாழ்ப்பாணம்

# கிராமத்தின் சாரல்

"எமது கிராம வரலாறு கூறும் முதல் நூல்"

**சமர்ப்பணம்**

எமது கிராம வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய முன்னோர்களுக்கு இவ் நூல் சமர்ப்பணம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

**வெளியீடு பதிப்புரிமை :**
கொழும்புத்துறை சனசமூக நிலைய நிர்வாக சபை
2019

9299 (P)

**பதிப்பு :**
மெகா பதிப்பகம்
41, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

## கொழும்புத்துறை சனசமூக நிலைய 68 வது
## நிர்வாக சபை – 2019

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு.வி. காங்கேயன் |
| செயலாளர் | : | திரு. இ. விஜயகுமார் |
| பொருளாளர் | : | திரு. மா. கமலநாதன் |
| உபதலைவர் | : | திரு. பா.சசிகரன் |
| உபசெயலாளர் | : | திரு. சு. நவரெத்தினம் |

நிர்வாக உறுப்பினர்கள்

1. திரு.ச. ஜனந்தன்
2. திருமதி இராசமணி அருளையா
3. திரு சி. கலைரூபன்
4. திரு்மதி வனிதா விக்னேஸ்வரன்
5. திரு சி. தயாளன்
6. ஈ. அஜந்தா
7. திரு. ந. கோபிராஜ்
8. திரு. லோ. கோபிகிருஸ்ணா
9. திரு இ.மகிந்தன்
10. திரு. க. ஈஸ்வரன்

## கொழும்புத்துறை சனசமூக நிலைய
## விநாயகர் விளையாட்டுக்கழக நிர்வாக சபை – 2019

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு ஸ்ரீ. சுபாங்கன் |
| செயலாளர் | : | திரு ச. கபிலன் |
| பொருளாளர் | : | திரு ச. ஜனந்தன் |
| உபதலைவர் | : | திரு சி. தயாளன் |
| உபசெயலாளர் | : | திரு வ. பவித்திரன் |

நிர்வாக உறுப்பினர்கள்

1. திரு சி. கஜலக்ஷன்
2. திரு ச. சாருஜன்
3. திரு இ.கிஷாந்தன்
4. திரு த. ருஷாந்தன்
5. திரு யோ. ரேணுகானன்

## கொழும்புத்துறை சனசமூக நிலைய நிர்வாக சபை 2019




**நிற்போர் இடமிருந்து வலம்:** லோ. கோபிகிருஸ்ணா, ந.கோபிராஜ், சு.நவரட்ணம், ஈ.அஜந்தா, வி.வனிதா, அ.இராசமணி

**இருப்போர் இடமிருந்து வலம்:** மா.கமலநாதன் (நிலைய பொருளாளர்), பா.சசிகரன், வி.காங்கேயன்(நிலையத் தலைவர்), இ.விஜயகுமார் (நிலைய செயலாளர்), க.ஈஸ்வரன்

**புகைப்படத்திற்கு சமுகமளிக்காதோர்:** ச.ஜனந்தன், சி.கலைரூபன், சி.தயாளன், இ.மகிந்தன்.

# மலர்க்குழு




**நிற்போர் இடமிருந்து வலம் :** வைத்தியர் க.சோதிதாசன், ம.நீலுகா, சு.நவரட்ணம்

**இருப்போர் இடமிருந்து வலம் :** பா.சசிகரன், த.சுப்பிரமணியம், வி.காங்கேயன், இ.விஜயகுமார்.

# கொழும்புத்துறை சனசமூக நிலைய

## மலர்க்குழு - 2019

| | | |
|---|---|---|
| திரு. வி. காங்கேயன் | - | தலைவர் |
| திரு. இ. விஜயகுமார் | - | செயலாளர் |
| டாக்டர் க. சோதிதாசன் | - | மலர் தொகுப்பாளர் |
| செல்வி நீலுகா மதியாபரணம் | - | ஒப்புநோக்குநர் |
| திரு. பா. சசிகரன் | - | உறுப்பினர் |
| திரு. சு. நவரெத்தினம் | - | உறுப்பினர் |
| திரு. த. சுப்பிரமணியம் | - | அங்கத்தவர் (நிறுவுனர்) |

நிதிக்குழு உறுப்பினர்கள்

1. திரு. வி. காங்கேயன்
2. திரு. மா. கமலநாதன்
3. திரு. பா. சசிகரன்
4. திரு. சு. நவரத்தினம்

# நிலைய கீதம்

புகழ்தங்கும் கொழும்புத்துறை சனசமூக நிலையம்
வளமெல்லாம் பெற்றினிதுயர்க
வான் புகழ் கொண்டு நலன் கண்டு
எம் மூரின் அழகென்றே எழுக - புகழ்தங்கும்

கடல் வந்து நீராட்டும் குளிர் காற்றூதி சீராட்டும்
மணற் பூமி பொலிந்தெம் துறையில்
வளர் சனசமூக நிலையமே வாழி
மக்கள் மனம் வென்று நிலை நின்று
நல் சேவையாற்றியே யாவரும் போற்றிட வாழி - புகழ்தங்கும்

ஆரிகரன் அருள்பெறு நிலையம்
அறிஞர்கள் நெறியாலே உயரும்
கலைஞான எழில் கொண்டு நிமிரும்
எங்கள் கலைக்கோயில் என்றென்றும் வாழ்க - புகழ்தங்கும்

படிப்பகம் கொண்டிடும் நிலையம்
மக்கள் அறிவினை வளர்திட உதவும்
பண்பாட்டு விழாக்களை எடுக்கும்
எங்கும் புகழ் வீசி உள்ளொளி பெருக்கும் - புகழ்தங்கும்

இளைஞர்கள் சக்தியாய் எழுக
எம்மூரின் எழிலாக நிறைக
கலை மற்றும் விளையாட்டு துறைகள்
வளர்ந்திட அரும்பணி புரிக - புகழ்தங்கும்

எழிலான எம் மண்ணின் பேறே
எம்மூரின் அழகான வாழ்வே
எம் கனவுகள் மெய்பட எழுக
கலை ஞான வடிவாக என்றென்றும் ஒளிர்க - புகழ்தங்கும்

இயற்றியவர் : கவிஞர் க. சோதிதாசன்

# ஆசிச் செய்தி



எமது சனசமூக நிலையம் 68 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நல்லாசி கூறுவதில் பெருமைப்படுகின்றேன் நான் சந்திர சேகரப் பிள்ளையார் ஆலயத்தில் பூசகராக பணிபுரிந்த வேளையில் இந்த சனசமூக நிலையமானது கொழும்புத்துறை பிரதான வீதியில் அமைந்திருந்தது. சில ஆண்டுகளின் பின் துரையப்பா வித்தியாலயத்திற்கு முன்பாக கட்டிட வசதியுடன் அமைக்கப்பட்டது. இந்நிலையம் பல சமூக சேவைகளை ஆற்றி வருகின்றது. இச்சேவைகள் மென்மேலும் பலதரப்பட்ட வகையில் பெருகி கொழும்புத்துறை வாழ் மக்களுக்கு நன்மைகள் பல ஆற்றிவர எல்லாம் வல்ல ஸ்ரீ சந்திரசேகர விநாயகரை வணங்கி நல்லாசிகளைக் கூறுகின்றேன்.

**பிரம்மஸ்ரீ க. மு. ஜெகநாதக்குருக்கள்**
ஆகம கிரியாமணி
உரும்பிராய்

# ஆசிச் செய்தி



கொழும்புத்துறைப் பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் அருள்மிகு ஆத்திப்புலம் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்திருந்து கலை, கலாசாரங் களை வளர்ந்து வரும் கொழும்புத்துறை சனசமூக நிலையம், தனது 68வது ஆண்டு நிறைவை நினைவு கூறும் முகமாக சிறப்பு மலர் ஒன்றினை வெளியிடுவதையிட்டு மனமகிழ்ச்சி கொள்கின்றேன்.

தன்னைச் சூழ்ந்துள்ள மக்கள் குழுமத்தை உயர் ஒழுக்க விழுமியங்கள் கொண்டவர்களாகவும் ஒருங்கு சேர்ந்து கூட்டுழைப்பு மூலம் விட்டுக் கொடுப்புடன் கூடிய ஒற்றுமையாக இயங்கும் மனப்பாங்கு கொண்டவர்களாகவும் மாற்றுவதன் மூலம் கிராமத்தின் வளர்ச்சிக்கும் அதன் காப்பிற்கும் உரிய ஓர் அடையாளமாகத் தன்னைத் தகவமைத்துக் கொள்வது சனசமூக நிலையத்தின் உயரிய பணியான இருக்க வேண்டும். கொழும்புத்துறை சனசமூக நிலையம் இதனைச் செவ்வனவே செய்து நிற்கின்றது என்பது எனது எண்ணமாகும். மேலும் இது எல்லாம் வல்ல இறையருளால் தொடரவேண்டும்.

கிராமத்தின் முகங்கள் சிதைக்கப்பட்டு நகர்ப்புறமாக மாற்றப்படும் இவ் வேளையில் சனசமூக நிலையங்களே பொறுப்புடன் நின்று கிராமங்கள் தன் இயல்பிழந்து நகரின் புறமாக மாறாது பாதுகாத்தல் வேண்டும். அதற்கு சனசமூக நிலையத்தின் தொடர் செயற்பாடும் அதனது வரலாற்றை வருகின்ற சமூகம் அறிவதும் முக்கிய பங்களிப்பைச் செய்யும் என்பதை நன்கு புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். அந்தவகையில் சனசமூக நிலையத்தின் வரலாற்றை ஆவணப்படுத்தும் இந்த முயற்சி வரவேற்கத் தக்கதாகும். இதற்கு எல்லாம் வல்ல ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையாரின் அருளாசி கிடைக்க வேண்டி பாதக் கமலங்களைப் போற்றி ஆசி கூறி பிரார்த்திப்போமாக!

"எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க..."

கிரியா ஜோதி பிரம்மஸ்ரீ ச.இராசசேகரக் குருக்கள்
பிரதம குரு
ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோவில்
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் மாநகர சபை
යාපනය මහ නගර සභාව
JAFFNA MUNICIPAL COUNCIL 33111

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். පේදුරුතුඩුව පාර, යාපනය Point-Pedro Road, Jaffna.

அலுவலகம் / කාර්යාලය / Office 021 222 2275 | தொலைநகல் / ෆැක්ස් / Fax 021 222 2334 | இணையத்தளம் / වෙබ් අඩවිය / Internet www.jaffna.mc.me.gov.lk

# மாநகர முதல்வரின் வாழ்த்துச் செய்தி



யாழ் நகரின் கடற்கரை கிராமமான கொழும்புத்துறை கிராமம் ஓர் சரித்திர பெருமை வாய்ந்த கிராமமாகும். வரலாற்று ரீதியாக கொழும்புத்துறை கிராமம் முக்கிய மீன்பிடி துறையை கொண்ட கிராமமாக இருந்து வந்துள்ளது. அதுவுமல்லாமல் அக்கரையிலுள்ள கிராமங்களாகிய பூநகரி, வெட்டுக்காடு, கல்முனை ஆகிய் கிராமங்களை யாழ் குடாநகருடன் பெரிய மரக்கலங்கள் மூலமாக தொடர்புகளை ஏற்படுத்தி வைத்திருந்த பெருமை கொழும்புத்துறையை சார்ந்ததாகும். இன்றைய காலகட்டத்தில் இந்நிலை மாறுபட்டு சகல போக்குவரத்தும் மேற்படி கிராமங்களுக்கு கேரதீவு பாலத்தினூடாக இடம்பெற்று வருகின்றது. இதனால் படிப்படியாக கொழும்புத்துறை கிராமம் தமது பாரிய தோணி ஓட்டும் தொழிலை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது எனலாம்.

கொழும்புத்துறை கிராமமாக இருந்த போதும் அங்கு பாடசாலை ஒன்றும் பல ஆலயங்களும் இருக்கின்றன. இது அங்கு வாழும் மக்களின் ஆன்மீக திறனை வெளிப்படுத்தும் சான்றாக அமைந்துள்ளது.

ஓர் கிராமத்தின் வளர்ச்சியும் உயர்ச்சியும் அக்கிராமத்தில் அமைவு பெறும் பொது நிலையங்களில் தங்கியுள்ளதை நாம் அவதானிக்க முடிகின்றது. இதற்கு அத்தாட்சியாக கொழும்புத்துறை சனசமூக நிலையம் இதற்கு எடுத்துக்காட்டாகும். 07.07.1951 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிலையம் பல தசாப்தங்களைத் தாண்டி இன்று அதன் வளர்ச்சியையும் உயர்ச்சியையும் பிரதிபலிக்கும் சான்றாக 07.07.2019 இல் தமது 68வது வருட நிறைவையொட்டி வெளியிடப்படும் மலரின் பிரசுரிப்பு கொழும்புத்துறை கிராமத்தின் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. எனவே கொழும்புத்துறை வாழ் மக்களுக்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரியப்படுத்துகின்றேன். மேலும் கொழும்புத்துறை கிராமம் வளம் பெற்று வாழ்க என வாழ்த்துகின்றேன்.

**இம்மானுவேல் ஆர்னல்ட்**
முதல்வர்
யாழ் மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

# நிலையத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார், அம்மன், ஐயனார், வைரவர் ஆலயங்களின் அருளைப் பெற்று சீரும் சிறப்புமாக விளங்குவது எமது கொழும்புத்துறைக் கிராமமாகும்.

அன்றைய காலகட்டத்தில் அந்நியரின் வருகையினால் கடற்கரையோர மக்கள் யாவரும் மதமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டனர். ஆனால் எமது ஊரில் சைவசமயம், வீரத்தமிழ் மேலோங்கி இருந்த காரணத்தினால் எமது கிராமம் மட்டும் சைவசமயத்திலிருந்து மாறவில்லை.

எமது கிராமத்தில் 67 வருடங்களைக் கடந்து இன்றும் வேரூன்றிக் காணப்படுவது எமது சனசமூக நிலையமாகும். எமது நிலையமானது எதிர்கால சந்ததியினரின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு எமது முன்னோர்களினால் **1951ம்** ஆண்டு உருவாக்கப்பட்டது. அன்றைய காலமானது இன்றைய காலம் போன்று எதுவித வசதி வாய்ப்புக்களும் காணப்படவில்லை. ஆனாலும் எமது கிராமத்திற்கு ஒரு நிலையம் வேண்டும் என்ற சிறந்த சிந்தனையால் உருவாக்கப்பட்டதே எமது நிலையம் உருவாக்குவதற்கு போதியளவு நிதி இருக்கவில்லை. அதற்கான நிதியை திரட்டுவதற்காக தெருக்கூத்துக்கள், நாடகங்கள் என்பவற்றை ஊரூராக நடத்தி எமது நிலையத்திற்கு தேவையான நிதியை திரட்டி நிலையத்தினை உருவாக்கினார்கள். அன்றைய மனிதர்களின் நல் எண்ணமும் சிந்தனையும் பெற்ற பயனே எமது சனசமூக நிலையமாகும்.

சனசமூக நிலையமானது ஆரம்ப காலத்தில் ஸ்தாபகரில் ஒருவரான க.செல்லையா அவர்களுக்கு சொந்தமான காணியில் ஆரம்பித்து, 1ம் குறுக்கில் தனியாக இயங்கி பின்பு துறைமுக சந்தியில் இயங்கியது. அதன் பின் 3ம் குறுக்குத் தெருவில் ஸ்ரீ சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் நிலையாக நிலைத்து இயங்கி கொண்டிருக்கிறது.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற எமது நிலையத்தின் மகுடவாசகத்திற்கு இணங்க எமது ஊரின் மக்களை ஒன்று திரட்டி கலை கலாசார நிகழ்வுகளை நடத்தி எமது கிராமமக்கள் ஒற்றுமையாக இருக்கவும் எமது பாரம்பரியங்களையும் பாதுகாத்து வருவது எமது நிலையமாகும் .

எமது முன்னோர்கள் அன்றைய காலத்தில் எமது நிலையம் உருவாக துடிப்புடன் செயற்பட்டார்கள். அவர்கள் ஒன்றுபட்டு உருவாக்கிய நிலையத்தினை நாமும் சிறந்த முறையில் செயற்படுத்தினால்தான் எமது தலைமுறைக்குப் பின் வரும் சந்ததியினரும் பேணிக்காப்பார்கள். அதற்கு நாம்தான் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும்.

இதற்காக எமது நிலையத்தினை உருவாக்கிய ஸ்தாபகர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். எமது ஊரின் புலம்பெயர்ந்து சென்ற மக்கள் எமது கிராமத்தை விட்டு வேறு நாட்டிற்கு சென்றாலும் எமது ஊரின் பற்றுக்காரணமாக அன்று தொட்டு இன்றுவரை எமது ஊரிற்காகவும் எமது நிலையத்திற்காகவும் பாடுபடுகின்றார்கள். அவர்களை நாம் எந்நாளிலும் மறந்துவிட முடியாது. அவர்கள் எமது நிலையத்திற்காக ஆற்றுகின்ற பணி பெருமையானது.

எமது நிலையத்திற்காக முன்னோர்கள் சுயநலமின்றி உழைத்தார்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் அவர்களைப் பற்றிய தகவல்களோ / ஆரம்பகாலத்தின் சனசமூக நிலையத்தினைப் பற்றிய வரலாறுகளோ, ஆதாரமாக எதுவும் நம்மிடம் இல்லை. பெரியோர்களின் வாய்மொழிக்கதைகளினூடாக தான் சில தகவல்களை அறிந்துள்ளோம். அதுமட்டுமன்றி எமக்குத் தெரிந்த விடயங்கள் இனிவரும் காலத்தில் வரும் சந்ததியினருக்கு தெரிந்து கொள்வதற்காக வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. எனவே இம்மலரின் மூலம் எமது கிராமத்திற்கான வரலாறு ஒரு ஆதாரமாக எம் மக்களிடையே பிரதிபலிக்கும் என்ற நம்பிக்கையில் இம் மலரினை உருவாக்கியுள்ளோம்.

இவ் மலரானது எமது ஊரின் மற்றும் எமது நிலையத்தின் ஒரு வரலாற்றுச் சுவடாக புதுப்பொலிவுடன் தோற்றம் பெறுகிறது. இதற்கு காரணம் எமது முன்னோர்களாகும். அவர்களின் உழைப்பும் ஊக்கமும் தான் இன்று மலராக உருப்பெற்றுள்ளது.

எனவே எமது மலரானது எமது சமூகத்தில் ஒரு புதிய புரட்சியை ஏற்படுத்தி மிளிரப்போகின்றது என்பதில் ஐயமில்லை. ஆகவே எமது மலர் சிறப்பாக தோன்றுவதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் இம்மலரானது எதிர்காலச் சந்ததியினருக்கு எமது நிலையத்தை வழிநடத்திச் செல்லும் பாதையாக அமையும் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**வி.காங்கேயன்**
தலைவர்
கொழும்புத்துறை சனசமூக நிலையம்

# சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் வாழ்த்துச் செய்தி

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் தனது 68வது ஆண்டு நிறைவை பூர்த்தி செய்வதையிட்டு ஆண்டுவிழாவைக் கொண்டாடு வதுடன் அதன் நினைவாக வெளியிடும் சிறப்பு மலருக்கான வாழ்த்தினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சனசமூக நிலையங்கள் ஒரு பிரதேசத்தின் அல்லது கிராமத்தின் மக்களின் நலன்களைப் பேணுகின்ற அவர்களினை ஒன்றுபடுத்துகின்ற, அவர்களின் ஆற்றல்களுக்கு கௌரவம் வழங்குகின்ற, அவர்களின் கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டு, பொருளாதாரம் போன்ற துறைகளினை மேம்படுத்துகின்ற அமைப்புகளாக திகழ்கின்றன. எமது பிரதேசத்தில் இச்சனசமூக நிலையங்கள் மிக நீண்ட ஆண்டுகளாக நிலைத்திருந்து மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்திருக்கின்றன. இன்றைய நவீன நாகரீக காலமாற்றத்தின் பின்னரும் கூட இப்படியான சனசமூக நிலையங்களின் தேவை வியந்து போற்றப்படுவது அவற்றின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றது.

கொழும்புத்துறை, நெடுங்குளம் போன்ற கிராமங்களின் மேம்பாட்டிற்கான பல செயற்பாடுகளில் கொழும்புத்துறை சனசமூக நிலையம் பெரும் செல்வாக்கு செலுத்தியிருப்பதனை அதன் செயற்பாடுகள் மூலம் அறியமுடிகிறது. இச்சனசமூக நிலையம் இன்னும் பலகாலம் நீடித்து ஓங்கி உயர எனது வாழ்த்துக்களையும் இந்நிலைய வளர்ச்சியில் ஆரம்பகால உறுப்பினர்களிலிருந்து இன்றுவரை செயற்படும் முதியோர்களிற்கும் இளைஞர், யுவதிகளிற்கும், வெளிநாட்டு உறவுகளுக்கும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு ஆண்டு நிறைவு விழா தாங்கி வரும் வரலாற்றை எடுத்தியம்பும் ஆவணமாக விளங்க என் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

**திருமதி கி.சத்தியலோகன்**
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்
யாழ். மாநகர சபை

# வாழ்த்துச் செய்தி



சமூகமொன்றின் நிலைத்திருப்பானது அச் சமூகத்தினது கடந்தகாலத் தகவல்களை பேணிப் பாதுகாப்பதனூடாக அடையப்படுவதாகவுள்ளது. காலத்துக்குக் காலம் இடம் பெற்ற பல்வேறுபட்ட தகவல்கள் ஆவணப்படுத்தப்படுவதனூடாக எமது சமூகம் சார்ந்த எதிர்காலச் சந்ததியினர் தகவல்களை அறிந்து கொள்ளவும் பொருத்தமான திட்டமிடல்களை மேற்கொள்வதற்கும் இது வழியேற்படுத்துகின்றது.

சனசமூக நிலையமொன்றினது சமூகத் தொடர்பில் மிகமுக்கிய செயன்முறையாக அமைவது சமூகத்தினது மேம்பாட்டுக்காக வேலைத்திட்டங்களை தெரிவு செய்து மேற்கொள்வதாகும். இதனூடாக பிரதேச மக்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கையில் வினைத்திறனுள்ள மாற்றங்களை ஏற்படுத்தவல்ல ஒரு நிறுவனமாக சனசமூக நிலையம் தன்னை நிலைநிறுத்தமுடியும்.

சமூக உறுப்பினர்களது பண்பாட்டுக் கலாசார விழுமியங்களைப் பேணல், தலைமைத்துவப் பண்புகளை வெளிப்படுத்திய சமூக உறுப்பினர்களை அறிந்து கொள்ளல் மாண்புடன் செயற்படுகின்ற சமூகம் என்பதனை ஏனையோருக்கு உணர்த்துதல் என்பவற்றினை செவ்வனே மேற்கொள்வதற்கு இந்த நூல் வெளியீடு பெரிதும் பங்காற்றுவதாக அமையும்.

கிராமத்தின் வளர்ச்சியானது ஆற்றலிலே திறனிலே அறிவிலே வேறுபட்ட பல்வேறு தனியன்களின் ஒன்று சேர்க்கையினால் கட்டியெழுப்பப்பட்டதாகும். அத்தகையோரின் செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் ஒன்று திரட்டிய ஆவணமாக நூல்வடிவில் வெளிவரும் போது அது காலத்தால் அழியாத உன்னதமான படைப்பாக சமூகத்தில் நிலைத்திருக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கள் இருக்கமாட்டாது.

இந்த நூல் வெளியீட்டு முயற்சியானது கடந்தகால நிகழ்வுகளின் பதிவுகள் என்பதற்கப்பால் எதிர்காலத்துக்கான உந்துசக்தியாகவும் விளங்கும் என்பதோடு சமூகத்தின் முன்னோக்கிய அசைவுக்கும் பங்காற்றுவதாக இருக்கும்.

நீண்டகாலமாகவே எந்தவிதமான நூல்வடிவிலான ஆவணப்படுத்தலுக்கும் உட்படாது காணப்பட்ட கிராமத்தினது வரலாற்றுப் பதிவுகளை நூல் வடிவில் ஆவணப்படுத்தப்பத்துவதில் தம்மை இணைத்துக் கொண்டுள்ள சனசமூக நிலைய நிர்வாகிகளைப் பாராட்டுவதோடு அவர்கள் பணிசிறக்கவும் இறை ஆசியினை வேண்டுகின்றேன்.

திரு. நடேசு தயாளன்
அதிபர்
கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# நிலையச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



எமது முன்னோர்களால் கட்டி காப்பாற்றப் பட்ட எம் சனசமூக நிலையமானது இன்று ஆலவிருட்சம் போல் தளைத்து ஓங்குவது எம் மண்ணின் பெருமையை பறைசாற்றுவதாக அமைகின்றது. சமுதாயத்தில் சமய, சமூக, கல்வி, விளையாட்டு போன்ற விழுமியங்கள் அழிந்துபோகாமல் பேணும் வகையில் பாரம்பரிய சம்பிரதாயங்களுடன் சித்திரைத் தமிழ் முதலாம் நாள் சித்திரைக் கொண்டாட்ட பெருவிழாவாக இந்நிலையம் கொண்டாடி வருவது தமிழ் கூறும் உலகுக்கே பெருமை சேர்ப்பதாகும்

இம்மலரின் முற்றுமுழுதாக எமது பிரதேசத்தின் வரலாறு, முன்னோர்களின் செயற்பாடுகள், ஆலயம், வித்தியாலயம், சனசமூக நிலையம் மற்றும் பொது அமைப்புக்களின் செயற்பாடுகளை மையமாகக் கொண்டு பரந்துபட்ட அளவில் வெளியீடு செய்வது மிகவும் சிறப்பானதொரு அம்சமாகும் .இவ் மலர் வெள்ளியீடானது தான் சார்ந்த சமூகத்தின் மேம்பாட்டுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக சுடர்விட்டு பிரகாசித்து வரும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமிருக்காது என்பது எனது திண்ணமாகும் .

கடந்தகால அசாதாரண சூழ்நிலையில் வெளிப்பாடாக வீர, வீராங்கனைகளின் வெற்றி தோல்விகளை ஒருமுகப்படுத்தும் மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் இடைநிறுத்தலின் பின்பு மீண்டும் துளிர்விட்டு வளரத்தொடங்கியுள்ள நிலையில் எமது மக்கள் புலம்பெயர் உறவுகளின் பேராதரவு அளப்பரியது என்பது கண்கூடு.

சிந்தைகுளிர்ந்திடும் சித்திரைத் தமிழ் முதலாம் நாள் சித்திரைக் கொண்டாட்ட நாள் சிந்தை குளிர்ந்திடும் 7ம் நாள் ஆடிக்களித்திடும் மலர் வெளியீடு நாள் கலை, கலாசார மாண்புகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் நோக்காக தமிழரின் உரித்தான விளையாட்டுக்களையும், கலை, கலாசார நிகழ்வுகளை பெரு நிகழ்வாக நடந்தேறியதையும் அக்காலத்தில் தை முதல்நாள் அன்றே வருடப்பிறப்பாக ஆங்கிலேயரால் கருதப்பட்டமையினால் தமிழர் தம் வருடப்பிறப்பாகிய சித்திரைத் திருநாளை தெரிவு செய்தமை எத்தனை தூரம் தூரநோக்கானது என்பதை எண்ணிப் பார்க்கலாம்.

எமது பரம்பரையின் மாண்பு குறையாமல் வழமையான அனைத்து செயற்பாட்டுக்களையும் இம்முறையும் சிறப்பாக செய்துள்ளோம் என நம்புகின்றேன்.

குறுகிய கால அவகாசத்தில் மேற்கொள்ளப்பட்ட இம்மலர் வெளியீடு முயற்சியானது எமது கிராமத்தை பொறுத்தவரை மிக முக்கியத்துவம் வாய்ந்த ஆவணமொன்றாகவே கருத இடமுண்டு என்பது வெள்ளிடைமலை. அகவை அறுபத்தியெட்டில் தான் உதிர்த்த நன்நாளில் கிராமத்தின் வரலாற்றையும் உள்ளடக்கிய மலராக மலர்ந்து வெளியீடாக வெளிவந்து கொண்டாட்டமாக கொண்டாடவிருக்கும் இத்தருணத்தில் நிலைய செயலாளராக இருந்து செயலாற்றுவதிலும் எனது வாழ்த்து செய்தியை வழங்குவதிலும் உளம் நிறைந்த மகிழ்வை கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

**இ.விஜயகுமார்**
செயலாளர்
கொழும்புத்துறை சனசமூக நிலையம்

# நிலைய பொருளாளரின் வாழ்த்துச் செய்தி



எமது கிராமத்தின் வளர்ச்சியை எதிர்நோக்கி செயற்பட்டுக் கொண்டிருக்கும் சமூக அமைப்புக்களான ஆலயம், வித்தியாலயம், நிலையம் மற்றும் நிறுவனங்கள் போன்றவற்றின் வரலாற்றை மலர் உருவில் வெளியீடு செய்யப்படுவதையிட்டு மகிழ்வு கொள்கின்றேன்.

பல தசாப்தங்கள் நிலைத்திருந்த நம் முன்னோர்களுடைய செயற்பாடுகள் சேவைகளை பரம்பரை பரம்பரையாக எடுத்துரைப்பதுடன் எதிர்காலச் சந்ததியை நற்பிரஜையாக உருவாக்கம் பெற ஊக்குவிக்கும் என்பது ஐயமில்லை. பொருத்தமான வகையில் வேண்டிய நேரத்தில் இம் மலர் வெளியீடு முயற்சியானது வரவேற்கத்தக்கதும் பாராட்டுக்குமுரிய விடயமாகும். நாம் எங்கே இருக்கின்றோம் என்பதை விட எவ்வளவு சந்தோசமாக இருக்கின்றோம் என்பதே மேலாகும். ஒரு கிராமத்தின் வளர்ச்சியும் அதன் அபிவிருத்தியும் அக் கிராம மக்களின் கைகளிலே தங்கியுள்ளது.

அறுபத்தியெட்டாம் ஆண்டு சித்திரைக் கொண்டாட்ட விழாவின் போது மனம் சலியாது பெரும் நிதியுதவி மற்றும் அன்பளிப்புக்கள், அனுசரணைகள் வழங்கிய கொழும்புத்துறையூர் உள்ளூர், வெளியூர் புலம்பெயர் சமூக உறவுகள் அனைவருக்கும் இச்சமயத்தில் நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கின்றேன்.

விழிப்படைவார்களேயானால் நிச்சயம் உயர்வும் வெற்றியும் உண்டு. கல்வி, கலை, கலாசாரம், சமய விழுமியங்கள், விளையாட்டு பாரம்பரியங்கள், தனித்துவம் என்பவற்றில் பயணித்து மங்கிடா புகழை அடைந்திட வேண்டுமென்றும், அகவை அறுபத்தியெட்டில் மலர் வெளியீட்டினையும் நிலைய பொருளாளர் என்ற வகையிலும் வாழ்த்துச் செய்தியாக விடுப்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

**மா.கமலநாதன்**
பொருளாளர்
கொழும்புத்துறை சனசமூக நிலையம்

# வாழ்த்துச் செய்தி





யாழ்ப்பாணத்திலே கொழும்புத்துறை என்னும் ஊரிலே தென்னஞ்சோலைகளின் காற்றின் இசையோடு கடல் அன்னை அருகிலிருக்க முன்னால் பாடசாலையும் அருகில் முன்பள்ளியும் உப்புக்குளம் சந்திரசேகரப் பிள்ளையாரின் துணையோடு அமைந்துள்ளது எங்கள் கொழும்புத்துறை சனசமூக நிலையம்.

எங்கள் சனசமூக நிலையம் 67 ஆண்டுகளைச் சிறப்பாக கடந்து இன்று 68வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. இச்சனசமூக நிலையத்தின் செயற்பாடுகள் சொல்லில் அடங்கா அளப்பெரியவை. கல்விசார் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், மாணவர்களின் மாலை நேர வகுப்புக்கள், வைத்திய பரிசோதனை முகாம்கள் போன்றவற்றை சிறப்பாக நடாத்தி மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்திருக்கின்றது.

குறிப்பாக சித்திரைக் கொண்டாட்ட விழாவிலே கல்வி சார் போட்டிகளாக பேச்சு, பொது அறிவு, கட்டுரை, தேவாரம் போன்றவற்றை நடத்தி மாணவர்களை ஊக்குவித்து அவர்களின் ஆற்றலை மேம்படுத்துகின்றது. விளையாட்டுப் போட்டிகளிலும் அவர்களுக்கு தேவையான போட்டிகளை வழங்கி வழிநடத்துகின்றது. மேலும் கலைநிகழ்வு நடத்தி அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்து அவர்களின் வாழ்க்கைப் பாதைக்கு ஓர் களமாக விளக்குகின்றது இச்சனசமூக நிலையம்.

அடுத்து முன்பள்ளியை எடுத்துக் கொண்டால் விளையாட்டு விழா, சிறுவர் தினம், ஆசிரியர் தினம், நவராத்திரி, மாணவர் பிரிவு உபசார விழா போன்றவற்றை சிறப்பாக நடத்துகின்றது. இம் முன்பள்ளியில் பல்வேறு நிறுவனங்கள், அமைப்புக்கள் போன்றவற்றில் இருந்து உதவிகள் கிடைக்கப் பெறுகின்றது. இன்னும் சிறார்களின் வரவு அதிகரித்தால் இச் சனசமூக நிலையத்தின் கீழ் நடத்தப்படும் இம் முன்பள்ளியும் வெற்றிகரமான ஓர் பாதையில் செல்ல வைக்கும் எமது சனசமூக நிலையம்.

இவ் ஊரில் எடுத்துக்காட்டாக திகழும் சனசமூக நிலையம் இன்றும் அளப்பெரிய சேவைகள் செய்து மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்து, தங்களது சேவை இன்னும் சிறப்புற செய்ய வாழ்த்துகின்றோம்.


**திருமதி நீ.யுவராஜ்**
**ஈ.அஜந்தா**
முன்பள்ளி ஆசிரியர்கள்
கொழும்புத்துறை சனசமூக நிலையம்

# கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார், அம்மன் ஐயனார், வைரவர் ஆலய நிர்வாகசபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



கொழும்புத்துறை என்ற கிராமத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் இயற்கை வளங்களாகிய கடல், தென்னந்தோப்புக்களுடன் கூடிய சோலைகளும் வயல், நாலாப்பக்கமாக சூழ்ந்துள்ள சைவத்தலங்களும் இன்னும் பல ஒருங்கே அமையப் பெற்று இவையாவும் கொழும்புத்துறைக் கிராமத்தை அழகுபடுத்திக் கொண்டிருக்கின்றன. அப்படி இயற்கைச் சூழலினூடாக சுவாசித்துக் கொண்டிருக்கும் இக்கிராம மக்களுக்கு அறிவுப் பொக்கிஷமாக விளங்கிக் கொண்டிருக்கும் எமது சனசமூக நிலையத்தின் வரலாற்றை எதிர்காலச் சந்ததியினர் தெரிந்து கொள்ளவேண்டுமென்று ஓர் வரலாற்றுப் புத்தகமாக அச்சிட்டு வெளியிடுகிறார்களென்றால் பாராட்டப்பட வேண்டியவர்களாக்கப்படுகின்றார்கள். மென்மேலும் இவ் நிலையத்தின் வளர்ச்சிக்கு இனி எதிர்காலத்தில் வரும் நிர்வாகமும் உந்துகோலாக விளங்கவேண்டுமென்றும் ஒற்றுமையுணர்வுடன் வாழவேண்டுமென்று ஸ்ரீ சந்திரசேகரரை வேண்டுகின்றேன்.

வளர்ச்சியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் சனசமூகத்தின் வரலாற்றை புத்தகமாக வெளியிடுவதை பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**வி. மனோகரன்,**
தலைவர்,
கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார்,
அம்மன் ஐயனார், வைரவர் ஆலயம்.
தலைவர்,
கொழும்புத்துறை முதியோர் சங்கம்.

# வாழ்த்துச் செய்தி



கொழும்புத்துறை சனசமூக நிலைய 68வது ஆண்டு நிறைவு விழா நிகழ்வின் மலர் வெளியீட்டில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சனசமூக நிலையமானது 1951ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, படிப்படியாக முன்னேறி இன்று பாரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" எனும் மகுட வாசகத்திற்கு அமைய எமது இளைஞர்கள் தமது பங்களிப்பினை முன்னின்று செய்து வருவது மிகச் சிறப்பானதாகும்.


சனசமூக நிலையமானது மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வகுப்புக்கள், சாதாரண தர பரீட்சைக்கான வகுப்புக்களை நடத்தி எமது மாணவர்கள் கல்வியில் முன்னேற பெரிதும் உதவியாக இருந்தமை, மின்சாரம் இல்லாத காலத்தில் கூட இரவு நேர வகுப்புக்களை ஒளி வசதியுடன் வழங்கி மாணவர்கள் கல்வியில் உயர பெரிதும் உறுதுணையாக இருந்தது வரவேற்கத்தக்கது.

மேலும் ஒவ்வொரு வருடமும் "சித்திரைக் கொண்டாட்டம்" சிறந்த முறையில் நடப்பதும் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள் கலைநிகழ்வுகள் நடைபெறுவதும், மாணவர்களுக்கான கல்வி சார் போட்டிகள், விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறுவது எம் ஊர் மக்களின் ஒற்றுமையையும் சமூக பண்பாடுகளையும் வெளிப்படுத்துகின்றன. இவ்வாறான சனசமூக நிலையம் எமக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். இதற்கு எம் மக்களும் இளைஞர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு மேலும் சனசமூக வளர்ச்சியடைய முன்னிற்போம் எனக்கூறி எல்லாம் வல்ல ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையாரின் ஆசியை வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி. வனிதா விக்கினேஸ்வரன்**
தலைவி
J/62, மாதர்கிராம அபிவிருத்தி சங்கம்

# கிராம அபிவிருத்திச் சங்க தலைவரின் வாழ்த்துச் செய்தி

'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'



சனசமூக நிலையமென்பது ஒரு ஊர் வளர்ச்சியின் பிரதிபலிப்பாகும். இந்நிலையமானது எவ்வாறு செயற்படுகின்றதோ அது அச்சமூகத்தின் வெற்றிப்படிகளாகவே கருதப்படும். இவ்வருடம் எமது கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் ஆண்டு விழாவை நினைவு கூரும் வகையில் இம் மலர் வெளியீட்டு முயற்சியானது அனைவராலும் பாராட்டுதற்குரியதாகும்.

அந்தவகையில் இம் மலர் வெளியீட்டின் மூலம் நவீன தொழில்நுட்ப உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் இக்கிராம வரலாற்றுப் பாரம்பரியங்களை தெளிவுபடுத்துவதோடு மட்டுமன்றி இதனை அழியவிடாமல் அறியத்தரும். ஒரு வரலாற்றுப் பொக்கிஷமாகவும் திகழும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

வேண்டிய நேரத்தில் பொருத்தமான வகையில் இம் முயற்சியில் ஈடுபட்ட தற்போதைய நிலைய அங்கத்தவர்கள் அனைவரையும் பாராட்டுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

**க.சரவணபவானந்தன்**
தலைவர்
கிராம அபிவிருத்திச் சங்கம்
J/62, கொழும்புத்துறை

# வாழ்த்துச் செய்தி

'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'





68வது ஆண்டில் 2019ம் வருடத்திற்கான நிலைய நிர்வாகிகளுடன் விளையாட்டுக்கழகம் சார்பாக சேர்ந்து இயங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்றோம். மலர் வெளியீட்டினையொட்டி விறுவிறுப்பான துடுப்பாட்டம், மகிழ்வான கரபந்தாட்டம் இத்தனைக்கும் தமிழர் பாரம்பரிய விளையாட்டான தாச்சி அனைத்து விளையாட்டுக்களுடன் மரம் நடுகை மற்றும் மலர்வெளியீடு என்பன மிகவும் வேண்டத்தக்கதான விடயம் ஒன்றே.

ஏற்கனவே இல்ல பிரிவுகளுடன் விளையாட்டுக்கள் நடைபெறுவதனால் இவ் விளையாட்டு நிகழ்வை ஒரு பொது நிகழ்வாக எடுத்துக் கொண்டு விளையாடியது மிகவும் பாராட்டப்பட வேண்டி விடயம். இத்தருணத்தில் 68 ஆவது ஆண்டு நிறைவு விழா முழுமைபெறும் வேளையில் இவ் மலர் வெளிவருவதையிட்டு விநாயகர் விளையாட்டுக் கழக நிர்வாகம் சார்பாக வாழ்த்துவதில் பெருமகிழ்வு கொள்கின்றோம்.

| | | |
|---|---|---|
| ஸ்ரீ. சுபாங்கன் | க.கபிலன் | ச.ஜனந்தன் |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

விநாயகர் விளையாட்டுக்கழகம்


# வாழ்த்துச் செய்தி



வருவார்கள், போவார்கள் மனதில் நின்றவர்கள் யார்? ஒரு எண்ணத்தினை கல்விமான்கள் ஆன்மீகத் தலைவர்கள், அறிஞர்கள், போன்றோரின் ஆசி வாழ்த்துச்செய்தி மூலம் செய்ய வேண்டியதை அந்தநேரத்தில் செய்யும் வல்லமை இறைவன் கொடுத்த வரமேன்றே கருதுகின்றேன். இம் மலர் மக்களால் விரும்பி ஏற்கப்படும் ஆவணமொன்றாக எல்லோர் உள்ளத்திலும் இடம்பிடிக்கும். ஊரின் மகிமை, அதற்கு மெருகூட்டும் ஆலயங்களின் அமைப்பும் தொண்மையும் இவை அனைத்தும் ஒருங்கே பெற்ற நிலையத்தின் அமைவு எல்லாம் இறைவன் கொடுத்த செயலாக எண்ணுகின்றேன். குறிப்பாக ஒவ்வொரு அமைப்புக்களின் அமைவுகள் செயற்பாடுகள் அனைத்தும் பொருத்தமான நேரத்தில் வெளிக்கொணரும் ஒரு ஆவணமாக மலரவிருக்கும் இம்மலரை பார்க்கின்றேன். குறிப்பாக நிலையத்திற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் ஒரு தாய் மக்க்ள் உறவு போல மிளிர்ந்து கொண்டிருப்பது கண்கூடு.

**த.சிவகுணதாசன்**
சங்கத்தலைவர்
கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

# வாழ்த்துச் செய்தி



கொழும்புத்துறையில் **07.07.1951** இல் கொழும்புத்துறை மக்களால் தெரிவு செய்யப்பட்ட குழுக்கள் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட கொழும்புத்துறை சனசமூக நிலையம் மண்ணின் மக்களை ஒன்றிணைக்கும் ஒரு அமைப்பாக காணப்படுகிறது.

இவ் நிலையம் **68** வருடகாலமாக தமது சேவையை மக்களுக்கிடையே பாரபட்சம் பார்க்காமல் வழங்கி வருகிறது. இதே போல் சகல மக்களும் உலகளாவிய விடயங்களை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் மலர்வெளியீடு சேவையை மேற்கொண்டு வருவது கைதட்டிப் பாராட்டக் கூடியது.

இதைப் போன்றே நூற்றாண்டுகள் கடந்தும் தமது சேவையை வழங்கி கொழும்புத்துறை கிராமத்தை முன்னிலைப்படுத்தவேண்டும் என் J/61 கிராம அபிவிருத்திச் சங்கம் வாயிலாக வாழ்த்தி நிற்கின்றேன்.

வே. வீரகுமார்
தலைவர்
J/61, நெடுங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம்

# கிராம சேவை அலுவலரின் வாழ்த்துச் செய்தி

கிராமத்தின் புராதன மகிமைகளை அனைவரும் அறிந்து கொள்ளக்கூடிய வகையிலும் அதனை ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கிலும் நிலைய நிறுவுன நாள் நிகழ்வுடன் மலர் வெளியீடும் இடம் பெறுகின்றது. அத்துடன் இம்மலரின் கிராமத்தின் சிறப்புக்களை கேள்வி ரீதியாக சிலர் அறிந்திருப்பினும், பலர் அறியும் வண்ணம் ஆலயம், வித்தியாலயம், நிலையம், முன்னோர்களின் செயற்பாடுகள். சிறுகைத்தொழில்களின் மகத்துவம் பற்றிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிப்பது பெருமைப்படத்தக்க விடயமாகும்.

சைவத்திற்கும், சமூகத்திற்கும் அளப்பெரிய சேவைகளை ஆற்றிய பெரியோர்களின் விவரங்கள், படங்களாகவும், அறிக்கைகளாகவும் பேணப்பட வேண்டியது அவசியமாகும்.

நாம் படிக்க படிக்க நம்மிடம் இருக்கும் அறியாமையை அறிந்து கொள்கின்றோம். ஆற்றலை விட ஆர்வமே வெற்றிக்கு அடிப்படைக் க்ாரணமாகும் எனக் கூறிநிலையத்தின் அகவை அறுபத்தியெட்டில் நிலைய நிறுவுன தின நிகழ்வும் மலர் வெளியீடும் காலத்தின் தேவையென உணர்ந்து இம் முயற்சிதனை மேற்கொண்ட நிலைய நிர்வாகத்தினருக்கு எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**H. சேந்தன்**
கிராமசேவையாளர்
J/62 கொழும்புத்துறை

# துண்டி இந்து மயானம், இந்து இடுகாடு பரிபாலன சபை
# செயலாளரின் வாழ்த்துச் செய்தி

துண்டி இந்து மயானம், மாதர்காடு (சின்ன சுடலை) இரண்டும் சவத்திற்கு தொண்டு செய்யும் இடமாக மூதாதையர் காலம் தொட்டு கொழும்புத்துறை பகுதியில் அமைந்திருக்கினறது. சிவம், சவம் இரண்டிற்கும் தொண்டு செய்வது இறை பணிக்கு சமமானதாக கருதப்படுகின்றது.

காலப்போக்கில் துண்டி மயானம் - கொழும்புத்துறை துண்டி இந்து மயானமாகவும், மாதர்காடு - இந்து இடுகாடு பரிபாலனசபையாகவும் மாற்றம் கண்டது எனலாம். காலங்களிலும் போர்ச்சூழல் காலத்திலும் அதற்கு பின்னைய காலத்திலும் அழிந்தும், சிரழிந்த நிலையில் காணப்பட்டது.

இந்நிலையில் எமது கிராம அமைப்பான சனசமூக நிலையம் மேற்கொண்ட முன் முயற்சியின் பயனாக இரண்டு மயானங்களின் நிர்வாகத்தை பொதுக்கூட்டம் மூலம் ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து, சீரான சபையாக தனது நிர்வாக கட்டமைப்பின் மூலம் செயற்பட்டு வருகின்றது.

கிராமத்தின் ஒரு வலுவான சமூக அமைப்பே சனசமூக நிலையமாகும். அவ் அமைப்பின் பேரால் நிலைய உருவாக்கம், பொது அமைப்புக்களின் செயற்பாடுகள் பற்றியும், கிராமம் சார்ந்த ஏனைய விடயங்களையும் உள்ளடக்கியதான வரலாற்று ஆவணமாக மலர் வெளியீடு செய்வது இக்கால கட்டத்தில் சாலப்பொருத்தமாக அமைகின்றது. நமது மரபு ரீதியான தகவல்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு மலர் வெளியீடுகள் அவசியமான ஒன்றாகும்.

இது தற்போதைய காலத்தின் கட்டாய தேவையாகவும் உள்ளது. இதனை முன்னின்று செயற்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இவ்வாறான ஒத்துழைப்புக்கள் மூலம்தான் சமூக சேவையாளர்கள் மதிக்கப்பட கூடியவர்களாக ஆகின்றார்கள்.

இதனை ஏனைய சமூகத்தொண்டு நிறுவனங்களும் கிராமம் சார்ந்த தகவல்களை ஆவணப்படுத்த முன்வரவேண்டும்.

தற்போதைய காலத்தின் கட்டாய தேவையாகவுள்ள இம்மலர் வெளியீடானதை மேற்கொள்ளும் நிலைய நிர்வாகிகளுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மன மகிழ்வடைகின்றேன்.

**இ.விஜயகுமார்**
செயலாளர்
துண்டி இந்து மயானம்
இந்து இடுகாடு பரிபாலனசபை
கொழும்புத்துறை.

# நன்றி கூறுகின்றோம் ...

எமது மலரில் பிரசுரிப்பதற்கு தகவல்களை வழங்கி ஊக்கப்படுத்திய நண்பர்களுக்கும் கட்டுரை, கவிதை ஆக்கங்களை வழங்கியவர்களுக்கும் குறிப்பாக கிராமத்தின் வரலாற்று தகவல்களையும் புகைப் படங்களையும் தந்துதவியவர்களுக்கும் இம் மலரை அச்சிட அனுசரணை வழங்கிய விளம்பரதாரர்களுக்கும் அச்சிட்டு தந்த மெகா பதிப்பகத்தினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மலர்க்குழு

# இதழுக்குள்


| விடயம் | பக்கம் |
|---|---|
| கொழும்புத்துறை கிராமச் சரித்திரம் | 1 |
| எங்கள் கொழும்புத்துறை ஊரே | 17 |
| நினைவில் நின்றவை | 20 |
| அழியா நினைவுகள் | 24 |
| கொழும்புத்துறை சனசமூக நிலைய..... | 26 |
| காலத்தால் அழியா நினைவுகள் | 28 |
| வாழ்வின் சில பதிவுகள் | 30 |
| எமது கிராமத்தின் வளர்ச்சிக்கு ஒற்றுமையே பலம் | 32 |
| கரபந்தாட்டம் | 34 |
| எமது சனசமூக நிலையம் | 36 |
| சீர்தூக்கும் துறையூர் | 38 |
| என் உள்ளத்திலிருந்து | 40 |
| இன்றைய கொழும்புத்துறை | 41 |
| ஊரோடு | 43 |
| நாடகமும் நானும் | 44 |
| Osteoporosis | 46 |
| யாவரும் நலம் | 50 |
| உயர்தரப் பரீட்சைக்கு பின்பான பயணம் | 56 |
| வாழ்வினை எழுதுதல் | 58 |
| விடியலுக்காக | 62 |
| கனவுகளின் அறுவடை | 63 |
| வணிக வங்கிகள் | 64 |
| மனித செயற்பாடுகளும் இயற்கையும் | 67 |
| மனம் தொட்ட வரிகள் | 69 |
| தமிழர் பண்பாட்டில் மறந்தவையும் நலிந்தவையும் | 70 |
| பசுமைத் தாயகம் நோக்கி | 71 |
| சுற்றாடலும் நாமும் | 73 |
| செவ்வானம் | 74 |
| ஒழுக்கம் உயர்வு தரும் | 75 |
| பத்திரிகை | 76 |
| எமது கிராமத்து வாழ்க்கை | 77 |
| விஞ்ஞானத்தின் விந்தையும் நவீன...... | 78 |
| நிலைய நிர்வாகத்தில் கடமை புரிந்தவர்கள் | 81 |
| போட்டி அனுசரணையாளர்கள் | 83 |

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# கொழும்புத்துறை
# கிராமச்சரித்திரம்



மலர்க்குழு

எழில் பொங்கும் கடல்வளமும் தென்னை வளங்களுடன் இயற்கை அழகு பெற்ற எமது கொழும்புத்துறை எனும் கிராமமானது ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் அம்மன் ஐயனார், ஸ்ரீ முத்துமாரி அம்மன், மற்றும் வைரவர் ஆலயங்களின் அருட்கடாட்சத்தோடு செழிப்பாக விளங்கிவருகிறது.

நீலத்திரை கடலால் சூழப்பட்ட நெய்தல் சார்ந்த வணிக துறைமுகமாக விளங்கிய கொழும்புத்துறை கிராமமானது கி.பி.75 ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி. 115ஆம் ஆண்டு வரை வெடியரசன் கிழக்குலகில் மணியென நின்று நிலைத்த ஈழத்திருநாடாம் இலங்காபுரியில் வடநிலத்தில் செந்தமிழ் மொழியில் சேர்ந்த தமிழ்ச்சங்கப் புலவர்கள் வழிவந்த நாகர் இன மரபினரின் “முக்குளி” நாகர்களின் தலைவனாக 2ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆட்சி புரிந்தான்.

இவர் ஆண்ட காலத்தில் கிரேக்கர்களும், உரோமர்களும், அரேபியர்களும் மற்றும் மேலைத்தேசத்தவர்களும் எமது கொழும்புத்துறை துறைமுகத்திற்கு வந்து இக்கடல் வளமான முத்துக்களையும் சங்கில் அறுத்த வளையல்களையும் நாகமணிகளையும், யானைத்தந்தங்களையும் பெற்று அதற்கு பண்டமாற்றாக பொன், இரும்பு, மட்பாண்டங்கள், வெள்ளி நாணயங்கள், உயர்தர மதுபானங்கள், ஈயம், தகரம் விளையாட்டுப் பொருட்கள் போன்றவற்றையும் வழங்கி சிறந்த வணிகத் துறைமுகமாக கொழும்புத்துறை துறைமுகம் விளங்கியது.

கொழும்புக்குச் செல்லும் பிரயாணிகளும் பொருட்களை ஏற்றி இறக்கியத்துறை என்பதால் கொழும்புத் துறை என அழைக்கப்பட்டது. கொழும்புத்துறை இடைக்கால பெயரானாலும் “மணலியம் துறை” என்பது இதன் ஆதிப் பெயராகும். யாழ்ப்பாணத்தை ஆண்ட இறுதி மன்னனான சங்கிலியன் எங்கள் துறைமுகத்தில் வரி அறவிட்டுள்ளான் என்பது சங்கிலியன் வரலாறுகளில் இருந்து புலனாகிறது. இதிலிருந்து சங்கிலிய மன்னன் காலத்திற்கு முற்பட்டது எமது கிராமம் என்பது புலனாகின்றது.




இங்கு சிறந்த கப்பலோட்டிகள் வாழ்ந்தனர். சிங்கப்பூர், மலேசியா, பர்மா, இந்தியா போன்ற நாடுகளுக்கு தமது சிறந்த மரங்களால் செய்யப்பட்ட வத்தைகள் பெருமளவில் வர்த்தகம் செய்யப்பட்டது என்பதனை அமரர் சங்கிலி வேலுப்பிள்ளை என்பவர் 20 ஆம் நூற்றாண்டு வரை இவ்வணிகம் செய்தமையால் புலனாகிறது.

கொழும்புத்துறையில் பெரும் கப்பலோட்டி மாலுமியாக செயற்பட்ட

அமரர் சின்னையா சிவலோகநாதன் எமது ஊரின் பெருமையை பறைசாற்றுகின்றார்.

பிற்காலத்தில் ஆக்கிரமிப்புக்காரரினால் எங்கள் துறைமுகம் ஆக்கிரமிக்கப் பட்டது. அதற்கு சான்றாக ஒல்லாந்தரின் ஓய்வுபெறும் இடமாகவுள்ள வங்களா இன்றும் அத்திவார நிலைகளுடன் காணப்படுகிறது. (ஜோன் ஆசிரியர் யாழ்ப்பாணச்சரித்திரம் பக்கம் 6 ஈழநாடு, ஈழமுரசு பத்திரிக்கை, வெடியரசன் வரலாற்றுநூல்)

## ஆத்திப்புலம் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயம்



ஆத்திப்புலம் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயமானது ஐயனார் கோயிலின் தோற்றத்திற்கு பின்பே உருவானது. பிள்ளையார் கோயிலானது "முத்தம்மா" என்ற விநாயகர் அடியார் பெருங்கதை விரதம் அனுஷ்டித்து அதனை நிறைவு செய்வதற்காக காப்பினைக் கழற்றுவதற்கு நெடுங்குளத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்திற்கு சென்றுள்ளார். ஆலயத்தில் பூசை செய்யும் பூசகர் கோயில் கதவை பூட்டி சென்றுள்ளார். இதனால் மிகுந்த கவலையடைந்த அம்மையார் என்ன செய்வதென்று அறியாமல் நடந்து வந்தவேளை பிள்ளையாரின் அருளால் நமது உப்புக்குளத்தில் நீராடி துரையப்பா சுந்தரம்பிள்ளை என்பவரின் காணியில் அமைந்துள்ள அரசமரத்தின் கீழ் பிள்ளையாரின் வடிவிலான கல் விக்கிரகத்தை வைத்து வழிபாடு செய்து தனது பெருங்கதை விரதத்தினை பூர்த்தி செய்தார் என்பது மரபு ரீதியான எமது ஆலயத்தின் வரலாறு ஆகும். அதன் பின்பு ஊர்மக்கள் முன்வந்து ஆலயம் அமைக்க வேண்டும் என்ற சிந்தனையால் உருவானதே எமது ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயமாகும்.

அதன் பின்பு நமது முன்னோர்களினால் ஆலயத்திற்கு மூலஸ்தானம், அர்த்தமண்டபம், கோயில் தீர்த்தக்கிணறு என்பன பொலிகல்லினால் அமைக்கப் பட்டது.

அதன்பின்பு எங்களுக்குத் தெரிந்தளவில் அமரர் சங்கிலி வேலுப்பிள்ளை காலத்திலும் கோயில் முன்னேற்றம் பெற்றது.

அதன்பின்பு கோயில் பராமரிப்பு முறை பஞ்சகர்த்தா நடைமுறையில் காணப்பட்டது.

அவ்வுறுப்பினர்கள் :

தலைவர் -அமரர் சி.பொன்னுச்சாமி
செயலாளர் - அமரர் சி.நடராசா
பொருளாளர் - அமரர் த.பரமசாமி
காணிப் பொறுப்பாளர் -
அமரர் சி.கணபதிப்பிள்ளை
தீர்வைப் பொறுப்பாளர் -
அமரர் பொ.நடராசா

பஞ்சகர்த்தாவில் தலைவராக இருந்த அமரர் சி.பொன்னுச்சாமி நமது ஊரில் உள்ள பிள்ளையார் மற்றும் அம்மன் ஐயனார் ஆலயங்களின் வரலாற்றில் இக்கட்டான மூன்று கால கட்டங்களில் 1959 மாசி 2ம் நாள் பிள்ளையார் கோயிலில் காலை பூசையின்றி கதவு மூடப்பட்டிருப்பதை அறிந்து வேறு சிலரின் அனுசரணையுடன் அன்று பிராயச்சித்த அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து நித்திய பூசையும் நடப்பதற்கு ஒழுங்குகளை செய்வித்தார். அத்துடன் அன்றைய

காலத்தில் ஐயனார் கோயிலின் மிருகபலியை நிறுத்துவதற்கு த.தியாக ராசாவுடன் பக்கபலமாக நின்று 1960 ஆம் ஆண்டு மிருகபலியை நிறுத்தி னார்கள். அதுமட்டுமின்றி 1968 – 1971 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சில முன்னோர்களின் நிர்வாகத்தினால் அரைகுறையாக விடப்பட்ட ஐயனார் அம்மன் கோயிலின் திருப்பணியை செவ்வனே செய்வித்து 1974 ஆம் ஆண்டு ஆவணியில் கும்பாபிஷேகத்தை நடத்தி முடித்தனர். அமரர் சி.பொன்னுச்சாமி அவர்கள் நிர்வாக சபைகள் சிறப்பாக இயங்காத காலத்தில் தனித்து நின்று கோயில் கருமங்களை குறையின்றி செய்து முடித்தார். (அமரர் சி.பொன்னுச்சாமி அவர்களது நினைவுமலரிலிருந்து எடுக்கப்பட்டது.) அதன் பின்பு வந்த அமரர் ஆ.தங்கவேல் அவர்களும் சிறப்பாக நிர்வாகத்தை கொண்டு நடத்தினார். பின்பு 1981 ஆம் ஆண்டு சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் நிர்வாகத்தின் அமரர் கா.யோகசுவாமி தலைவராக செயலாள ராக அமரர் செ.இராசரத்தினமும் பொருளாளராக அமரர் சி.வரதராசாவும் இருந்தனர். அமரர் கா.யோகசுவாமி அமர ரானதைத் தொடர்ந்து நிர்வாகத்தின் மூன்று பதவிகளையும் செயலாளர் அவர்கள் பொறுப்பேற்று, ஊர் மக்களின் ஆதரவுடன் கும்பாபிஷேகத்தை நடத்தி முடித்தார்கள். அமரர் சி.கந்தவனம், அமரர் ஆ.செல்வரத்தினம் அவர்களும் அவர்களுக்குப் பின்பு வந்த தலைவராகிய அமரர் த.தியாகராஜா அவர்களின் காலமானது எமது கோயிலின் பொற்காலம் என்று கூறுவதில் ஐயமில்லை.

யாழ் உதவி அரச அதிபர் திரு.கா.மாணிக்கவாசகர் அவர்களால் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயம் நிர்வாகத்திற்கு பொறுப்பாக 1987 ஆம் ஆண்டு ஒரு அறங்காவலர் குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் தலைவ ராக அமரர் த. தியாகராசா அவர்களும் உறுப்பினர்களாக க.தில்லைநாதர், சி.அருளம்பலம், சி.ஆறுமுகம் மற்றும் அமரர் க.சிவசம்பு ஆகியோரும் யாழ் செயலக ஆலோசனையில் செயற் பட்டனர். மேற்படி அறங்காவற் குழுவினருடன் ஒன்று சேர்ந்து கோயிலின் தேவைகள் நிறைவேற்றப்படாமல் காணப் பட்டதை தெரிந்து கொண்டு அவற்றை அமரர் த.தியாகராசா நிறைவு செய்தார்.

- சித்திரத்தேரும் அதற்கான அமைவிடம்
- இராஜ கோபுரம் அமைத்தல்
- கோயில் வில்லு மண்டபம் அமைத்தல்
- அன்னதான, திருமண மண்டபம் அமைத்தல்
- பஞ்சமுக பிள்ளையாருக்கு விக்கிரகம் கோபுரம் அமைத்தல்
- பரிவார தெய்வங்களுக்கு தனிக்கோயில் அமைத்தல்
- கோயிலை சித்திர வரைபுகளுடன் அழகுபடுத்தல்.

இவர் 1993, 1994 ஆம் ஆண்டுகளில் இராஜகோபுரம் அமைக்க முழுநேர கண்காணிப்பாளராக தொழிற் பட்டார். தேர் திருவிழாவின்போது பஞ்சமுக பிள்ளையாராலே மேற்கொள்ளப் படுவதாகும். எனவே பஞ்சமுக பிள்ளை யார் அமைப்பை ஏற்படுத்தி விநாயகரின் எழுந்தருளலை விஸ்தரிக்கும் முகமாக விக்கிரகத்தினை செய்வித்தார். கோயிலின் முழுத்தன்மையை உருவாக்குத் தலைவராக விளங்கியவர். (அமரர் த.தியாகராசா அவர்களில் நினைவு மலரிலிருந்து)

இதனுடன் கோயில் பரிபாலனம் பற்றி யாப்பு எழுதி வைத்தார். பின்னர் நிர்வாகத்திற்கு வந்த தலைவராகிய அமரர் நா.இராசு அவர்களின் காலத்தில்

பிள்ளையார் கோயிலின் பிரதான காண்டாமணியை உள்ளூர் மற்றும் புலம்பெயர்ந்தோர் நிதியுதவியுடன் உருவாக்கினர். அதன்பின்பு யுத்த காலத்தினால் சேதமடைந்து காணப்பட்ட அம்மன் ஐயனார் கோயிலை வில்லு மண்டபம், வசந்த மண்டபம் விக்கிரகங் களுக்கான தனியான கோயில்களுடன் அம்மன் ஐயனார் கோயிலை புதுப் பொலிவுடன் **2012** ஆம் கும்பாபிஷேகத் தினை திறம்பட நடத்தி கொண்டு சென்றார்.

அடுத்து வந்த நிர்வாகத்தின் தலைவராகிய வி.மனோகரன் அவர்களின் தலைமையின் கீழ் கோயில் சுற்று பரிகாரங்களுக்கு கொங்கிறீட்டால் மண்டபம் அமைக்கப்பட்டு புதுப் பொலிவுடன் **2016** ஆம் ஆண்டு கும்பா பிஷேகம் நடாத்தினார்கள்.

எமது ஆலயத்தில் முதன் முதலாக மகோற்சவம் நடைபெறுவதற்கு சின்னையா (கிளாக்கர்) என்பவரே காரணமானவர். அதன் பின்னர் தவிர்க்க முடியாத காரணத்தினால் இடை நிறுத்தப்பட்டது. பின்பு **1983** ஆம் ஆண்டு அமரர் ஆ.செல்வ ரத்தினம் தலைமையிலான நிர்வாகத்தினர் மீண்டும் நிறுத்தி வைக்கப்பட்ட மகோற்சவத்தை நடத்தினார்கள்.

எமது ஆலயத்தில் மகோற்சவ மானது மாசி மகத்திற்கு தீர்த்தத் திருவிழா நடைபெறுவதற்கு ஏற்றவாறு **10** நாட்கள் கோலாகலமாக நடைபெறுகிறது.

## மணலியம்பதி அம்மன் ஐயனார் ஆலயம்


மணலியம்பதி அம்மன் ஐயனார் ஆலயமானது தொன்மை மிக்க கோயிலாகும். இக்கோயில் வெடியரசன் காலத்திற்கு முற்பட்ட கோயிலாகும். தற்போது அம்மன் ஆலயமானது முற்காலத்தில் கண்ணகி வழிபாடாக



காணப்பட்டது. பிற்காலத்தில் அம்மன் வழிபாடாக மாறியது. இக்கோயிலுக்கு வெடியரசனின் தம்பியான வீரநாரயணன் தன் பூநகரியில் உள்ள நல்லூருக்கு செல்லமுன் மணலியம்பதி ஐயனார் அம்மனை தரிசித்து விட்டு செல்வான் என்பதன் மூலம் வெடியரசனின் காலத்திற்கும் முற்பட்டது என்பது எமது கோயிலின் வரலாறாக புலனாகிறது. இதனை **1989** ஆம் ஆண்டு வெளிவந்த ஈழநாடு என்ற பத்திரிகை மூலம் அறியமுடிகிறது.

ஆரம்ப காலத்தில் எமது சந்திரசேகரப்பிள்ளையார் முன்னால் காணப்படும் மண்டபத்தில் படையலுக் கான பொருட்கள் வைக்கப்பட்டு பின்பு தற்போது சனசமூக நிலையம் இருக்கும் இடத்தில் ஆரம்ப காலத்தில் ஒரு வேம்பு மரம் காணப்பட்டது. ஆலயத்தில் இருக்கும் படையல் பொருட்களை எடுத்து வந்து இவ்வேப்பமரத்தின் கீழ் வைத்துப்பின் அதனை ஐயனார் (பண்டமெடுப்பு) ஆலயத்திற்கு கொண்டு சென்று படையல் செய்து பின்பு அதனைப் படைத்து சிவகுரு என்பவர் சாமியாக உருவேற்றி பூசை செய்வார். அதுமட்டுமல்ல மாசி அமாவாசை முதற் சனிக்கிழமை குளிர்த்தி உற்சவம் காலம் காலமாக நடை பெறுகிறது. அதுபோன்று ஆனி உத்தர நட்சத்திரத்தில் வரும் முதல் சனிக்கிழமை பொங்கல் உற்சவம்

நடைபெறும். இவ்வாலய அலங்காரத் திருவிழா ஆவணிமாதம் புனர்பூச நட்சத்திரத்தில் சிறப்பாக கொண்டாடப் படுகிறது. இவர் ஊர் மக்களுக்கு மட்டுமல்ல கடற்தொழிலுக்கு செல்லும் மீனவர்களின் நம்பிக்கைத் தெய்வமாகவும் காவற்தெய்வமாகவும் உள்ளார். மீனவர்கள் கடலுக்குச் செல்லமுன் இவரை வழிபட்டு செல்வது வழக்கமாகும். இவ்வாறு எமது மணலியம்பதி ஐயனார் அம்மன் ஊர் மக்களாலும் புலம்பெயர் மக்களாலும் பொலிவுடன் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதாவது 1974 ஆம் ஆண்டு ஆவணி மாதம் அமரர் சி.பொன்னுச்சாமி அவர்கள் தலைவராக இருந்த போதும் 1990 ஆம் ஆண்டு அமரர் த.தியாகராசா அவர்கள் தலைவராக இருந்தபோதும் மற்றும் 2012 ஆம் ஆண்டு அமரர் நா.இராசு தலைவராக இருந்த போதும் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்வாறு சிறப்பாக வீற்றிருந்து நமது கிராமத்தில் அருள் பாலிக்கின்றார்.



## வைரவர் ஆலயம்

நமது ஊரின் எல்லை காவல் தெய்வங்களில் ஒன்றாகிய வைரவர் கோயிலானது அமரர் மு.சின்னப்பர் என்பவரின் காணியில் சிறிதாக அமையப்பெற்ற ஆலயமானது பரிபாலன சபைக்கு உள்வாங்கப்பட்டு புதுப்பொலிவுடன் அருள்பாலிக்கின்ற வேளையில் நடைபெற்ற யுத்தத்தின் காரணமாக சிதைவடைந்த நிலையில் காணப்பட்டது. இவர் ஊர் மக்களுக்கு மட்டுமல்ல கடற்தொழிலுக்கு செல்லும் மீனவர்களின் நம்பிக்கைத் தெய்வமாகவும் காவற்தெய்வமாகவும் உள்ளார். மீனவர்கள் கடலுக்குச் செல்லமுன் இவரை வழிபட்டு செல்வது வழக்கமாகும். சிலகாலமாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டு எல்லைக்குள் காணப்பட்டமையால் பூசைகள் திருவிழாக்கள் எதுவுமின்றி இருந்தது. தற்போதைய நிர்வாகசபைத் தலைவர் வி.மனோகரன் தலைமையில் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் 2018 ஆம் ஆண்டு நடைபெற்றது. வழமைபோல் பூசைகள் இடம்பெறுகின்றது. அத்துடன் சித்திரை பரணிக்கு அலங்கார உற்சவம் நடைபெறுகிறது.



## கொழும்புத்துறை சனசமூக நிலையம்

எமது கொழும்புத்துறை கிராமத்தில் 1951 ஆம் ஆண்டுகளுக்கு முன்பு சனசமூக நிலையம் என்று ஒரு அமைப்பு நடை முறையில் இருக்கவில்லை. இவ்வூரைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் தமது வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதற்காக யாழ் மாநகர வாசிகசாலைக்குத் தான் சென்று வந்தனர். இவ் நிலையைக் கருத்திற்கொண்ட எம் ஊர் முதியவர்களும் இளைஞர்கள் எல்லோருமாக சேர்ந்து முதலாம் குறுக்கில் அமைந்துள்ள அமரர் க.செல்லையா

வீட்டில் ஒன்று கூடி ஆலோசித்தனர். இவ் ஆலோசனைப்படி எமது ஊரில் சனசமூக நிலையம் அவசியம் என்பதை தீர்மானமாக எடுத்துக்கொண்டு 9 பேர் கொண்ட ஸ்தாபகர்கள் நியமிக்கப் பட்டார்கள் எமக்கு தெரிந்த வகையில் அவர்களாவனர்:

திரு.த.சுப்பிரமணியம்
திரு.செ.பரமசாமி
அமரர் க.செல்லையா
அமரர் செ.பரஞ்சோதி
அமரர் செ.இராசரெத்தினம்
அமரர் வே.யோகநாதன்
அமரர் க.சிவசம்பு
அமரர் செ.மாணிக்கவாசகர்
அமரர் நா.இராசு

பின்னர் இவர்கள் கட்டங் கட்டமாக பல கூட்டங்களை நடத்தி ஒரு வாசிகசாலை நமக்கு தேவை என்ற கருத்தை முன் வைத்தனர். அதற்கு பயனாக 1951ஆம் ஆண்டில் பிரதான வீதியில் யாழ் மாநகர சபைக்கு சொந்தமான காணியில் ஒரு நிரந்தர கட்டிடத்தை அமைக்கலாமென தீர்மானித்தார்கள். இது தொடர்பாக உரிய தரப்பினரிடம் தொடர்புகளை ஏற்படுத்தி அனுமதியை பெற்றுக்கொண்டனர். இவர்கள் கட்டிடம் அமைப்பதற்கான நிதியை எவ்வாறு பெறமுடியுமென சிந்தித்தனர். தெருக்கூத்து நிகழ்வுகள் மூலமும் நன்கொடையாளர் களிடமிருந்து நிதிச்சேகரிப்பை செய்ய உத்தேசித்து அதற்கான செயற்பாடுகளில் இறங்கினார். கொழும்புத்துறை மட்டுமல்லாமல், வண்ணார் பண்ணை, நவாலி, வட்டுக் கோட்டை, சுழிபுரம் போன்ற இடங்களுக் கெல்லாம் சென்று நிதிச்சேகரிப்பில் ஈடுபட்டனர். ஓரளவு நிதியை சேர்த்துக் கொண்டு கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டுவதற்கு ஆவண செய்தனர். அடிக்கல் நாட்டும் வைபவத்திற்கு அமரர் G.G.பொன்னம்பலம் (பிரபல வழக்கறிஞர் Q.C, பாராளுமன்ற உறுப்பினர்) அவர்கள் அழைக்கப்பட்டு அடிக்கல் நாட்டப் பட்டது.

கட்டுமானங்களுக்கு பிரதான ஆசாரியராக பணியாற்றியவர் வ.சோம சுந்தரம் நிலையம் சம்பந்தமான அத்தனை அலகுகளுக்கும் போதிய அறிவுரைகள், ஆலோசனைகள் வழங்கி உதவியவர். இரவு பகல் பாராது காத்திரமான சிறிய கட்டிடத்தை நிர்மாணித்தார்.

நிதி நிலையைக் கருத்தில் கொண்டு கற்கள் மணல் போன்றவற்றை இளைஞர் களே சேகரித்துக்கொண்டனர். அத்துடன் கட்டிட வேலைகளிலும் ஈடுபட்டனர். கட்டிட வேலைகள் முடிவுற்று சனசமூக நிலையம் திறக்கப்பட்டு முதலாவது சனசமூக நிலையத் தலைவராக அமரர் க.செல்லையா காரியதர்சியாக அமரர் செ.யோகநாதனும் தனாதிகாரியாக அமரர்.வே.யோகநாதனும் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாறிருக்க விளையாட்டுத் துறையும் இச்சனசமூக நிலையமூடாக ஊக்குவிக்கப்பட்டது. அமரர். செ.பரமசாமி, அமரர் த.தியாகராசா போன்றோர் விளையாட்டு செயற்பாடுகளுக்கு நிதியுதவி வழங்கினார்கள்.

அக்கால கட்டத்தில் சனசமூக நிலைய கூட்டறிக்கைகள் யாவும் கொழும்பிலிருந்து வருகை தரும் ஒரு அலுவலரால் செவ்வை பார்க்கப்பட்டு சரியென கண்டபின் ரூபா 125/- மாதாந்த கொடுப்பனவாக சிபாரிசு செய்யப்பட்டு வழங்கப்பட்டது. இவ்வாறு நமது முன்னோர்களினால் சிறப்பாக ஊரின் வளர்ச்சிக்காகவும் எதிர்கால சந்ததியினருக் காகவும் சனசமூக நிலையத்தினை திறம்பட நடத்தினார்கள்.

இவ்வாறு இயங்கிக்கொண்டிருக் கும் வேளையில் ஊரின் அமைப்புக்க ளாவன பாடசாலை, கோயில், சனசமூக

# கொழும்புத்துறை சனசமூக நிலைய நிறுவுநர்கள்



அமரர் வே.யோகநாதன்



அமரர் செ.பரஞ்சோதி



அமரர் க.சிவசம்பு



அமரர் நா.இராசு



அமரர் செ.இராசரெத்தினம்



திரு.த.சுப்பிரமணியம்

குறிப்பு : நிறுவுனர்கள் மூவரின் புகைப்படங்கள் கிடைக்கப்பெறவில்லை அவர்கள் திரு.செ.பரமசாமி, அமரர் க.செல்லையா, அமரர் செ.மாணிக்கவாசகர் ஆவர்.

நிலையம் போன்றவை ஒன்றாக இருக்க வேண்டும் என்ற நற்சிந்தனையுடன் அமரர் த.கந்தையா (M.M.C), அமரர் செ.இராசரெத்தினம் (J.P) மற்றும் நிலைய இளைஞர்களினால் *3* ஆம் குறுக்குத் தெருவுக்கு சனசமூக நிலையம் மாற்றப் பட்டது. அதன் நிலையத்தலைவராக அமரர் ஆ.செல்வரத்தினம் (விதானை) பொறுப்பேற்று செயற்பட்டு வந்தார்.

இச்சனசமூக நிலைய கட்டிட நிதி அமரர் வே.யோகேஸ்வரன் அவர்களின் நிதியொதுக்கீட்டின்கீழ் பெறப்பட்டது. கட்டிட திறப்பு விழாவிற்கு பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வே.யோகேஸ்வரன் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. நிலைய வளர்ச்சிக்காக திரைப்படக் காட்சிகள் காண்பிக்கப்பட்டு பணமும் வசூலிக்கப்பட்டது. மற்றும் நூலக தேவைக்காக வீடு வீடாக சென்று புத்தகங்கள் மற்றும் அரங்கக் கட்டிட வேலைக்கான நிதி பெறப்பட்டது. இவற்றை நிலைய உறுப்பினர்களான அ.கோபாலசிங்கம், இ.இராசசிவம், வே.சரவணபவன், க.கலாநாதன், வ.துரைராசா, பொ.குகதாசன், கு.யோக ரட்ணம், அமரர் ப.மோகனதாஸ், சு.வரதாஜன், இ.சிவலிங்கம், இ.குணபால சிங்கம், இ.ரவீந்திரன், இ.இராஜநாதன், சி.அன்னலிங்கம், அமரர் இ.சுமேந்திரன், அ.திருநேசன், கோ.பாஸ்கரன் போன்றோர் கள் சேகரித்து வழங்கி யிருந்தனர்.

இவர்களது காலத்தில் "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற மகுட வாசகத்தை ச.திருநேசன் அவர்களும் நிலைய இலச்சனையை அமரர் ஆ.செல்வரெட்ணம் தலைமையிலான நிர்வாகம் இயங்கும்போது உருவாக்கப் பட்டது.

ஆரம்பகாலத்தில் விளையாட்டு கழகத்தில் செ.பரமசாமி என்பவர் தலைவ ராக இருந்து விளையாட்டு கழகத்தில் தனது கடமையை சிறப்பாக செய்தார். அத்துடன் அமரர் பொ.பேரம்பலம், ஆ.சிவலோகநாதன், இ.கனகசபாபதி போன்றோர் விளையாட்டு கழகத்தின் முக்கிய உறுப்பினர்களாக இருந்தனர்.



ஆரம்ப காலத்தில் சனசமூக நிலையத்தில் செ.பரமசாமி, அமரர் செ.பரஞ்சோதி போன்றோர் பத்திரிகை/ சஞ்சிகை விநியோகிக்கும் பொறுப்பை தாங்கள் ஏற்றுக்கொண்டனர். கல்வி, சமயம் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு அமரர் இ.செல்வராஜா (மாஸ்டர்) செல்வி.முத்து மங்கையற்கரசி, அமரர் ந.பரமேஸ்வரி ஆகியோர் ஊக்கு வித்தனர். சனசமூக நிலையத்தில் பொழுது போக்குக்காக நாடகங்கள் நடைபெற்றது. இவ் நாடகத்தை அரங்கேற்ற மூன்று நாடகக்குழு இயங்கியது. அதில் ஒன்று விநாயகர் நாடகமன்றம், இரண்டாவது அண்ணா நாடக மன்றம், துடுக்கு நாடகமன்றம் என்பனவாகும்.

விநாயகர் நாடகக்குழுவின் அங்கத்தவர்களாக க.கணேசமூர்த்தி, க.தில்லைநாதர், த.இராஜதுரை,



பொ.குணசிங்கம் இருந்தனர். அண்ணா நாடகமன்ற குழுவின் அங்கத்தவர்களாக அமரர் து.நவரெத்தினம், அமரர் க.தெய்வேந்திரம், அமரர் ஆ.செல்வ ரத்தினம், அமரர் கா.யோகசாமி, க.சரவண பவானந்தன், செ.பாலசிங்கம் இலட்சுமி தேவன் ஆகியோர் இருந்துள்ளனர்.

"காஷிய நடிகர்களாக அமரர் பொ.வேலாயுதப்பிள்ளை, அமரர் கா.கிருஸ்ணப்பிள்ளை ஆகியோர்கள் இருந்துள்ளனர். ஹார்மோனிய வித்துவா னாக அமரர் கந்தையா கணபதிப்பிள்ளை (அப்பா சின்னத்துரை) இருந்தார்.

திரு.M.R.பாலு அவர்களின் நெறியாள்கையில் பல நகைச்சுவை நாடகங்கள் மேடையேற்றப்பட்டது. அவரின் துடுக்கு நாடகமன்ற குழுவின் அங்கத்தவர்களாக யாழ் பிரதேச கலைஞர்களின் கலைத்துறையிலும் நாடகத்துறையிலும் இடம்பிடித்த நாகராசா, குஞ்சய்யா, வை.திருநாவுக்கரசு, வி.ஆறுமுகம் (யாழ்.பாடி கலாசார மலர் 2014), செ.சண்முகலிங்கம் போன்றோர் அங்கத்தவர்களாக இருந்துள்ளனர். இவர்கள் இசைக்கலைஞர்கள் வரிசையில் யாழ் பாடி கலாசார மலரில் கலை, இசைத்துறையில் பதிவுசெய்யப்பட்டுள்ள னர். அப்பா சின்னத்துரை என அன்பாக அழைக்கப்படும் அமரர் கந்தையா கணபதிப்பிள்ளை நாடகத்துறைக்கு ஆற்றிய சேவையை கொழும்புத்துறை வாழ் மக்களால் மறக்கமுடியாது. முழுக்க முழுக்க பாடசாலை சிறுவர்களைக் கொண்டு நாடகங்களை மேடை யேற்றியது அவரின் தனித்திறமையானது அன்றைய சிறுவன் கு.மகேந்திரனை வள்ளி திருமணம் நாடகத்தில் முருகராகவும், மகள் மகேஸ்வரியை சிறுதொண்டன் நாடகம் மூலமும் ஏற்பாடு செய்து ஊரின் இளைஞர்களைக் கொண்டு கண்ணகி நாடகத்தையும் நடத்தி அழகு பார்த்து பாராட்டையும் பெற்றவர். எல்லா நாடகமன்ற நாடகங்களுக்கும் மேடைய மைத்தும் இசையமைத்துக் கொடுத்தும் முன்னின்று செயல்படுவதிலும் அவருக்கு நிகர் அவரே.

சிறப்பாக செயற்பட்ட சனசமூக நிலையமானது 1993, 1994, 1995 ஆகிய ஆண்டுகளில் க.நடராசா தலைமையில் நிலையத்தை சூழவுள்ள சிறுவர் பூங்கா, அரங்கு மைதானம் ஆகியவற்றில் மழைக்காலத்தில் பல அடி உயரத்தில் நீர் தேங்கி காணப்படும். அப்பகுதியை யாழ் மாநகரசபை உதவியுடன் 176 ரைக்டர் மணல் கொண்டு உயர்த்தி வெள்ளம் தேங்காதவாறு சீர்செய்யப்பட்டது. கடந்தகால அனர்த்தங்களின் போது மின்சாரம் முழுமையாக இல்லாது இருந்தபோது மாணவர்களின் கல்வி பாதிக்காமல் இருப்பதற்காக பெற்றோல் மக்ஸின் உதவியுடனும் பிற்பாடு மின்விளக்கு, மின்பிறப்பாக்கி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு ஆசிரியர் மூலம் மாணவர்களிற்கு கல்வி வழங்கும் செயற்பாடு நடைபெற்றது. அவர்களது காலத்தில் மாதம் தோறும் பௌர்ணமி கலை விழாவை ஒழுங்குபடுத்தி கலை கலாசாரத்தை வளர்க்க பாடுபட்டனர். பின்பு சனசமூக நிலையமானது 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட கொடிய யுத்தத்தால் நிலையக் கட்டிடம் முழுமையாக

சேதமடைந்தது காணப்பட்டது. அதன் பின்பு ஊர்மக்கள் ஒன்றுகூடி நிலையத்திற்கு புதிய கட்டிடம் தேவை என்ற நிலைப்பாட்டிற்கு வந்தனர். 2003 ஆம் ஆண்டு திரு க.நடராசா தலைமையில் வந்த நிர்வாகத்தினர் புதிய கட்டிடம் ஒன்றினை கட்டுவதற்கான ஆரம்ப வேலையினை தொடங்கினார்கள். அதுவரை தற்காலமாக ஆலயக்காணியில் உள்ள கடைக் கட்டிடத்தில் பாலர் பாடசாலையும் நிலையமும் தற்காலிகமாக செயற்பட்டது. இவர்களது காலத்தில் நமது பிரதேசத்திற்கு இராணுவத்தினரால் மீள் குடியேற்றம் செய்ய அனுமதித்த போது நமது பகுதிகள் யாவும் பற்றையும் புல்லுமாக காணப்பட்டது. அப்போது எமது நிலைய இளைஞர்கள் ஒன்று திரண்டு நமது கிராம வீதிகள் யாவும் துப்பரவு செய்யப்பட்டது.

பின்பு சனசமூக நிலையத்தின் கட்டிடங்கள் யாவும் இடிக்கப்பட்டு புதிய மாடிக்கட்டிட வேலை நடைபெறத் தொடங்கியது. இதற்கு எமது புலம்பெயர் வாழ் மக்களும் மற்றும் ஊர் மக்களும் உதவினார்கள். பிரதான கட்டிட கலைஞர்களாக து.தனபாலசிங்கம், ந.சிவராசா அவர்களும் பிரதான ஆசாரியர்களாக இ.சசிக்குமார், யோ.யோகசுகிர்தன், சி.பிரதாபன் அவர்களும் மின்சார வேலைகளுக்கு தி.பிரசாத் தலைமையிலான குழுவினரும் பணியாற்றினார்கள். இவர்களுடன்



சேர்ந்து நிலைய இளைஞர்களும் சிறப்பாக செயற்பட்டு கீழ் மாடிக் கட்டிடமானது செந்தில்நந்தனன் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. இவர்களின் நிர்வாகத்தினர் அப்போதைய யாழ்.மாநகரசபை முதல்வர், உதவி முதல்வருக்கு நமது அரங்கின் அவலநிலைமையை நேரில் அழைத்து காண்பித்து அவர்களது கோரிக்கைக்கு இணங்க யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து ஒதுக்கப்பட்டு கட்டிடம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.




இவர்களின் காலத்தில் இளைஞர்களின் பொழுதுபோக்கு நேரத்தினை பயனுள்ளதாக்குவதற்கு விளையாட்டு கழகத்தினை மேம்படுத்தி அதற்கு விநாயகர் விளையாட்டுக்கழகம் என அங்கீகரிக்கப்பட்டது. இதற்கு திரு.வ.பிரதீப், திரு.சி.ரஜீவன் என்பவர்கள் முன்னின்று செயற்பட்டவர்களாவர்.

மேலும் சனசமூக நிலையத்திற்கு தேவையான பிளாஸ்ரிக் கதிரைகள்,

மேசைகள், அலுமாரிகள் பாலர் பாடசாலைக்கு தேவையான சீருடைகள், தளபாடங்கள் போன்றவற்றை அந்தந்த சார்பான நிறுவனங்களில் இருந்து பெற்றக்கொண்டார்கள். மேலும் பிரதேச செயலாளருடன் தொடர்புகொண்டு “கமநெகும” வேலைத்திட்டத்தில் மின்சாரத்தை அளவிடும் மின்மாணியை இலவசமாக பெற்றுக்கொண்டார்கள்.

2011 ஆம் ஆண்டு புதிதாக வி.காங்கேயன் தலைமையில் வந்த நிர்வாகத்தினர் அடிப்படைத் தேவைகளை செயற்றிட்டங்களாக வரையறை செய்து செயற்படுத்தினார்கள்.

1. நிலையத்திற்கான யாப்பு உருவாக்கப் பட்டது.
2. நிலைய கீதம் இயற்றப்பட்டது.
3. நிலையத்திற்கான நீர் வசதியை ஏற்படுத்தியமை
4. முன்பள்ளிக்கென தனியான கட்டிடம், மீள்புனரமைக்கப்பட்டது. மின்சார வசதி செய்யப்பட்டது.
5. நிலையத்திற்குள் முன்பள்ளிக்கான மலசலகூட வசதி
6. கல்வியை மேம்படுத்தும் முகமாக புலமைப்பரிசில் வகுப்புக்கள் இலவசமாக நடத்தப்பட்டமை
7. மேல்மாடிக் கட்டிடத்தின் ஒருபகுதி வேலை ஆரம்பித்தல்.
8. இயங்காமல் இருந்த துண்டி இந்து இடுகாடு சபையினை மீள இயங்கச் செய்வதற்கு ஏற்பாட்டுக் குழுவினை தெரிவு செய்து இயங்க வைத்தல்.
9. பயன்தரும் மரநடுகை.
10. கோயில் பெரும் திருவிழாக்காலங் களில் இடை நிறுத்தப்பட்ட மண்ட பப்படி செயற்படுத்தியமை.

இவ்வகையான செயற்றிட்டங் களை ஊர்மக்களும் புலம்பெயர்ந்தோரும் ஒன்றிணைந்து அரசியல்வாதிகளின் துணையுடன் செயற்படுத்தினார்கள். அதன்பின் 2013 ஆம் ஆண்டு திரு. சி.ரஜீவன் தலைமையிலான நிர்வாகத்தினர் அரங்கு மைதானத்தில் தென்னை மரங்கள் நாட்டி நீர்வசதியினை செய்வித்தார்கள். சனசமூக நிலையத்திற்கு நூலகம் ஒன்று அவசியம் எனக் கருதி அதனை சிறப்பாக மீள உருவாக்கியவர்கள் இவர்களே.

இதன் பின்னரும் வந்த நிர்வாகமாக வி.காங்கேயன், கு.மகேஸ்வரன், க.இராசதுரை என்பவர்கள் சிறப்பாக நடத்தினார்கள். அதன் பின்பு 2016 இல் அமரர் செ.இராசரெத்தினம் அவர்களின் தலைமையில் நீண்டகாலமாக செயலிழந்து காணப்பட்ட இல்ல விளையாட்டுக்கள் மீள உருவாக்கி செயற்படுத்தப்பட்டது. முன்பள்ளி பூங்கா அத்திபாரம் மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் நிதியுடன் செயற்படுத்தப்பட்டது.

இவைமுறையே இல்லங்களாக சேரன், சோழன், பாண்டியன் என்பன வாகும். இல்ல விளையாட்டுக்களுடன் சித்திரை கொண்டாட்டமானது மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அத்துடன் நிலைய மேல்மாடி இரண்டாம் பகுதிக் கட்டிடம் கட்டப்பட்டது.

2017, 2018 ஆம் ஆண்டுகளில் நிர்வகித்த திரு.மா.கமலநாதன் தலைமையிலான நிர்வாகத்தினர் கடந்த கால யுத்தத்தின் காரணமாக சேதமடைந்த சனசமூக நிலையத்தின் மேற்கு பக்க எல்லை மதிலையும் புதிதாக வடக்கு பக்க எல்லை மதிலையும் இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் நிதி ஒதுக்கீட்டில் புதிதாக கட்டி புனரமைத்தார்கள். முன்பள்ளி பூங்காவிற்கு விளையாட்டு உபகரணங்கள் பிரதேச செயலகத்தின் உதவியுடன் பொருத்தி

னார்கள். மூன்றாம் கட்டமாக மேல்மாடி வேலை நடைபெற்றதுடன் அன்பளிப்பாகப் பெறப்பட்ட கண்காணிப்பு கமரா நிலைய நிதியில் பொருத்தப்பட்டது.

2019 ஆம் ஆண்டு மீண்டும் வி.காங்கேயன் தலைமையிலான நிர்வாகத்தினர் இளைஞர்களை ஒன்று சேர்க்கும் முகமாக கரபந்தாட்ட மைதானத்தை புதிய இடத்தில் ஆரம்பித்து அதற்கு பெறுமதியான பாதுகாப்பு வலையினை இட்டு மின்னொளியில் விளையாட ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டன.

சித்திரை வருட இல்ல விளையாட்டினை மேம்படுத்தும் செயற் றிட்டத்தினூடாக பாரம்பரிய விளை யாட்டான "தாச்சி" விளையாட்டிற்கு புத்துயிர் கொடுக்கப்பட்டு நடைபெற்றது. உள்ளூர் மற்றும் புலம்பெயர் மக்களின் அனுசரணையுடன் விளையாட்டு, கல்விசார் போட்டிகளுக்கு நிதிப் பங்களிப்பு செய்தார்கள்.

அதுமட்டுமல்லாது வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு கல்விப்பொருட்களும் புலம் பெயர்ந்த மக்களின் உதவியுடன் நிர்வாகத்தினரால் வழங்கப்பட்டது. மேலும் நமது கிராமம் சம்பந்தப்பட்ட ஆவணப்படுத்தலுக்கு உட்படாது காணப்பட்ட கிராமத்தின் வரலாற்று பதிவுகளை இவர்களது நிர்வாகத்தின் மலர் வடிவமாக ஆவணப்படுத்தலில் ஈடுபட்டு செயற் படுத்துகின்றனர்.

இவ்வாறு ஒவ்வொரு நிர்வாகமும் ஊரின் வளர்ச்சிக்கும் சனசமூக நிலையத்தின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்கள். மேலும் இனிவரும் காலங்களில் வரும் நிர்வாகத்தினரும் ஊரிற்காகவும் நிலைய வளர்ச்சிக்காகவும் சுயநலமற்ற தமது பணிகளைத் தொடர்ந்து செய்து கொண்டு இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

**தகவல் வழங்கியோர் :**
ஸ்தாபகரில் ஒருவராக :
திரு.த.சுப்பிரமணியம்
முன்னாள் தலைவர் : திரு க.நடராசா
முன்னாள் செயலாளர்கள் :
திரு இ. இராசசிவன், திரு க.தில்லைநாதர்,
முன்னாள் பொருளாளர் :
திரு சு.வரதராசன்.

## யாழ் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்



எமது கிராமத்துக்கு ஒரு பாடசாலை உருவாக வேண்டும் என்று பாடுபட்டவர்களில் மிகவும் முக்கிய மானவர்களில் அமரர் இரா.செல்வராசா (அதிபர்) அமரர் தம்பு கந்தையா (யாழ். மாநகரசபை உறுப்பினர்) அவர்களும், அமரர் அல்பிரட் தங்கராசா துரையப்பா (யாழ்ப்பாண முதல்வர்) அவர்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு அரசியல், ஆளுமையின் பேரில் இப் பாடசாலை 1964 ஆம் ஆண்டு உருவாக்கம் பெற்றது. இவர்களுக்கு உற்ற முன் துணையாக இருந்து செயற்பட்ட அமரர் வினாசிதம்பி முத்தையா அவர்களையும் ஏனைய நலன்விரும்பிகளையும் நினைவுகூராமல் இருக்கமுடியாது. பாடசாலையானது கிடுகினால் வேயப்பட்டு மண் நிலத்தில் ஆரம்பமாகி இன்று கட்டிடங்களோடும் பௌதீக வளங்களோடும் காணப் படுகின்றது. யாழ். கொழும்புத்துறை

துரையப்பா வித்தியாலயமானது தற்போதைய அதிபர் திரு. நடேசு தயாளன் (M.ed.MA.M.Sc) அவர்களின் வினைத்திறனுடைய மேற்பார்வையில் எதிர்காலத்தில் சிறந்த பாடசாலையாக விளங்குவதற்கு முழு அளவிலான பங்களிப்பை வழங்கி வருகின்றார் என்பது வெள்ளிடைமலை. பாடசாலையின் செயற்சாதனைகள், கல்வி அடைவு நிலை, பெறுபேற்று அடைவுநிலை, இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் என்பன நோக்கத்தக்கது. மேலும் ஞாபகார்த்த புலமைப்பரிசில், பாடசாலைச் சமூகம் மூலம் பழைய மாணவர்களின் செயற்பாடுகளுடன் உள்ளூர், புலம் பெயர் உறவுகளின் அனுசரணையுடன் வரவேற்பு நுழை வாயில், சரஸ்வதி சிலை, கணனி அறை உருவாக்கம், நூலகம், கற்றல் கூடம் அத்தோடு நீர்த்தாங்கி அமைப்பு என்பவற்றோடு மிளிர்ந்து காணப்படுவது எமது கிராமத்தின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

## கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்



நமது முன்னோடித் தொழிலாக கருதப்படும் மீன்பிடித்தொழிலின் முன்னேற்றத்திற்கும் தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளையும் முன்னின்று கவனித்து செயலாற்றும் கிராமத்தின் அமைப்பாக விளங்கி வருகின்றது. அருகிவரும் மீன்பிடித் தொழிலில் பறிக்கூட்டுத்தொழில் மகத்துவம் வாய்ந்தது.

காட்டுப்பகுதிக்குள் சென்று ஈச்சம் கம்பு வெட்டி காயவைத்து பின்பு கடல் நீரில் நனைய வைத்து இரண்டாக பிளந்து கூடு செய்வதற்கு ஏற்றது போல சீவி எடுத்து பறிக்கூடு இழைப்பார்கள். பின்பு குறிப்புப் பார்த்து கடலில் வைத்து "காடு" பார்த்தல் என்னும் நிலையோடு மீளவும் எடுத்து தொழில் செய்வார்கள். இத்தொழிலின் மகத்துவம் தொன்மை வாய்ந்ததாக கருதப்படுகின்றது.

## மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்




மாதர் அபிவிருத்தியில் கரிசனை கொண்டு பல வகையான நடைமுறைகளை மேற்கொண்டு வருகின்றது. இச்சங்கம் கொழும்புத்துறை பிரதான வீதியில் அமைந்திருந்த நெசவுசாலைக் கட்டிடத்தின் அப்போதைய யாழ் மாநகரசபை உறுப்பினர் கடைசிப் பகுதியில் காரியாலயம் அமைத்து செயற்படும் விதமாக உருவாக்கி அன்றைய யாழ் மாவட்ட சபைத் தலைவர் அமரர் பொட்டர் நடராசா அவர்களினால் திறந்து வைக்கப்பட்டதுடன் அதன் முதல் தலைவியாக திருமதி வரதலெட்சுமி நடராசா அவர்கள் கடமை ஆற்றினார். 1984 ஆம் ஆண்டு காலப்பகுதயில் யாழ் மாவட்ட மங்கையர் கழகத்தின் அனுசரணையோடு மாதர் சங்க கட்டிடம் அமையப்பெற்று இன்றும் பெருமையோடு

விளங்கி வருகின்றது. இக்கால கட்டத்தில் இருந்து நீண்டகாலம் தலைவியாக செயற்பட்டு அதன் முன்னேற்றத்திற் காகவும் வளர்ச்சிக்காகவும் அளப்பெரிய சேவையோடு தன்னை முழுமையாக இணைத்து தலைவியாக இருந்து செயற்பட்ட செல்வி முத்து மங்கையற்கரசி அவர்களை கிராம மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

தற்போது மாதர்சங்க கட்டிட மானது புதுப்பொலிவுடன் இளம் மாதர்களின் தலைமைத்துவத்தோடு மக்களுக்கு சேவையாற்றி வருவது எல்லோரும் அறிந்ததே.

## துண்டி இந்து மயானம்



எமக்குத் தெரிந்த காலத்தில் இருந்து துண்டி இந்து மயானம் என்ற தனி அமைப்பே காணப்பட்டது. இதன் நிர்வாக பதவிகளை பெற்றுக் கொள்வதற்காக பெரும்பான்மையாக ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்ட இந்து வாழ் மக்கள் முன்னடித்துக் கொண்டிருப்பார்கள். கொழும்புத் துறையை பொறுத்தளவில் ஒரு நிர்வாகப் பகுதியை பெற்றுக் கொள்வதற்காக பெரும் சிரமப்படவேண்டியதாக இருக்கும். 1984 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சந்தர்ப்பம் சூழ்நிலை காரணத்தால் செயலாளர் பொறுப்பை வகிக்கும் சந்தர்ப்பம் திரு.க.நடராசா அவர்களுக்கு கிட்டியது. இத்தனைக்கும் அன்றைய மாநகரசபை உறுப்பினர் அமரர் தம்பு கந்தையாக 2 ஆம் தடவையாக வெற்றியீட்டிய பின்பு துண்டி இந்து மயானத்திற்கு சுற்றுமதில் அமைத்து நிழல் தரும் மரங்கள் நாட்டியும் செப்பமான முறைக்கு கொண்டுவரப் பட்டது. இது மாதர்காடு சின்னச் சுடலை என்று அழைக்கப்பட்டது. நாட்டி லேற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அப்பெருநிலப்பரப்பில் அரைவாசிப் பகுதி குடியேற்ற திட்டம் என அத்துமீறி எடுத்துக் கொள்ளப்பட்டு இன்று வசந்தபுரம் என்ற பெயரோடு குடியேற்றத்திட்டம் இருந்து வருகின்றது. இவ்வாறான நிலைமையில் அன்றைய மாநகர விசேட ஆணையாளர் அவர்கள் அதிபர் அமரர் இரா.செல்வராசா மற்றும் அமரர் க.மார்க்கண்டு ஆகியோர்களுடன் ஊரவர்களும் ஒன்று கூடி பேசியதன் விளைவாக இந்து இடுகாடு எனும் தனியான அமைப்பு உருவாகியது. அதன்முதல் தலைவராக அமரர் க.மார்க்கண்டு அவர்களும், செயலாளராக இ.விஜயகுமார், பொருளாளராக அமரர் சம்பந்தர் இராசையா அவர்களும் செயலாற்றி இரு பக்கமதில் சுவர் அமைத்து பாதுகாப்பான செயற்பாட்டை மேற்கொண்டனர். நாட்டிலேற்பட்ட போர் சூழ்நிலை காரணமாக முதலில் இந்திய அமைதி காக்கும் படை, பிற்பாடு இலங்கை இராணுவம் ஆகியன ஆக்கிரமித்தலின் அடிப்படையில் துண்டி இந்து மயானத்தின் சுற்றுமதில், இந்து இடுகாட்டு பரிபாலனசபையின் இருபக்க மதில்கள் எல்லாம் அழிக்கப்பட்டு சீரழிவு ஏற்பட்டது. இடையில் அதிகமான ஆண்டுகள் கழிந்து 2011 ஆம் ஆண்டு கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் நிர்வாக மாற்றத்தின் காரணமாக திரு.வி.காங்கேயன் தலைமையிலான நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களில் ஒன்று துண்டி இந்து மயானத்தின் அபிவிருத்தி பற்றி ஆராய்ந்ததன் பயன் ஏற்பாட்டுக் குழு அழைத்து பொதுக்கூட்டத்தை

மேற்கொண்டு துண்டி இந்துமயானம், இந்து இடுகாடு மயானம் இரண்டிற்கும் 06.05.2012ம் திகதி ஒரே நிர்வாகத்தைக் கொண்டு இயங்கு நிலைக்கு கொண்டு வரப்பட்டாகும்.

இதில் ஆறு கிராம இந்து மக்களிடம் 7 இலட்சத்து 75 ஆயிரத்திற்கு மேல் நிதி திரட்டி துண்டி இந்து மயானத்திற்கு சுற்றுமதிலுடன் நுழை வாயில் உருவாக்கி பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் இளைப்பாறும் மடம் 21 அடி நீளம் 11 அடி அகலமாக யாழ் மாவட்ட M.P. இன் நிதி ஒதுக்கீடு மூலம் அமையப் பெற்றுவரும் வேளையில் ஈச்சமோட்டை அன்பர் தன் தகப்பனாரின் ஞாபகார்த்த மாக அம் மடத்தை 42 x 20 1/2 நீள அகலமான மடமாக மாற்ற பேச்சு நடவடிக்கையின் மூலம் உடன்பட்டு தற்போது அது முடிந்தும் முடியாத நிலையில் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது.

இந்து இடுகாடு மயானத்தில் பாவனைக்கென்று ஒரு கிணறும், எல்லைகளை பாதுகாக்கும் நோக்குடன் வடக்குப் பக்கத்தில் இருந்து கிழக்குப் பக்கம் திருப்பி 115 அடி நீளமுள்ள மதில் சுவர் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரின் நிதியொதுக்கீட்டின் கீழ் பெற்று கட்டப்பட்டிருக்கின்றது.


## கிராம அபிவிருத்திச் சங்கம்

கிராம அபிவிருத்திச் சங்கம் எமக்குத் தெரிந்தவரை எமது கிராமத்தில் கிராம அபிவிருத்திச் சங்கம் 1986 ஆம் ஆண்டு அமரர்களான் இரா.செல்வராசா, சி.சி.வரதராசா, க.மார்க்கண்டு, செ.கந்த சாமி ஆகியோர்களினதும் ஏனைய ஒரு சில இளைஞர்களின் முயற்சியால் ஆரம்பிக்கப் பட்டது. இவ் அமைப்பின் தலைவராக அமரர்களான இரா.செல்வராசா, செய லாளராக சி.சி.வரதராசா, பொருளாளராக செ.கந்தசாமி அவர்களும் செயற்பட்டார் கள். இவ் அமைப்பானது தான் சார்ந்த மக்களுக்கான செயற்பாட்டில் நேரம் காலம் பாராது முன்னின்று செயலாற்றியது எனலாம். இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் 1987 - 1990 ஆம் ஆண்டு முற்பகுதி வரை இந்திய அமைதி காக்கும் படை இங்கு நிலைகொண்டிருந்தவேளை மக்களுக்கு ஏற்பட்ட இடைஞ்சல்களை தீர்க்கும் முகமாக மருத்துவ சேவை யையோ பற்றாக்குறைவாக உள்ள உணவு தானிய பொருட்களை பெற்றுக் கொடுப்பதிலும் முன்னின்று செயற்பட்ட அமரர் செ.கந்தசாமி அவர்களை மறக்கத்தான் முடியுமா? காலப்போக்கில் அரசியல் களமாற்றங்களினால் இவ் அமைப்பானது செயலிழந்து போயிற்று.


2017 ஆம் ஆண்டு அப்போதைய J/62 இன் கிராம சேவகர் திரு.சி.குருதர்சன் அவர்களின் முயற்சியால் மீளவும் உருவாக்கம் பெற்று அதன் தலைவராக திரு.க.சரவணபவானந்தன், செயலாளராக, திரு.இ.விஜயகுமார் அவர்களும் திரு.வி.காங்கேயன் அவர்கள் பொருளாள ராகவும் செயற்பட்டு வருகின்றார்கள்.

## பாரம்பரிய தொழில்நுட்பம் மிகுந்த கைத்தொழில்

ஒரு கிராமத்தின் வளர்ச்சி என்பது அங்கு வாழும் சமூக மக்களால் ஏற்படுத்திக் கொள்ளும் முயற்சியாகும். அந்த வகையில் எமது கிராமத்தைப் பொறுத்தவரையில் தொழில், சிறு கைத்தொழில் என்பன வற்றின் பெருமையை பறைசாற்றும் வண்ணம் மீன்பிடித்தொழில் இருந்து வந்தது. இத்தொழில் பலவகையான பிரிவுகள் மூலம் செய்து வந்தனர். அதில் பறிக்கூட்டுத்தொழில், அடிவலை, சிறகுவலை என்பன முக்கியத்துவம் பெறுகின்றது. இதில் பறிக்கூட்டுத்தொழில்



மகிமை, மகத்துவம், மதிநுட்பம் வாய்ந்ததாக கணிக்கப்படுகின்றது. இதன் ஆரம்பம் ஈச்சம்கம்பு வெட்டி அதைக் காயப்போட்டு பின்பு கடல் நீரில் நனைய வைத்து அளவாக மென்மையாக சீவி எடுத்து பறிக்கூட்டு இழைப்பார்கள் இழைத்த கூட்டை கடலில் குறிப்புப் பார்த்து வைத்து குறிப்பிட்ட நாட்களின் பின்பு (காடு பார்த்தல்) எனும் முறைமையை கடைப்பிடித்து தொழில் செய்வார்கள்.



எமது கிராமத்தின் மீன்பிடித் தொழிலில் அதி முக்கியம் வாய்ந்த உபகரணம் மண்டா.

காற்றடிக்கும் காலங்களில் கடல் நீர் கலங்கி இருக்கும், கடலோடியிருக்கும், இப்படியான நிலையில் கூட எல்லோரும் ஆச்சரியமாக பார்க்கும் மதிநுட்பம் வாய்ந்த இத்தொழில் அதிக வருமானத்தை ஈட்டித் தருவனவாக ஒரு காலத்தில் விளங்கி வந்தது. தற்போது இத்தொழில் முறை அருகி வரும் நிலையில் காணப்படுகின்றது.

## கிடுகு பின்னுதல்

கொழும்புத்துறை கிடுகு என்பது மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. யாழ்ப் பாணத்தில் பல பாகங்களிலிருந்தும் இங்கு வந்து கிடுகு வேண்டிச் செல்வார்கள். அதுவும் முற்பணம் வழங்கியும் ஒரு கிழமை / பத்து நாட்களின் பின்பு பெற்றுக்கொள்ளும் முறை அந்த நாட்களில் காணப்பட்டது. கடலாலும், தென்னம் சோலைகளாலும் சூழ்ந்து காணப்படும் எமது கிராமத்தில் கிடுகு பின்னல் என்பது பொழுதுபோக்கானதும் வருமானம் மிக்கதானுமான ஒரு தொழிலாக நடைபெற்று வந்தது. பாடசாலை மாணவர்கள் கூட தங்களது செலவை பூர்த்தி செய்ய ஓய்வு கிடைக்கும் நேரங்களில் கிடுகு பின்னி பணம் சேர்ப்பதும் வழக்கமாகும். எமது பிரதேசத்தில் கிடைக்கும் தென்னோலை களின் பற்றாக்குறையை தீர்க்க பூநகரிப் பிரதேசத்தில் அடங்கும் கௌதாரி முனையில் இருந்து கொண்டு வந்து அதன் மிகுதியை பூர்த்தி செய்வது வழக்கம். கொழும்புத்துறை துறைமுகம் சந்தி அத்துறைமுகத்தின் கரையில் பத்திற்கும் மேற்பட்ட வத்தைகள் இருக்கும். இவ் வத்தைகளில் தேங்காய், வைக்கோல், ஈச்சம் கம்புகள் என்பவற்றோடு தென்னோலை யும் வத்தையில் கொண்டு வருவார்கள். அங்கிருந்து வத்தையில் வரும் பொருட்களை இரட்டை மாட்டு வண்டியில் ஏற்றி அவரவர் இடங்களுக்கு கொண்டு செல்லும் காட்சியானது மிகவும்

ரம்மியமானது. கிடுகு பின்னல் ஆனது தென்னோலையை கடலில் ஒரு வாரமளவில் நனையவிட்டு அதனை மீண்டும் இழுத்து அவரவர் வீட்டு முன்பாக போடப்படும் காட்சி இரசிக்கத்தக்கதாகும். வீதி முழுவதும் ஈரம்பட்டு குளிர்தன்மையுடன் காணப்படும்.

காலையில் 1ம் குறுக்கு வீதி, 2ம் குறுக்கு வீதிப் பக்கம் போனால் முதியவர்கள், சிறுவர்கள், பெண்கள் என வரிசையில் இருந்து கிடுகு பின்னும் காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும். கிடுகு என்றால் அது கொழும்புத்துறைக் கிடுகே என்றளவிற்கு பெயர் போனதாகும்.

தற்போது தென்னம் சோலைகளும் இல்லை. தென்னை யோலைகளும் இல்லை ஏன் வத்தைகள் கூட இல்லை. எமக்கு தெரிந்த மட்டில் ஏன் ஆட்களும் தான் இல்லை.

கிளாக்கற்றை கணேசின் வத்தை, கந்தவனத்தாற்றை வத்தை, பரமசாமியற்றை வத்தை என்பன பேர் போன வத்தைகளாகும்.

## கயிறு திரித்தல்

கிராமத்தின் பள்ளி மாணவர்கள் படித்ததில் ஏன் வளர்ந்ததில் கூட பாதிப்பங்கை கயிறு திரித்தல் மூலமேயாகும். மிகவும் சிரமமான வேலையாக இருந்தாலும் அதனால் வரும் சம்பாத்தியம் ஒரு குடும்பத்தையே கொண்டு செல்லும் அளவுக்கு இருக்கும் கடற்கரைதனில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சிறிய இடத்தை தனக்கென பிடித்து வைத்திருப்பார்கள் அதை தங்களின் சொந்தமான காணியாகவே நினைப்பர். சில நேரங்களில் அவ்விடத்தை விலைபேசியும் விற்பார்கள். தொழில் ரீதியாக வரும் நிலையில் தேங்காயில் பச்சை மட்டையை கடலில் புதைத்து வைத்து நனைந்த பின்பு எடுத்து தும்பாக்கி சூர்ந்து கயிறு திரிப்பார்கள். கிடைக்கும் பச்சைத் தேங்காய் மட்டையை நாளாந்தம் கிடைப்பதைக் கடலில் புதைத்து ஆறு மாதங்களின் பின்பே எடுத்து பாவிப்பார்கள்.

எடுக்கும் நனைந்த மட்டைக்குப் பதிலாக அவ்விடத்தில் புதிதாக மட்டையை புதைத்து வைப்பார்கள். இம்முறையின் பிரகாரம் ஆறு மாதம் செல்லும் எனலாம்.



இக்கைத்தொழிலை குடும்பமாகவும் கூட்டமாகவும் சிலர் செய்வார்கள். 1990 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கு பின் புத்தளம், சிலாபம் போன்ற இடங்களில் இருந்து இங்கு கயிறு வராத நிலையிலும் பொருளாதார நடைமுறைச் சிக்கலை தும்புத்தொழிலான கயிறு திரித்தல் தீர்த்து வைத்தது என்று எம் மக்களும் திடீரெனத் தோன்றிய கயிறு கொள்வனவாளர்களும் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். தற்போது மட்டை தாட்டல், தும்படித்தல், கயிறு திரித்தல் என்பன அருகி காலப்போக்கில் இராச தொழில், இராச வருமானம் என்று முன்னோர்களால் சொல்லப்பட்ட வார்த்தைகள் எல்லாம் முற்றாக அருகிடுமோ என அங்கலாய்க்க வேண்டிய நிலை வருமோ எனத் தோன்றுகின்றது.

# 68 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மர நடுகை நிகழ்வும் - 2019

















# 2019ம் ஆண்டு இல்லங்களுக்கான மைதானப்போட்டிகள்















பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# எங்கள் கொழும்புத்துறை ஊரே



திரு. க.சரவணபவானந்தன்
தலைவர்
கொழும்புத்துறை கிராம அபிவிருத்தி சங்கம்

*கலைவளமும் உண்டு*
*கடல் வளம் உண்டு*
*வயல் வளம் உண்டு*
*தென்னம் தோப்பும் உண்டு*
*கல்விமான்களையும் வளர்த்ததும் நம் ஊரே*

கடல் வளம் என்பது நங்கையர்களுக்கு கைகொடுத்த தும்புத்தொழிலும் உண்டு. இங்கு நடந்து முடிந்த போர் சூழலுக்குமுன் எங்கள் துறைமுக பாலத்திற்கு கிழக்கு பக்கமாக உள்ள கடலில் பெரிய வத்தைகள் கடல் அலைகளுக்கு மேல் ஆடித்திரிந்த காட்சிகள் கண்கொள்ளாக் காட்சியாகும். இவ்வத்தைகள் 7 - 8 வரை இங்கிருந்தன முறைப்படி இங்கிருந்து பாய் இழுத்து பூநகரிக்கு போகும் போது யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களுக்கு பூநகரியில் நெல்வயல்கள் இருந்தது. அவர்களுக்கு கடலில் வளரும் தாழை என்ற ஒரு வகை செடியின் இலைகள் கடல் பெருக்கெடுக்கும் காலமான சித்திரை வைகாசி மாதங்களில் வீசும் சோழக்காற்றில் அடியுண்ட இலைகள் கரை ஒதுங்கும் அவற்றை அக்காலங்களில் வயலுக்கு பசளைக்காக சேமித்து வைத்து வயல் உழும் காலங்களில் நெற்பயிருக்கு உரமாக போடுவதற்காக சாக்கில் நிரப்பி எருவையும் சேகரித்து போகும் வத்தையில் நாகதேவன் துறைக்கு அனுப்பி வைப்பார்கள். அப்பசளையில் உண்டாகிய மொட்டைக் கறுப்பன் நெல்லும் நாலுமொழி நெல்லின் அரிசியை சோறு சமைத்து சாப்பிட்டவர்களின் ஆயுள் நீண்டதாகவும் பலசாலிகளாகவும் இருந்தது. இங்கிருந்து போன வத்தைகள் திரும்பி இங்கு வரும்போது நெல்லையும், வைக்கோலையும் ஏற்றிக் கொண்டுவந்து இத்துறைமுகத்தில் பறிப்பார்கள். கொண்டு வந்த பொருட்களின் உரிமையாளர்கள் வத்தை வரும் நேரத்தைப் பார்த்து துறைமுகத்தில் உள்ள வங்களாவில் (ஒல்லாந்தரால் கட்டப்பட்ட தங்குமிடம்) தங்கியிருந்து பொருட்களை இரட்டை மாட்டு வண்டிகள் மூலம் ஏற்றி தங்கள் தங்கள் இடங்களுக்கு கொண்டு போவார்கள். இதனால் பயன்பெற்ற தொழிலாளர்கள் வத்தையில் பணிபுரிந்தவர்கள் மாட்டு வண்டிக்காரர்களாகும் வத்தையில் கொண்டு போன பசளையான எரு, சாதாளையை சேகரித்து கொடுத்தவர்களுக்கு பணமாக வாங்குவதில்லை பதிலாக பண்டமாற்றுமுறையாக அவர்களின் பொருட்களுக்கு வயலில் நெல் அறுவடை செய்து முடிந்த பின் நெல்லைக் கொடுப்பார்கள். இவ்வத்தைகளில் தான் சுமார் 5 -6 தலைமுறைக்கு முன் இத்துறைமுகத்தில் இருந்து கொழும்புக்கு பொருட்கள் ஏற்றிக்கொண்டு போனதாக நம் முன்னோர் கூறுவார்கள். இதனால்தான் இது கொழும்புத்துறை என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது.

முன்பும் அனுமதிக்கடிதம் (பாஸ்) நடைமுறையும் இருந்தது. வத்தைகள் இத்துறையில் இருந்து கொழும்புக்கு புறப்படுமுன் பாஸ் எடுக்க அருகில் உள்ள கிராமத்திற்கு போய் உடையார் அல்லது விதானையார் என்பவர்களால் தான் வழங்கப்படும் அக்கிராமத்தில் வைத்து பாஸ்வழங்கிய படியால் அக்கிராமத்தை

பாஸ்சூர் என்று பெயர் வந்ததாகவும் கூறுவார்கள்.

பாலத்திற்கு மேற்குப் பக்கமாக மீன்படி வள்ளங்கள் 50 - 60 வரை கட்டியிருப்பார்கள். இவற்றை மீன்படிப்பதற்காக மீனவர்கள் அதிகாலை 4 மணியளவில் தொழில் செய்ய புறப்படுவார்கள் - மீன்பிடிப்பதில் பலவகையான முறைகளை மீனவர்கள் கையாண்டுள்ளனர்.

1. களம் கண்டி வலை மூலமாகவும்
2. பறிக்கூட்டு மூலமாகவும்
3. அடிவலை மூலமாகவும்

இப்படி பலவகையான முறைகளில் மீன்பிடிப்பார்கள் - மீன்பிடிக்க அதிகாலை 4 மணிக்கு போனவர்கள் அன்று காலை 8 - 9 மணியளவில் தங்கள் தாங்கள் பிடித்த மீன்களை மீன்சந்தையில் விற்பார்கள்

தென்னம் தோட்டம் உள்ளவர்கள் காலத்திற்கு காலம் தேங்காயையும் ஓலையையும் பறித்து விற்பார்கள் உரித்த தேங்காய் மட்டையை (பொச்சு) தும்புத் தொழில் செய்வர்கள் வாங்கி வாங்கி கடலில் புதைத்து காலத்திற்கு காலம் கிண்டி எடுத்து அவற்றை பதப்படுத்தி மெத்தைக்கு தும்பாகவும் தும்பை கயிராகவும் திரித்து தும்புத்தடிக்காகவும் கால்மிதியாகவும் தயாரித்து விற்பார்கள். பிற ஊர்காரர்கள் சொல்லுவார்கள் சாப்பாட்டிற்கு பூநகரி மொட்டைக் கறுப்பன் அரிசியில் சமைத்த சோறும் கொழும்புத்துறை பறிக்கூட்டு மீன்கறியும், இவற்றிற்கு நிகரே இல்லை என்று.

## கல்விமான்களை வளர்த்த ஊர்

இங்கு 1955 - 1960 ஆம் ஆண்டு வரையான ஆண்டு காலங்களில் இங்குள்ள இளைஞர்களால் படிப்பகம் ஒன்று கொழும்புத்துறை 1ம் குறுக்குத்தெருவில் உள்ள ஒரு சிறு வீட்டின் மத்தியில் ஒரு காகிதத்துடன் ஆரம்பிக்க திரு.செ.செல்வ ரட்ணம், திரு. தம்பு நடராசா மற்றும் சில இளைஞரின் ஊக்கத்தால் ஆரம்பமாகியது. காலம் செல்லச் செல்ல வளர்ச்சி அடைந்து இங்குள்ள பெரியார்களின் ஆதரவுடன் கொழும்புத்துறை துறைமுகச் சந்திக் கருகில் உள்ள தம்பு என்பவரின் பொறுப்பில் இருந்த கட்டிடத்திற்கு சனசமூக நிலையம் என்ற பெயருடன் மாற்றம் செய்யப்பட்டு வளர்ச்சியடைந்து வரும் காலங்களில் சில பெரியோர்களின் ஊக்கத்தால் 2ம் குறுக்குத் தெருவின் தெற்குப் பக்கமாக இருந்த மாநகரசபைக்கு சொந்தமான காணியில் சனசமூக நிலையம் பெரிதாக கட்ட தீர்மானிக்கப்பட்டு தலைவர், செயலாளர் சக உறுப்பினர் களையும் தெரிவு செய்து கட்டிடம் கட்ட தீர்மானித்தார்கள். பணம் இல்லாத காரணத்தினால் வீடு வீடாக தம்பு சுப்பிரமணியம் தலைமையில் கரோல் இடம் பெற்றது. தம்பு சுப்பிரமணியம் மிருதங்கம் அடிக்க அவரின் பின் சென்ற இளைஞர்கள் பாட்டுப்பாடி, ஆடி பணம் சம்பாதித்தார்கள். கொழும்புத்துறை வாசிகளை பெரியார்களை அணுகி அவர்களின் ஆதரவு பெற்று கட்டிடம் கட்டிமுடிக்கப் பட்டது. 07.07.1957 ஆம் ஆண்டு புதிய கட்டிடம் சனசமூக நிலையமாக இயங்கிவரத் தொடங்கியது. வருடா வருடம் சித்திரை புத்தாண்டுத்தினத்திலும் ஆடி 7 ஆம் திகதி ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டிகளும் பரிசளிப்பு நிகழ்வும் இங்குள்ள கலைஞர்களால் நாடகங்களும் வெகு சிறப்பாக செய்யப்பட்டு வந்தது. இப்படி வளர்ச்சியடைந்த கொழும்புத்துறை சனசமூக நிலையம் இடம்பற்றாக்குறை காரணமாக விளையாட்டு மைதானம் இருக்கக்கூடிய ஒரு இடத்தை மாநகர சபைக்குரிய காணியை பல கஷ்டங்களுக்கு மத்தியில் அனுமதி பெற்று கட்டிடம் கட்ட ஊர்

மக்களின் உதவியுடன் இரண்டு மாடி கட்டிடம் கட்ட ஆரம்பித்தார்கள் .ஒரு தொகுதி கட்டிடம் வேலை பூர்த்தியான தும் 2ம் குறுக்குத்தெருவுக்கு அருகில் இருந்த சனசமூக நிலையம் 3 ஆம் குறுக்குத் தெரு என்ற விலாசத்தில் மாற்றம் செய்யப் பட்டது. பல இளைஞர்களால் பத்திரிகை கள் யாவும் போடப்பட்டுள்ளன. பல பெரியார்கள் இளைஞர்கள் உதவி செய்து கொண்டிருக்கிறார்கள். காலா காலமான நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றது. இதற்கருகில் முன்பள்ளி ஒன்று இராணுவ நடவடிக்கையால் சேதமாக்கப்பட்டது. சிறார்கள் கல்வி பெற இடமில்லாமல் இருந்தபோது அமரர் திரு.க.தெய்வேந் திரன் குடும்பம் முன்னின்று அவ் முன்பள்ளிப் பாடசாலையை சீர் செய்து கொடுத்தார்கள். எதுவும் கம்பீரமாக தோற்றமளித்துக் கொண்டிருக்கிறது. துரையப்பா வித்தியாலயம் அன்று ஆரம்பிக்கப்பட்ட போது கோவிலுக்கு சொந்தமான காணியில் சிறு ஓலைக் கொட்டகையுடன் பாடசாலை சிறு தொகை மாணவர்கள் கல்வி பயில வேண்டிய முறையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. நாளாந்தம் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் காலங்களில் மாணவர்களின் வரவும் அதிகரித்துள்ளது. பின் பல கல்விமான்களின் முயற்சியுடன் கட்டடமாகியது. மாணவர்களில் சிலர் பட்டதாரியாக இருந்து பாடசாலைக்கு ஆசிரியர்களின் முயற்சியாலும் பெருமை தேடி தந்து கொண்டிருக்கிறார்கள். இங்கு புகழ்பெற்ற இந்து ஆலயங்களாகிய பிள்ளையார் கோவில், அம்மன் ஐயனார் கோவில், வைரவர் கோயில் முத்துமாரி அம்மன் கோவிலும் உண்டு. இக்கோவில்களை ஊர்க்காவல் செய்கின்ற தெய்வங்கள் என்றும் சொல்லுவார்கள்.

# நினைவில் நின்றவை - சில குறிப்புக்கள்



திரு. க.தில்லைநாதர்
முன்னாள் செயலாளர்
கொழும்புத்துறை சனசமூக நிலையம்

ஆரம்ப காலத்தில் இக்கிராமத்தில் எமது மக்களினால் வாசிகசாலை என அழைக்கப்பட்டு இயங்கி வந்த இந்நிலையம் கொழும்புத்துறை சனசமூக நிலையம் என்ற பெயரில் இயங்கி வருவதை என் மனதில் இருத்தி நினைவில் நின்ற சில குறிப்புக்களை 68வது ஆண்டு விழா சிறப்பு மலரில் ஆவணப் படுத்து வதின் மூலம் எதிர்காலச் சந்ததியினருக்கு இந்நிலையத்தின் வரலாறு சம்பந்தமாக என் நினைவுக்கு எட்டிய மட்டில் குறிப்பிடு வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

1950 ஆம் ஆண்டு முற்பகுதியில் இந்நிலையம் கொழும்புத்துறை 1ம் குறுக்குத்தெருவில் அமரர் செல்லையா் வீட்டின் தென் கிழக்கு மூலை office அறையில் சிறிய அளவில் ஆரம்பித்ததாக அறிகிறேன். அக்காலத்தில் வீட்டின் கிழக்குப்பக்கமுன் விறாந்தையும் பாவிக்கப் பட்டது. கிழக்கு பக்கத்து முற்றத்தில் கிடுகு பின்னிக் கொண்டிருக்கும் பெண்களுக்கு தினசரி பத்திரிகைச் செய்தி வாசித்துக் காட்டப்படுவதற்காக பத்திரிகை வாங்கு வது ஆரம்பிக்கப் பட்டது.

சஞ்சிகைகள், புத்தகங்கள் தேடிக் கொண்டு வருபவர்கள் அமரர் செ.பரஞ்சோதி, காலஞ்சென்ற உதவி அரச அதிபர் செ.யோகநாதன் மற்றும் அமரர்.செ.மாணிக்கவாசகர் அத்துடன் இன்னும் பலர்.

இட நெருக்கடி காரணமாக இவ்வாசிகசாலை நாளடைவில் அவ் வீட்டின் முன்னால் உள்ள கொட்டகைக்கு மாற்றப்பட்டது. இந்நிலையில் வாசகர் தொகை சிறிது சிறிதாக அதிகரித்தது.

மீண்டும் இது இடப்பற்றாக்குறை காரணமாக துறைமுகம் சந்தியில் உள்ள அமரர் தம்பு கந்தையாவின் மூலைக் கடைக் கட்டிடத்திற்கு இடம் மாற்றப் பட்டது. இது ஒரு சுண்ணாம்பு கட்டிடம்.

நாளுக்கு நாள் வாசகர் கூட்டம் கூடிக்கொண்டே இருந்தது. பத்திரிகைகள், சஞ்சிகைகள், கதைப்புத்தகங்கள் சேர்ப் பதில் இளைஞர்கள் மாணவர்கள் பலர் ஆர்வம் காட்டினார்கள். திரு.குணரட்ணம் தலைமையில் வாசகர் வட்டம் ஒன்று உருவாகியது. இதற்கு அப்புக்காத்து த.கனகசபை ஆலோசகராக இருந்தார்.

காலை வேளைகளில் துறைமுகச் சந்தி பகுதி சனசந்தடி நிறைந்து, சத்தம் சலசலப்பு, மாட்டு வண்டி சத்தங்கள், மக்கள் கூட்டத்தினர் அமைதியற்றும் காணப்பட்டது. எனவே அமரர் தம்பு கந்தையா அவர்களின் ஆலோசனையில் துறைமுகம் சந்தியில் இயங்கி வந்த இந்த வாசிகசாலையை நிரந்தரமான ஒரு கட்டிடத்திற்கு மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. வாசிப்பதற்கும் அமைதியான இடம் ஒன்று தேவைப்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தில் எமது கிராமத்தின் வாசிகசாலை முன்னோடி களான அமரர்கள் செ.இராசரட்ணம், க.சிவசம்பு, வே.யோகநாதன், தம்பு கந்தையா மற்றும் எம்முடன் இருக்கும் திரு தம்பு சுப்பிரமணியம் போன்றவர்கள் புதிய கட்டிடம் ஒன்று கட்டுவதற்கு தயாரானார்கள். இதற்காக திரு.தம்பு சுப்பிரமணியம் தலைமையில் நிதி சேகரிக்கப்பட்டது. இதற்கு முன்னால்

யாழ் மாநகர சபை உறுப்பினர் அமரர் பொ.நடராசா அவர்கள் பொறுப்பாளராக இருந்தார்.

இவர்களினதும் மற்றும் பொது மக்கள், இளைஞர்கள் ஆகியோரின் அயராத உழைப்பில் எமது கடற்கரையில் சந்தைக்கட்டிடத்திற்கு அருகில் கட்டிட வேலைகள் தொடங்கின. சீமெந்து கற்கள் பல இடங்களில் இருந்தும் கொண்டு வரப்பட்டன. அமரர்களான மேசன் பொன்னுத்துரை அவர்களும் அமரர் சோமசுந்தரம் அவர்களும் எமது இளைஞர்களும் சேர்ந்து சலுகை அடிப் படையில் திறமையாக கட்டி முடித்தார்கள்.

எமது கடற்கரையில் அமிழ்ந் திருந்த அமரர் செல்லையரின் நீராவி படகின் சில இரும்பு சட்டங்களும் கட்டிடத்திற்கு பாவிக்கப்பட்டன. புதிய வாசிகசாலை கட்டிடம் 1951 ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பாவனைக்கு திறந்துவைக்கப்பட்டது.

1957, 1958 ஆம் ஆண்டில் காலப்பகுதியில் Horlicks விற்பனை முகவர்கள் காலத்திற்கு காலம் மாலை வேளைகளில் நிலையத்திற்கு வருகை தந்து நிலைய முன்றலில் பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் குறுந்திரைப் படங்கள் காண்பிப்பார்கள். இதனை ஒழுங்குபடுத்துபவர் பெரும் பாலும் அமரர்.செ.இராசரத்தினமாக இருப்பார். அப்படியொரு படக்காட்சியின் முடிவில் எமது நிலையம் சார்பாக துறைமுகம் சந்தி அமரர் நா.சிவகுருநாதன் ஒரு பாடலைப்பாடி Horlicks நிறுவனத்திடம் இருந்து ஒரு T.Shirt பரிசையும் பெற்றுக்கொண்டார். அவர் பாடிய பாட்டு "சிட்டுக்குருவி...... சிட்டுக்குருவி..... சேதி தெரியுமா" ...என்பது ஆகும்.

நிலையத்திற்கு ஒரு நிலைய கீதம் இயற்றும்படி திரு சி.இராசையா (தற்பொழுது சாவகச்சேரியில்) கேட்கப் பட்டார். அதன்படி தென்னிந்திய பாடகர். டீ.ஆர்.மகாலிங்கம் அவர்களின் "எம் திராவிடப் பொன்நாடே" எனும் பாடலின் மெட்டில்" எம் கொழும்புத்துறை நாடே" எனும் பாடலை இயற்றினார். இப்பாடல் இரண்டு சந்தர்ப்பங்களில் மட்டும் நாடகமேடையில் பாடப்பட்டு பின்பு கைவிடப்பட்டது. காரணங்கள் தெரிய வில்லை.

அக்காலத்தில் இந்நிலையத்தின் உறுப்பினர்களைக் கொண்ட திறமையான நாடகக் குழுக்கள் இருந்தன. அமரர்களான திரு.க.தெய்வேந்திரம் து.நவரட்ணம், ஆ.செல்வரட்ணம், செ.செல்வரத்தினம் பொ.வேலாயுதபிள்ளை, ஆச்சாரியார் கிஷ்ணப்பிள்ளை, பொ.குணசிங்கம், க.கணேசமூர்த்தி மற்றும் க.இராசதுரை, செ.பாலசிங்கம் க.சரவணபவன் போன்றோர் முன்னனி நடிகர்களாவார். இவர்களில் அமரர். திரு.க.தெய்வேந்திரம் நெறியாள்கையும் செய்யும் வல்லமை கொண்டவராயிருந்தார். எமது நாடகக்குழு விசேட அழைப்பின் பேரில் கிளாலி கிராமத்திற்குச் சென்று நாடகம் நடத்தி பாராட்டுப்பெற்றது. இதற்கு போக்குவரத்து வசதி செய்து தந்தவர் அமரர் அ.கனகசபை அவர்கள்.

எமது நிலையத்தின் நாடகக் குழுவின் நாடகங்கள் வெற்றிப்பாதையில் செலுத்தியவர்களில் ஹார்மோனிய வித்துவான் அமரர் அப்பா சின்னத்துரை என அன்பாக அழைக்கப்பட்ட க.கண பதிப்பிள்ளை இன்னும் நினைவிலுள்ளார். இவர் சிரமம் பாராது ஹார்மோனிய வாத்திய வசதிகளை தொடர்ந்து வழங்கிக்கொண்டிருந்தார்.

கடற்கரை நிலையத்தினரால் நடத்தப்பட்ட ஒரு விளையாட்டுப் போட்டியில் வினோத உடைப் போட்டிகளில் அமரர் பொ.வேலாயுத பிள்ளை முதலை வேடத்தில் உருமாறி

துண்டி சந்தியிலிருந்து கடற்கரை நிலையத்திற்கு வீதி வழியாக ஊர்ந்து வந்து பரிசைப் பெற்றுக்கொண்ட நிகழ்வும் ஒரு பதிவிலுள்ள மறக்கமுடியாத நினைவுக் குறிப்பாகும். இந்நிகழ்ச்சியை புகைப்படம் பிடித்துக்கொண்டவர்அமரர்.சி.கணேஸ் அவர்கள்.

கதை புத்தகங்கள் நண்பர் களிடையே பரிமாறி வாசிக்கும் பழக்கம் மிக அதிகமாக பரவியிருந்தது. இந்த வகையில் சிறிது காலம் தலைவராகவிருந்த அமரர் சின்னையா கணேஸ் அவர்கள் கல்கி, குமுதம், ஆனந்தவிகடன் போன்றனவற்றடன் பொன்னியின் செல்வன் போன்ற பிரசித்திபெற்ற சரித்திர புத்தகங்களையும் நண்பர்களிடையே பரிமாறிக்கொண்டார்.

பலமான கிரிக்கெட் குழுவும் உதைபந்தாட்ட குழுவும் இருந்தன. இவற்றில் அமரர்கள் செ.இராசரெட்ணம், க.சிவசம்பு, ஆ.புவனேந்திரநாதன், கனகசபாபதி, பொ.பேரம்பலம் மற்றும் த.கனகசபை (அப்புகாத்து) ஆ.சிவலோக நாதன் நண்பர் க.குணரட்ணம், வை.திருநாவுக்கரசு ஆகியோரும் பிரதான விளையாட்டு வீரர்களாயிருந்தனர்.

அமரர் தம்பு கந்தையாவினால் தென்னிந்திய இசைக்கலைஞர்களை வரவழைத்து ஒரு பிரமாண்டமான இசை விழா நடத்தப்பட்டது. 3 நாட்களுக்கு அவ்விழா ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. முதல்நாள் கடற்கரை நெசவு நிலைய கட்டிடத்தில் கோலாகலமாக ஆரம்பித்த விழா இட நெருக்கடி காரணமாக அடுத்த 2 நாட்களுக்கும் சந்திரசேகரப்பிள்ளையார் வடக்கு வீதிக்கு மாற்றப்பட்டது. இப்புதிய இடத்தினை அமரர்களான திரு.க.மார்க் கண்டு, பெ.தேவராசா மற்றும் எம்முடன் இருக்கும் திரு.அருளம்பலம் ஆகியோர் பொறுப்பெடுத்துக் கொண்டமை நினைவுகளில் நிறைந்துள்ளது. இவ்விழா வின் போது கோயில் வடக்கு வீதியில் ஐயர் வீட்டு வாசல் அருகில் தம்பு கந்தையாவின் வேண்டுகோளின்படி தேநீர்சாலை அமைத்து பொதுமக்களுக்கு தேநீர் வழங்கியவர்கள் அமரர்.ச.இராசையா தலைமையில் திரு.சி.தனபாலசிங்கம் திரு.க.ஜெகநாதன் ஆகியோர்.

1960 ஆம் ஆண்டு பிற்பகுதியில் நடத்தப்பட்ட ஒரு சிறுகதை, கட்டுரை போட்டியில் திரு.த.தில்லைநாதர், திரு.ஆ.சிவலோக நாதன், திரு.சி.இராசையா (சாவகச்சேரி), அமரர்கள் கனகசபாபதி, க.அரியநாயகம் ஆகியோர் பரிசுகளைத் தட்டிக் கொண்டனர். இப்போட்டிக்கு மத்தியஸ்தராக கடமையாற்றியவர்கள் அமரர் செல்வராசா வாத்தியார் அவர்களும் செல்வி முத்து மங்கையற்கரசி அவர்களும் இவர்களின் அளப்பரிய சேவை இப்பொழுதும் நினைவுகளின் பதிவிலுள்ளன. இதற்கான பரிசில்களையும் அமரர் செல்வராசா (வாத்தியார்) அவர்களே அன்பளிப்புச் செய்திருந்தார்.

எமது நிலைய கிரிக்கெட் அணி துண்டி மைதானத்தில் அயலவர்களான மேரிஸ் அணியுடன் விளையாடி பலத்த போட்டியின் மத்தியில் வெற்றி பெற்றிருந்தனர். அந்த அணியில் எமது வீரர்கள் அமரர்.செ.இராசரெத்தினம், பொ.பேரம்பலம், கனகசபாபாதி, ஆ.புவனேந்திரநாதன் மற்றும் வை.திருநா வுக்கரசு, ஆ.சிவலோகநாதன், க.குண ரட்ணம் ஆகியோர் சிறப்பாக விளையாடி யிருந்தனர். 1962 - 1963 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நெருக்கடி நிலை ஏற்பட்டதன் காரணமாக பத்திரிகை போடுவதில் சிக்கல் உன்று ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் தாமாக முன்வந்து பத்திரிகைகள் அன்பளிப்புச் செய்தவர்கள் அமரர் சுந்தரம்பிள்ளை அவர்களும் செ.கந்தசாமி அவர்களும் ஆவார்கள்.

எமது கடற்கரை நிலையத்தின் நிர்வாக உறுப்பினராயிருந்த அமரர் பாலசிங்கம் கொட்டடியிலிருந்து வந்து எமது கிராமத்தில் திருமணம் செய்து எம்முடன் வாழ்ந்து வந்தவர். ஆரம்ப காலத்தில் பத்திரிகை படிப்பதற்காக வெளிவிறாந்தையில் போடப்பட்ட நீளமான மேசையொன்றை தமது செலவில் முன் வந்து செய்து எமது நிலையத்திற்கு பாவனைக்கு தந்துதவியமை ஞாபகத்தில் மீட்டக்கூடிய ஒரு சம்பவமாகும்.

இக்காலப்பகுதியில் புரட்சித் தலைவர் MGR திரைப்படங்கள் கொடிகட்டிப் பறந்து 200 நாட்களை திரையரங்கில் தாண்டிய பொழுது அதைக் கொண்டாடும் நோக்கத்துடன் எமது நிலைய உறுப்பினர்களில் சிலர் குறிப்பாக அமரர்கள் து.நவரட்ணம், க.இரத்தினம், செ.சண்முகசுந்தரம் மற்றும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் நண்பர் அ.தங்கவேலு ஆகியோர் முன்னின்று பெரிய கிடாரங்களில் பால் பாயாசம் தயாரித்து கடற்கரை நிலைய முன்றலில் போக்குவரத்து செய்யும் பொதுமக்களுக்கு தாராளமாக வழங்கி மகிழ்ந்திருந்த அப்பொற்காலம் ஒருபோதும் எம் நினைவை விட்டகலாது. இங்கே மிக முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் என்ன வென்றால் இந்நிகழ்வை MGR கொள்கையாளர்கள். அவர்களின் 'சமதர்ம" கொள்கைப்படி அங்கே கூடியிருந்த மக்களில் முதலாவது பிரமுகராக பாயாசத்தை பெற்றுக் கொள்வதற்கு அழைக்கப்பட்டவர் அமரர் மயிலப்பா அவர்கள் பெற்றுக்கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்ச்சிகளை மிகத்துல்லியமாகவும் சிறப்பாகவும் புகைப்படம் பிடித்தவர் எமது நண்பர் அ.தங்கவேலு அவர்கள்.

பொதுவாக அந்நாட்களில் கடற்கரை வாசிகசாலைக்கான நிதி சேகரிப்பு விடயங்களில் வீடு வீடாகச் செல்லும் குழுவினர் திரு.தம்பு சுப்பிரமணியம் அவர்களின் டோலக், மேளத்துடனும் அமரர்.செ.சோமசுந்தரம் மற்றும் அப்பையா ஆகியோரின் "பைலா" நடனத்துடனும் வெள்ளாந்தெருவிலிருந்து வந்து எமது கிராமத்தில் திருமணஞ்செய்து இப்பொழுதும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் திரு.கந்தசாமி அவர்களின் பெற்றோல் மக்சின் வெளிச்ச உதவியுடன் நிதி சேகரித்து வந்ததும் தினமும் நினைவிலுள்ள ஒரு நினைவுக் குறிப்பாகும்.

இவ்வாறான எனது மனதில் நிலைத்து நிற்கும் சில குறிப்புக்களை எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதி அதனை என்னிடம் கோரி அதனை இவ் மலரில் பிரசுரிக்க முடிவுசெய்த நடப்பு வருட நிர்வாகிகளை மனதாரப் பாராட்டு கிறேன். அத்துடன் என் மீது நம்பிக்கை வைத்து இதனைக் கோரிப் பெற்றுக் கொண்டமைக்காக எனது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செழிப்புடன் நீடு வாழ்க எம் நிலையம்

# அழியா நினைவுகள்



திரு. க. நடராசா
முன்னாள் தலைவர்
கொழும்புத்துறை சனசமூக நிலையம்

கல்வி, செல்வம், வீரம் தழைத் தோங்கும் புண்ணிய பூமியான கொழும்புத்துறை வீதியில் சந்தைக்கு அருகாமையில் இயங்கி வந்த சனசமூக நிலையம் 1967 ஆம் ஆண்டு ஒரு புதிய நிர்வாகம் அமைத்து இரண்டு வருடங்களாக நமது தலைமையில் தினசரி பத்திரிகைகளை போடுவதும் சிறுசிறு அபிவிருத்தி திட்டம், கல்வி, கலை, கலாசாரம் என்பவற்றை மேலோங்க செய்யப்பட்டது.

மேற்படி நிர்வாகத்திற்கு ஆக்க பூர்வமாக நமது நிர்வாகத்துடன் சின்னையா தனபாலசிங்கம் உறுதுணை யாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அதன்பின்பு மேற்படி சனசமூக நிலைய கட்டடம் 3 ஆம் குறுக்கு வீதியில் அமரர் திரு.தம்பு கந்தையா அவர்களின் முயற்சியினால் புதிதாக அமையப்பெற்ற கட்டிடத்தில் மிக சிறப்பாக இயங்கி வந்தது. 1993 ஆம் ஆண்டு எமது தலைமையில் திறமையான நிர்வாகம் ஒன்று அமைந்தது. மேற்படி நிர்வாகத்தினால் மிக பாரிய அளவிலாக அபிவிருத்தி, கல்வி, கலை, கலாசாரம், சுகாதாரம் போன்றவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து செயற்படுத்தப்பட்டது. அக்காலப்பகுதியில் நிர்வாகம் செய்து வந்த முக்கிய அபிவிருத்தி திட்டங்கள்

1993, 1994, 1995 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நடந்த ஆண்டு விழாக்களில் 3ஆம் குறுக்கு வீதி முழுமையாக அலங்கரிக்கப்பட்டு கொழும்புத்துறை வீதியிலிருந்து பாண்ட் வாத்தியம், மங்கள வாத்தியம் முழங்க பிரதம விருந்தினர்கள் நிலைய மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டார்கள். இந் நிகழ்வுகள் கொழும்புத்துறை கிராமமே கோலாக லமாக கொண்டாட்டத்தில் மூழ்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

சனசமூக நிலையத்தை சூழவுள்ள சிறுவர் பூங்கா, அரங்கு மைதானம் ஆலய மைதானம் ஆகியவற்றில் மழை காலத்தில் பல அடி உயரத்திற்கு நீர் தேங்கி நின்றதை யாழ் மாநகர சபை உதவியுடன் 176 ரைக்ரர் லோட் மணல் கொண்டு உயர்த்தி வெள்ளம் தேங்காதவாறு சீர்செய்யப்பட்டது.

கடந்தகால அனர்த்தங்களின் போது மின்சாரம் முழுமையாக இல்லாமல் இருந்த போதும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாமல் தடுப்பதற்காக இலவசமான பல வகுப்புகளுக்கும், பெற்றோல் மாக்ஸ் பொருத்தி இவ்வூரின் ஆசிரியர்கள் துணைகொண்டு இரண்டு மணித்தியாலம் தாமாகவே படிப்பதற்கும் விளங்காத கேள்விகளுக்கு ஆசிரியர்க ளிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தோம். பின்பு லைற் என்ஜின் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டது.

இக்காலகட்டத்தில் 3ஆம் குறுக்கு சந்தி மற்றும் 3 குறுக்கு வீதியில் 2 ஆம் 4ஆம் குறுக்கு வீதிகள் இணையும் சந்தியில் விபத்துகள் அடிக்கடி நேரும் பட்சத்தில் விஸ்தரிக்கப்பட்டன.

மாதந்தோறும் பௌர்ணமி கலை விழாவை ஒழுங்குபடுத்தி கலை கலாசாரத்தை வளர்க்க எமது நிர்வாகம் பாடுபட்டது. மேற்படி மூன்று வருட ஆண்டு விழாக்களில் மாணவர்களின்

கல்வியை மேம்படுத்தும் முகமாக புலமைப்பரிசில் க.பொ.த.சாதாரண பரீட்சை, க.பொ.த. உயர்தர பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சிறப்பு பரிசில்கள் வழங்கப்பட்டது.

கடந்தகால அனர்த்தங்களினால் எமது கிராமத்திற்கு 2003 ஆம் ஆண்டு பாதுகாப்பு வலயம் தவிர்ந்த பிரதேசங்க ளில் எம்மை மீள்குடியேற அனுமதித்தார் கள். அப்போதைய சனசமூக நிலையம் அரங்கு முழுமையான சேதத்துக்கு உள்ளாகி இருந்தது. உடனடியாக எம் ஊர் இளைஞர்களை ஒன்று திரட்டி சனசமூக நிலைய செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்து சனசமூக நிலைய கட்டடத்தை முழுமையாக அகற்றி இரு மாடிகள் கொண்ட சனசமூக நிலையம் கட்டுவதென்றும் அதுவரை தற்காலிகமாக ஆலய காணி கடையிலுள்ள கட்டடத்தில் பாலர் பாடசாலையையும் தற்காலிகமாக சனசமூக நிலையத்தை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது கிராமத்தினை நிலையம் சார்பாக இளைஞர்களை ஒன்று திரட்டி எமது கிராமத்தின் வீதிகள் யாவும் துப்பரவு செய்யப்பட்டு டைக்ரர் வாகனம் மூலம் கழிவுகள் அகற்றப்பட்டன. பின்பு சனசமூக நிலையத்தின் கட்டிடங்கள் யாவும் இடிக்கப்பட்டு புதிய மாடிக் கட்டிட வேலை நடைபெற தொடங்கியது. குறிப்பாக எம் ஊர் இளைஞர்களின் சிரமதானப் பணி பாராட்டுவதற்குரியதும் வியக்கத்தக்கதாகவும் அமைந்தது. போதிய நிதி வசதியின்மை காரணமாக புலம் பெயர்ந்து வாழும் எம் நெஞ்சங்களிடம் இருந்தும் கணிசமான நிதியை பெற்று கீழ் மாடிக் கட்டடம் பூர்த்தி செய்யப்பட்டு திறப்பு விழா மிகவும் சிறப்பாக நடந்தேறியது.

நமது தலைமையிலான நிர்வாக உறுப்பினர்கள் பொதுமக்கள் என இவ் வேலைத்திட்டங்களுக்கு இரவு பகல் என்று பாராமல் ஒத்துழைப்பு நல்கிய பாராட்டத் தக்கது. அக்காலப்பகுதியில் நிர்வாகம் பாரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொண்டதில் சில திட்டங்களை குறிப்பிட விரும்புகின்றேன்.

அப்போதைய யாழ் மாநகர சபை முதல்வர், உதவி முதல்வருக்கு எமது அரங்கின் அவலநிலையை நேரில் அழைத்து காண்பிடித்து உடனடியாக அரங்கை கட்டித்தருமாறு கோரியதற் கிணங்க ரூபா பதினேழு லட்சம், மதிப்பிட்டு அரங்கு கட்டப்பட்டு திறப்பு விழாவும் சிறப்பாக நடந்தேறியது.

கொழும்புத்துறை சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தை மேம் படுத்தும் முகமாக விளையாட்டுக் கழகத்திற்கு விநாயகர் விளையாட்டுக் கழகம் என பெயர் சூட்டப்பட்டு சனசமூக நிர்வாகத்துடன் மேற்படி கழகம் எமது காலப்பகுதியில் ஆண்டு விழாக்களை திறம்பட செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

சனசமூக நிலையத்திற்கு தேவை யான பிளாஸ்ரிக் கதிரைகள், மேசைகள், அலுமாரிகள் பாலர் பாடசாலைக்கு தேவையான சீருடைகள், தளபாடங்கள் போன்றவற்றை அந்தந்த சார்பு நிறுவனங்களிடம் இருந்து இலவசமாக பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கீழ் மாடிக் கட்டடத்திற்கு பிரதேச செயலருடன்தொடர்புகொண்டு "கமநெகும" வேலைத்திட்டத்தில் முழுமையான மின்சாரப் பொருட்கள் அறவிடும் மின் மானி இலவசமாக பெற்றுக் கொண்டமை.

எமது நிர்வாகம் மேற்படி பாரிய அபிவிருத்தி திட்டங்களை செய்து முடித்தமைக்கான காரணம் நிர்வாகத்தின் ஒற்றுமை, பொது நல தொண்டு என கருதி முழுமையான பங்களிப்பை வழங்கிய நிர்வாக உறுப்பினர்கள், பொது மக்கள் என இவர்களையே சாரும்.

# கொழும்புத்துறை சனசமூக நிலைய ஆரம்பமும் அதன் வளர்ச்சிப் பாதையின் படிகளும்



திருமதி சோமேஸ்வரி சிவகுமார்
கொழும்புத்துறை.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்ற திருவள்ளுவரின் வாக்கிற் கிணங்க எண் என்று சொல்லப் படுபவை யும் எழுத்து என்று சொல்லப் படுபவை யுமாகிய இவ்விரண்டும் வாழும் மக்களுக்கு "கண்கள்" என்று சொல்லுவர். இத்தகைய கண்களை ஊர்தோறும் வளர்த்தெடுப்பதில் பெரும்பங்கு வகிப்பது சனசமூக நிலை யங்கள் என்றால் மிகையாகாது.

கிராமங்கள் அல்லது நகரங்களில் மக்களை ஒன்றிணைத்து அவர்களிட முள்ள அறிவு, ஆற்றல், பண்பு, விழுமியங் கள் என்பவற்றை விருத்தி செய்வது சனசமூக நிலையங்களே.

இந்த வகையில் 1950 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் எமது கிராமத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் தமது வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்துவதற்காக யாழ் மாநகர சபை நூலகத்தையே நாடினர். இந்நிலையை கருத்திற்கொண்ட எம்மூர் பெரியோர் களும் இளைஞரும் ஒன்றுகூடி ஆலோசித்தனர். இவர்கள் பல தடவை ஒன்று கூடி ஆலோசித்து முடிவாக சனசமூக இவ் ஆலோசனைக் கூட்டங் களில் அமரர்களான செ.பரஞ்சோதி, செ.யோகநாதன், த.சிவசம்பு, செ.மாணிக்க வாசகர், மற்றும் திரு.செ.பரமசாமி என்போர் கலந்து கொண்டனர். இதன் பயனாக 1951ஆம் ஆண்டிலே மாநகர சபைக்கு சொந்தமான பிரதான வீதியிலுள்ள காணியில் ஒரு நிரந்தர கட்டிடத்தை அமைத்தனர். இதற்குரிய நிதியை தெருக்கூத்துக்கள் நடத்தியும், ஊர்தோறும் சென்று நிதியை சேகரித்தும் கொண்டனர். அத்துடன் அக்கட்டிட வேலைகளில் இளைஞர்களின் உடல் உழைப்பும் பிரதான உதவியாயிருந்தது. அக்கட்டிடத்தின் அடிக்கல் நாட்டு வைபவத்திற்கு பிரபல வழக்கறிஞர், பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஜீ.ஜீ.பொன் னம்பலம் அவர்கள் அழைக்கப்பட்டு அவரினால் அத்திவாரக்கல் நாட்டப் பட்டது. சனசமூக நிலையத்தின் முதலாவது தலைவராக திரு.செ.பரஞ் சோதி அவர்களும், காரியதரிசியாக திரு.செ.யோகநாதன் அவர்களும், தனாதிகாரியாக திரு.வே.யோகநாதன் அவர்களும் தெரிவுசெய்யப் பட்டனர்.

1979 ஆம் ஆண்டளவில் பிரதான வீதியில் இயங்கிய சனசமூக நிலைய மானது, தற்போதைய இடத்திற்கு இடம்மாறியது, இருந்த திரு.வெ.யோகேஸ் வரன் அவர்களின் நிதியுதவியுடனும் (30,000/-) மாநகர சபை உறுப்பினர் தம்பு கந்தையாவின் ஆதரவுடனும் ஊர்ப் பெரியவர்களின் வழிகாட்டுதலுடனும், இளைஞர்களின் முயற்சியாலும் தற்போதைய கட்டிடம் உருப்பெறத் தொடங்கியது. நிலையத்தின் வளர்ச்சி நிதிக்காக சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் நிலைய மைதானத்தில் திரைப்படங்கள் திரையிடப்பட்டன. நிலைய இளைஞர்களால் ஆக்கிய பிளாஸ்ரிக்காலான பூ மாலைகள் வாடகைக்கு விடப்பட்டது. கதிரைகள்

கொள்வனவு செய்யப்பட்டு வாடகைக்கு விடப்பட்டது. எமது ஊரின் அடையாளச் சின்னங்களான ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையாரும், துரையப்பா வித்தியால யமும் சுற்றி இருக்க மைதான வசதியுடனும் எமது நிலையம் கம்பீரமாக காட்சி யளிக்கின்றது. அக்காலத்தில் ஆண்டு தோறும் ஆடி மாதத்திலேயே விளை யாட்டுப்போட்டிகளும், கலைவிழாவும் நடைபெற்றது.

1982, 1983 ஆம் ஆண்டுகளில் இல்லங்களான கம்பர், பாரதி, வள்ளுவன் என பிரிக்கப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் விமரிசையாக நடைபெற்றன. இவ்வாறு படிப்படியாக முன்னேறி மாலை நேரக்கற்றல் வகுப்புக்கள் நடத்தப் பட்டது. இவ் வகுப்புக்களானது குறைந்த கட்டணத்துடன் ஆற்றல் மிகுந்த ஆசிரியர் களினால் நடத்தப்பட்டது. இது எம்மாணவர்களுக்கு பெரும் ஊக்குவிப் பாக இருந்ததால் அக்கால கல்விப் பெறுபேறுகள் உயர்வடைந்தன. இக் காலத்திலே முன்பள்ளியும் வளர்ச்சி யடைந்தது.

1999 ஆம் ஆண்டளவில் தற்போது முன்பள்ளி இயங்கும் கட்டிடமானது கட்ட மூலப்பொருட்களையும் அதற்குரிய கூலியையும் (1,22000/-) யாழ் மாநகர சபை வழங்கியது. அப்போது நாட்டிலே நிலவிய அசாதாரண நிலையால் எம்மூர் மக்கள் அனைவரும் ஊரையே விட்டு இடம்பெயர்ந்த நிலையில் வந்த மூலப்பொருட்களையும், நிதியையும் திரும்பவிடாது (தலைவர் திரு.செ.இராச ரத்தினம், செயலாளர் திரு.சி.அன்னலிங்கம், பொருளாளர் திரு.சு.வரதராஜன்) சொல்ல முடியாத கஷ்டங்களுக்கு மத்தியில் கட்டிமுடித்தனர். ஆனால் மிகக்குறுகிய காலத்தில் பலத்த செல்வீச்சுக்களாலும் குண்டுத் தாக்குதல்களாலும் இக்கட்டிடம் சேதமடைந்தது. 2012 ஆம் ஆண்டளவில் முன்னால் தலைவரான க.தெய்வேந் திரம் அவர்களின் குடும்பத் தினரால் முன்பள்ளி புனரமைத்துக் கொடுக்கப் பட்டது.

இவ்வாறாக காலங்காலமாக எமது ஊர்ப் பெரியார்களினதும், இளைஞர் களினதும் விடாமுயற்சியால் வளர்ச்சி யடைந்த சனசமூக நிலையம் தற்போதும் தொடர்ந்தும் ஆண்டு தோறும் சித்திரை மாதம் சித்திரைப் புத்தாண்டு விழாவை விநாயகர் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து கொண்டாடி வருவது வரவேற்கத்தக்கது.

இனிமேலும் வளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் செல்லும் என்பதில் ஐய மில்லை.

# காலத்தால் அழியா நினைவுகள்



திரு. க.குணரட்ணம்
முன்னாள் செயலாளர், பொருளாளர்,
கொழும்புத்துறை சனசமூக நிலையம்.

"புதினமான செய்திக்கு பஞ்ச மில்லை என்ற நேரத்தில் புதியதொரு செய்தி துடிப்பான செய்தி புதைந்த நெஞ்சுடன் காலையில் காங்கேயன் கதையொன்று உங்களுடன் என்று கண்முன்னே நின்றான். கதை நீ என்றேன்..... கடந்த கால வரலாற்றை கண்டவை கேட்டவற்றை எனக்குரைப் பீரா என்றான். எந்த வரலாறு வேண்டும் தம்பி என இனிதாக இயம்பினேன். அந்த வரலாறு அதாவது எமது வாசிகசாலை வந்த வரலாறு வேண்டுமென்றான் தம்பி முடிந்தவரை எழுதுகிறேன். வந்தெடும் என்றேன் தும்பிக்கையான் துணை கொண்டு நம்பிக்கையுடன் எழுதுகிறேன்" சுருங்கக்கூறி விளங்கக் கூறி என்ற நல்மொழியுடன் உங்கள் முன் உள்ளதைப் பகிர்கின்றேன்.

ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன் மணலியந்துறைக்கு மாபெரும் சோதனை வந்தது. கொழும்பிலிருந்து வந்திறங்கிய அன்னியர்களால் மணலியந்துறை கொழும்புத் துறையானது.

என்றாலும் வாசனை திரவியத்திற் காக வந்திறங்கிய அந்நிய தேசத்தான் அதில்லை என்றவுடன் மதமாற்றத்திற்கு இறங்கினான். தேவாரம் படியோர் மட்டும் மதம் மாறாத வீரம் செறிந்த மண்ணாக இருந்தது. எல்லா கரையோர மண்ணும் மதம்மாறியது ஆனால் மணலியம்பதி மட்டும் மதம் மாறவில்லை. முத்திசையும் கோயில் முக்குறியோரின் ஆட்சி தூய தமிழின் வாசம் இது முதல் வரலாறு இனித் தொடர்வோம்.

பனந்தோப்பும் தென்னந்தோப்பும் கடல் வாணிபம் கப்பல் கட்டும் தொழில் இவைகள்தான் நம் கிராமத்தின் தொழில் வளம், குடிசைக் கைத்தொழில் பெண் களின் வருமான வழியாகும். ஆணுக்குப் பெண் சரிநிகர் உழைப்பாளிகள். எல்லாவற்றிற்கும் மேலாக ஆன்மீகபலம் ஆன்மீக சிந்தனைகள் இங்கு பெரிதாக மேலோங்கி நின்றது அன்று.

திண்ணைப்படிப்பு, பயன்சொல்லல், மகாபாரதப்படிப்பு, கந்தபுராண படிப்புக்கு எமதூராரை விட ஆதியில் இங்கு எவரும் இருந்ததாக இல்லை.

அன்றைய பெரியோர்கள் எம தூரில் என்னவளம் இல்லை யென்று கண்டுபிடித்து நிவர்த்தி செய்வதில் முனைப்பாக இருந்தார்கள். ஒன்று 1951 ஆம் ஆண்டுவரை சனசமூக நிலைய மில்லை. 1965 ஆம் ஆண்டு வரை எமது ஊரில் பாடசாலையில்லை. இதில் 1951 இல் தனது வீட்டில் ஒரு மேசை இரு வாங்குடன் ஆரம்பித்து வைத்தவர்தான் நிலையத்தில் முதல் தலைவர் அமரர் க.செல்லையா. அன்றைய இளையோரால் உருவாக்கப்பட்ட நிலையத்தின் முதல் செயலாளராக செ.யோகநாதன் (பிரபல எழுத்தாளர்) திகழ்ந்தார். முதன்முதலில் வீரகேசரி, தந்தி, தினகரன் ஆகிய பத்திரிகைகள் வாசிப்பதற்காக இடப்பட்டன. பின்னர் 1952 இல 9, 1ம் குறுக்கு வீதியில் இரண்டாவது கட்டிடம் அமைக்கப்பட்டது. அது விசைப் படகுகளின் தேக்கம் பலகை கிடுகினால் அமைக்கப் பட்டது. அந் நிகழ்வுக்கு அப்போது திரு.G.G.பொன்னம்பலம் (Q.C)

இதய பூர்வமாக வருகை தந்ததாகக் குறிப்பிடலாம். இதன் பின்னர் 1956 இல் மூன்றாவது கட்டிடம் 2ஆம் குறுக்கு மீன் சந்தைக்கு அருகில் அமைக்கப்பட்டது.

முதன்முதலாக செயலாளராக தெரிவு செய்யப்பட்ட செ.யோகநாதன் என்பவரால் (1967 – 1972) வசந்தம் என்ற கலை இலக்கிய மாத இதழ் வெளியிடப் பட்டமை குறிப்பிடத்தக்கது. மேற்படி நிலையத்தில் மற்றும் பொதுசன நூலகத்தில் இலவசமாக விநியோகிக்கப் பட்டது. வேறு 25 குறுநூல்கள் 10 மேற்பட்ட நாவல்களும் 500 இற்கு மேற் பட்ட சிறுகதைகள் வெளியிடப்பட்டது.

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி மற்றும் முதல்வர் ஜெயலலிதா அவர்களாலும் தமிழக அரசின் "சிறந்த எழுத்தாளருக்கான விருது வழங்கப் பட்டது. எமது நிலைய முதல் செயலாளருக்கே இரு முதலமைச்சர் களினால் விருது வழங்கப்பட்டது. அன்றைய இலங்கைப் பிரதமர் ஜெ.ஆர். ஜெயவர்த்தனா அவர்களால் சாகித்திய மண்டல பரிசு வழங்கப்பட்டது. முதன்முதலில் 50 ஆண்டின் முன் பின் 65 வரை படித்து பட்டம் பெற்று சென்றவர்கள் அமரர்களான மாணிக்க வாசகர், செ.பரமசாமி, திரு.தம்பு தியாகராசா புலமைப்பரிசில் சென்ற வே.தங்கவேல் நாலாவது பட்டதாரியாக வெளிவந்த செ.யோகநாதன் இவர்கள் ஆரம்ப நிலைய நிர்வாகத்தில் இடம் பெற்றவர்கள்.

அதன்பின்பு துரையப்பா வித்தி யாலயத்திற்கு முன்னால் உள்ள குளம் நிறுவப்பட்டு புதிய வாசிகசாலை அமைக்கப்பட்டது. அத்துடன் ஆசிரியை செல்வி முத்து மங்கையற்கரசி அவர்களும், அமரர் திருமதி நல்லதம்பி பரமேஸ்வரி அவர்களும் எமது நிலையத்தில் கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர்கள். அவர்களை எமது ஊரின் இரு புருவங்கள் என்றே கூறலாம். எமது நிலையத்தில் கடல்சார் போட்டிகள் வருடா வருடம் நடைபெறும். இதற்கு பரிசாக உணவுப் பொருட்கள் ஆரம்பத்தில் வழங்கப் பட்டது. பின்பு 1988 இல் தினகரன் விழாவில் கடல் சார் போட்டியில் பரிசு பெற்று ஊருக்கு பெருமை சேர்த்தார்கள் நம் முன்னோர்கள்.

வித்திட்ட விதையை வளர்த் தெடுத்து பெரு விருட்சமாக வளர இனிவரும் நிர்வாகத்தினர் திறம்பட செயற்பட்டு நிலையத்தையும் நமது கிராமத்தினையும் முன்னோக்கி கொண்டு செல்வார்கள் என்பதில் ஐயமில்லை.

# வாழ்வின் சிலபதிவுகள்

மண்ணின் புலம்பெயர் மைந்தன்
திரு. பொ.குகதாசன்
லண்டன்



முன்னொரு காலத்தில் கொழும்புக்கு போவதாக கொழும்புத்துறையாலே பயணம் மேற்கொள்ள வேண்டியதாக இருந்ததாக ஒரு வரலாறு உண்டு. அரசர்களின் இராச்சியம் நம் நாட்டில் இருந்த போது குறிப்பாக வெடியரசன் எனும் அரசன் விசுவாசமாக வழிபட்ட தலமே நமது ஐயனார் ஆலயமாகும். தற்போது காணப்படும் ஆழம் குறைந்த கிணறானது தண்ணீருக்கு தவித்து அம்பினால் எய்து உருவாக்கப்பட்ட தாகவும் மரபு ரீதியாக உள்ளது. இது அவரின் வழிபாட்டுக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

இத்தனை தொன்மை மிக்க எமது கிராமத்தில் ஏனோதானோ என்று தான் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார். ஏனெனில் நன்மைக்கு எதைச் சொன்னாலும் எதைச் செய்தாலும் யார் இவர் இதைச் சொல்வதற்கு நன்மை இருக்கிறது என்ற சிந்தனை கடுகளவும் இருக்காது.

குறிப்பிட்ட காலத்தில் அதாவது 1967 ஆம் ஆண்டு ஐயனார் ஆலயம் பழமையாக இருந்த காரணத்தில் அக்காலத்தில் இருந்த நிர்வாகத்தினர் ஆலயத்தை புனரமைப்பதற்காக உடைத் தார்கள். ஆனால் போதியளவு நிதியின்றி ஆலயம் அமைக்கபடாமல் அப்படியே இருந்தது. மீண்டும் 1974 ஆம் ஆண்டு மீண்டும் கும்பாபிஷேகம் செய்து ஆலயத்தினை மிளிரச்செய்தார்கள்.

இக்கோயிலின் முக்கிய பக்தர்களில் ஒருவர் தம்பு தியாகராசா ஆவார். ஐயனாரின் அருளில் இவருக்கு வாழ்க்கை யில் அநேக காரியங்கள் கைகூடின. அதேநேரம் அவரிடம் ஐயனாரின் மீது இருந்த அதீத பக்தியினால் அவரின் வாழ்க்கையை கோவிலுக்காக அர்ப்பணித் தார். அவர் சாதித்தது வார்த்தையால் சொல்லமுடியாது. அவர் என்ன நன்மைகளைச் செய்தார் என்று ஒருமுறை யேனும் எண்ணிப்பார்க்க வேண்டும் அதற்காக அவரின் ஞாபகார்த்தமாக ஏதேனும் செயலையாவது செய்துதான் உள்ளார்களா?

எமது ஊரில் அன்றுதொட்டு இன்று வரை குறைபாடு ஒன்றுள்ளது. அதாவது ஒரு பகுதியினர் நன்மை செய்தால் இன்னொரு பகுதியினர் அதில் குறைகண்டுபிடித்து இன்பமடைவார்கள். இவர்களின் செயற்பாடுகளையும் தாண்டி எமது கிராமம் முன்னேறி இருக்கின்றது என்றார் பெருமையடைகின்ற விடய மாகும்.

1976ஆம் ஆண்டளவில் நமது சனசமூக நிலையத்திற்கு தினசரி புதினப் பத்திரிகை போடுவதற்கு போதியளவு நிதி இருக்கவில்லை. அதனால் நாங்கள் சில நண்பர்களுடன் சேர்ந்து நாம் ஊருக்கு எங்களால் இயன்றதை செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் நிதி திரட்டும் முகமாக வாசிகசாலையோடு சேர்ந்து ஓலை அடைப்பை ஏற்படுத்தி திரையரங்கு போல் கிடுகுகளால் அடைத்து தொலைக்காட்சி சினிமா காண்பித்து அந்த நிதியில் சனசமூக நிலையத்தை நடத்தினோம்.

எமது மண்ணில் பிறந்தவர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் அவர்களின் சிந்தனையில் நிரந்தரமாக குடிகொண்டி

ருப்பது. எமது ஊரைப் பற்றிய சிந்தனையே. எமது ஊரின் முன்னேற்றத் திற்கு ஆக்கபூர்வமாக என்ன வேலை செய்யலாம் என்று சிந்திக்கிறார்கள். ஆனால் ஏதாவது நல்ல செயலைச் செய்து அதற்கு உபயம் செய்தவர்களின் பெயர்களை இட்டால் அப்படி பெயரிடக்கூடாது என்று ஒரு சிலர் தமது கருத்தை முன்வைப்பார்கள். அதனால் அது எப்படி சாத்தியமாகும்.

ஒருவர் செய்த செயல் கல் வெட்டிலோ, சாசனத்திலோ பதிக்கப் பட்டால் தான் வளரும் சமுதாயம் தாமும் செய்ய முன்வரும் என்பதைத் ஏன் விளங்கவில்லை. உதாரணமாக ஒரு கட்டிடத்தை கட்டியவர் இறந்தாலோ அல்லது வெளி இடம் சென்று வசித்தாலோ அவரின் சொந்தங்கள் சந்ததியினர் அதனைப் பாதுகாப்பதோ அல்லது உருவாக்கியது என்று பெயர் சூட்டப்படாமல் இருந்தால் எதிர்வரும் சந்ததியினருக்கு எதுவும் தெரியாது யாரும் உதவ முன்வர மாட்டார்கள். பெயர் பொறிக்கப்படுவதால் தான் எதிர்காலச் சந்ததியினரும் தாமும் செய்யவேண்டும் என்று முன்வருவார்கள். ஊரும் முன்னேற்றமடையும்.

எமது கிராமத்தின் பிரதான தொழிலாக இருப்பது தும்பு கைத்தொழிலும், கடற்தொழிலும் ஆகும். அதிலும் கடல் தொழிலில் பறிக்கூடு என்பது மிகவும் பிரதானமானது. எமது முன்னோர்கள் தொழில் நுட்ப வசதிகள் இல்லாத காலத்தில் தமது சிறந்த அறிவாற்றல் மூலம் கடலில் மீன்கள் செறிவாக இருக்கும் இடத்தை அறிந்து அதில் இக்கூட்டினை வைத்து மீன்களை பிடித்து தமது தொழிலை நடத்துவார்கள். அதுமட்டுமன்றி பெண்கள் தமது நாளாந்த கடமைகளை முடித்துக்கொண்டு ஓய்வான நேரங்களை வீணடிக்காமல் தேங்காயின் தோலினை கடலில் ஊற வைத்து அதனை துப்பரவு செய்து கயிறு, தும்புத்தடி போன்றவற்றை செய்வதுடன் நேர் வடங்கள் என்பனவும் செய்யப் படுகின்றது. இவ்வாறு தமது ஓய்வான நேரத்தினை பயனுள்ளதாக்கி பெண்கள் வருமானத்தை ஈட்டிக் கொள்கின்றனர்.

இவ்வாறு மேன்மையும் தொன் மையும் பெற்று விளங்கும் எமது ஊரை மேன்மேலும் சிறக்க வேண்டும் ஒற்றுமையுடன் மக்கள் அனைவரும் வாழவேண்டும் என்பதே எங்களின் ஆசை.

# எமது கிராமத்தின் வளர்ச்சிக்கு ஒற்றுமையே பலம்



திருமதி தேவிகா லோகேஸ்வரன்
பிரான்ஸ்

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இன்னாடே - அவர்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இன்னாடே - அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்த்து
சிறந்ததும் இன்நாடே இதை
வந்தனை கூறி மனதில் இருத்தி
வாயுற வாழ்த்தேனோ...

என்ற பாரதியின் வரிகள் எனக்கும் பொருந்தும். பொதுவாக எமது ஊர் என்றவுடன் எம்பாலித்துக் கொண்டிருக்கும் சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயமும் எமக்குக் கிடைத்த பள்ளித் தோழமைகளும் அவர்களுடன் போட்ட கும்மாளங்களும் மழைக்கால மேகங்களும் என்று அடுக்கிக்க கொண்டே போகலாம்.

வாழ்க்கை முழுவதையும் தன் பிள்ளைகளுக்காக அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் கருணை மிக்க தாய் போன்று எமக்கெல்லாம் வாழ்வாதாரமாக விளங்கும் கடல் தெற்கேயும் தென்னந் தோப்புகளும், ஈச்சங்காடுகளும், சிறு வயல் பரப்புகளும் அதன் நீர்ப்பாசனத்துக்கென அமைக்கப்பட்ட நெடுங்குளம் கிழக்கேயு மென ஒரு கிராமத்துக்குரிய எழில் கொஞ்சும் இயற்கை வனப்புகளும் நகரத்துக்குரிய வசதிகளும் ஒருங்கே அமையப் பெற்ற ஒரு சிற்றூர் எமது எனலாம்.

அன்றைய கால கட்டத்தில் கடலும் கடல்சார்ந்த வாழ்வுமென இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை வாழ்ந்து வந்தோம் தென்னை மரமும், கடலும் எமது வாழ்வில் முக்கிய பங்காற்றின. பொதுவாக பனை மரத்தையே கற்பகதரு என்றழைப்பது வழக்கம். ஆனால் எம்மைப் பொறுத்த வரை தென்னை மரமே எமக்குக் கற்பகதருவாக விளங்கியது எனலாம். அன்றைய கால கட்டத்தில் கல்வியாளர்கள் மிகக் குறைந்த விகிதத்தினரே காணப் பட்டனர். பெரும்பாலான குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழேயே வாழ்ந்து வந்தன. ஆனால் அத்தகைய சூழ் நிலையிலும் எம் முன்னோர்கள் எம் மண்ணையும் மக்களையும் வழிநடத்தத் தவறவில்லை. எமது ஊரில் நான்கு எல்லைகளிலும் உள்ள ஆலயங்களும், எமக்குக் கல்விக் கண்ணைத் திறந்து வைத்த நாமெல்லாம் சற்று நிமிர்ந்த எமது பாடசாலையும் கடற்கரைச் சுற்றாடலில் அமைக்கப்பட்டிருந்த ஆரம்பகாலச் சனசமூக நிலையமும் அதற்குச் சான்று களாகும்.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழிக்கமைய ஊரின் நாற்புறமும் கோவில்கள் அமைத்து வழிபட்டதோடு அதன்மூலம் சைவத்தையும் தமிழையும் கட்டிக்காத்து வந்தனர். மக்களை நல்வழிப்படுத்துவதில் ஆலயங்கள் முக்கிய பங்காற்றின என்றே கூறவேண்டும். எமது மக்களின் கல்வி நலனில் அக்கறை கொண்டு கல்விக் கூடமும் அமைத்தனர்.

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்.
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்ற பாரதியின் வரியை மெய்ப்பித்து எம்மூர் மக்களுக்கு ஓர் கல்விக் கூடம் வேண்டுமென்ற புனிதமான எண்ணத்தை தன் சிந்தனையில் கொண்டு மிக உயர்ந்த நோக்கத்துடன் எமது பாடசாலைக்கு அடிக்கல் நாட்டி எமது கல்விக்கு வித்திட்ட அமரர்.திரு.முத்தையா அவர்கள் என்றென்றும் எம்மால் நினைவு கூரப்பட வேண்டியவராவார். அவர் தொடக்கி வைத்த பணியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்று கல்வி வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்டு அதனைக் கட்டியெழுப்பியவர் மறைந்த எம் அதிபர் திரு.செல்வராசா அவர்களை யாராலும் மறக்கமுடியாது.


"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்பதை எத்தனையோ உதாரணங்கள் மூலம் எமக்குப் புரிய வைத்து ஊக்கமளித்து உற்சாகப்படுத்தி எம்மை சிறந்த கல்வியாளர்களாக்குவதற்கு அரும்பாடுபட்டவர். அவர் மறைந்து போனாலும் அவருடைய ஆன்மா பாடசாலை வளாகத்தை விட்டு வேறு எங்கேயும் போகாது.

மேலும் எமது சமூக வளர்ச்சிக்காக அமரர் திரு.தம்பு கந்தையா அவர்களும் முக்கிய பங்காற்றினார். தற்போதுள்ள எமது சனசமூக நிலையம் அவரது முயற்சியினாலேயே அமைக்கப்பட்டது. மக்களுக்குக் கல்வியறிவு மட்டும் போதாது. பொது அறிவும் தேவை என்பதை மனதில் கொண்டு அதற்காக அரும்பாடுபட்டார். எமது சமூகத்தைக் கட்டிக்காத்த இவர்கள் அனைவரும் காலவெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட எமது மண்ணில் வீசிய யுத்தப் புயலால் சேதமடைந்து இருண்டு கிடந்த ஊரை தனியார் வழிநடத்தப் போகிறார்கள் என்ற கேள்வி எம்முன் எழுந்த வேளையில் இளைஞர்கள்தான் நாட்டின் முதுகெலும்பு என்பதை நிரூபித்துக் காட்டும் வகையில் எமது இளைஞர்கள் சமூகநல நோக்குடன் சமுதாய வளர்ச்சிப் பணிகளில் தம்மை ஈடுபடுத்தி வருவது போற்றப்பட வேண்டிய விடயமாகும். சனசமூக நிலையத்தின் வாயிலாக இவர்கள் ஆற்றிவரும் பணிகள் எமது சமுதாயத்தை முன்னேற்றப்பாதைக்கு இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

நாம் பிறந்து மகிழ்ந்து வளர்ந்த புண்ணிய பூமியாக எமது கொழும்புத் துறை கல்வியாளர்கள் நிறைந்த ஊராகப் பரிணமித்து விட்டது. மருத்துவர், பொறியியலாளர், விரிவுரையாளர், அதிபர், ஆசிரியர்கள் எனப் பல துறைகளிலும் எமது இளைய சந்ததியினர் காலெடுத்து வைக்கத் தொடங்கி விட்டனர். இந்நிலை மென்மேலும் உயரவேண்டும். கல்லா தோரும் இல்லா தோரும் இங்கில்லை என்ற நிலை உருவாக வேண்டும். இனிவரும் காலங்களில் கல்விமான்கள் நிறைந்த ஊர் நமது ஊர் என்று எமது ஊரை நாம் அடையாளப்படுத்தும் நிலை உருவாக வேண்டும். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" ஒரு தேசத்தின் வளர்ச்சிக்கு ஒற்றுமையே பலம் என்பதை மனதில் கொண்டு நாம் ஒவ்வொருவரும் செயற்பட்டால் எம் சொந்த மண்ணைச் சொர்க்கமாக்கலாம் என்பதில் ஐயமில்லை.

# கரபந்தாட்டம்



இராசரட்ணம் சூசைராசா
பிரான்ஸ்

ஒரு வலையைத் தாண்டி கைகளால் பந்தைத் தட்டி ஆடும் ஆட்டம் கரபந்தாட்டம் ஆகும். ஆட்டம் விதிப்படி நடக்கின்றதா என்று சரிபார்க்கும் நடுவர் வலையின் ஒரு கோடியில் ஒரு சிறு மேடை மீது நின்று கொண்டிருப்பதைப் பார்க்கலாம்

கரபந்தாட்டம் என்பது ஓர் அணிக்கு ஆறு வீரர்கள் வீதம் உருவாக்கப்பட்ட இரண்டு அணி வீரர்கள் ஒரு வலையால் பிரிக்கப்பட்டு கைகளால் பந்தை அடித்து ஆடுகின்ற ஒரு குழு ஆட்டமாகும். ஒவ்வோர் அணியும் தங்கள் பகுதிக்கு அனுப்பப்பட்ட பந்தை அது தரையை தொடுவதற்கு முன் கைகளால் வாங்கி, தட்டி பின்னர் எதிர்ப்பக்கத்தினரின் பகுதியில் தரையைத் தொடும்படி அனுப்புகின்ற விளையாட்டு ஆகும். எதிர்ப்பக்கத்திற்கு பந்தை அனுப்ப ஒவ்வோர் அணியும் மூன்று தட்டுதல்கள் எடுத்துக் கொள்ளலாம். இவ்வாறு அனுப்பப்படும் பந்தை எதிரணியினரால் மூன்றே தட்டுதல்களில் திருப்பி அனுப்ப இயலவில்லை என்றாலோ, பந்து அவர்கள் பகுதிக்குள் தரையில் விழுந்தாலோ, மற்றைய அணிக்கு ஒரு புள்ளி வழங்கப்படும். கரபந்தாட்ட விளையாட்டிற்கென பல்வேறு விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. கரபந்தாட்டத்தை கையுந்து பந்தாட்டம் அல்லது வாலிபால் என்ற பெயர்களால் அழைக்கிறார்கள். கோடைகால ஒலிம்பிக் போட்டிகளில் ஒரு விளையாட்டாக கரபந்தாட்டம் 1964 ஆம் ஆண்டு முதல் விளையாடப்பட்டு வருகிறது.

கரபந்தாட்டத்திற்காக வகுக்கப் பட்டுள்ள முழுமையான விதிகள் விரிவான வையாகும். ஆனால் ஆட்டம் எளிமையாக பின்வருமாறு விளையாடப்படுகிறது.

ஆட்டத்தைத் தொடங்குகின்ற அணியிலிருக்கும் ஒரு வீரர் அவர் பக்க ஆடுகளத்திற்கு வெளியே நின்று பந்தை கைகளால் அடித்து வலைக்கு மேலாக அடுத்த அணியினரின் ஆடுகளப் பகுதிக்கு அனுப்புகிறார். பந்தைப் பெறுகின்ற எதிரணியினர் பந்தை அவர்கள் பக்க ஆடுகளத்தின் தரையில் விழவிடாமல் பார்த்துக் கொள்கிறார்கள். இதற்காக அவர்கள் அணியில் உள்ள மூன்று வீரர்கள் பந்தை மூன்று முறை தட்டுகிறார்கள். ஒரே வீரர் அடுத்தடுத்து இரண்டு முறைகள் பந்தைத் தட்டக்கூடாது என்ற விதி இங்கு பின்பற்றப்படுகிறது. எதிரணியினரால் அனுப்பப்படும் பந்தை பெறும் முதல் வீரர் கீழ்க்கையால் அல்லது தலைக்கு மேலேயே விரல்களால் பந்தைப் பெற்று பந்து வந்தவேகத்தைக் கட்டுப்படுத்தி இரண்டாவது வீரருக்கு அனுப்புகிறார். மூன்றாவது வீரர் பந்தை விசையுடன் அடித்து அனுப்புவதற்கு தோதுவாக இரண்டாவது வீரர் பந்தை தலைக்கு மேலே உயர்த்தி நிறுத்துகிறார். தாக்குதலுடன் அனுப்பப்பட்ட பந்தை எதிரணியினர் தங்கள் பகுதிக்குள் வரவிடாமல் தடுக்கின்றனர். அல்லது முதல் அணியினர் பந்தை அனுப்பியது போல இவர்களும் பந்தைப் பெற்று, தலைக்கு மேல் நிறுத்தி, விசையுடன் அடித்து விளையாட்டைத் தொடர்கின்றனர். எதிரணியினரின் ஆடுகளத்தில் பந்து

தரையைத் தொடும் ஒவ்வொரு முறைக்கும் ஒரு புள்ளி வழங்கப்படுகிறது. அடித்தெறியும்போது தவறு செய்தாலும், வலையைத் தொட்டுவிடுதல் போன்ற மற்ற தவறுகள் இழைத்தாலும் எதிர் அணிக்கு புள்ளி வழங்கப்படுகிறது. அடித்தெறியப் பட்ட பந்தை திரும்ப எதிர் அணிக்கு திருப்ப முடியாமல் போனாலும் எதிர் அணிக்குப் புள்ளி வழங்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட 25 புள்ளிகளை எந்த அணியினர் முதலில் ஈட்டுகின்றனரோ அந்த அணி வெற்றி பெற்ற அணியாக தேர்ந்தெடுக்கப்படுகிறது. ஆடுகளத்திற்கு வெளியே இருந்து ஓரணியின் வீரரால் அடித்தெறியப்படும் பந்து, இரண்டு அணி வீரர்களாலும் மூன்று மூன்று தட்டல்களில் திருப்பி அனுப்பப்படும் தொடர் நிகழ்வு ராலி எனப்படும். ஓர் அணியின் ஆடுகளப்பகுதியில் பந்து தரையைத் தொடும்வரை, அல்லது மூன்று தட்டல்களால் அடுத்த பகுதிக்கு பந்தை அனுப்பமுடியாத நிலை தோன்றும் வரை இந்த ராலி தொடரும். அடித்தெறியும் அணி ராலியை வெற்றி பெற்று புள்ளிகள் ஈட்டினால் அந்த அணிக்கு மீண்டும் அடித்தெறியும் வாய்ப்பு வழங்கப்பட்டு மீண்டும் ராலி தொடரும்.

பொதுவாக கரபந்தாட்ட விளை யாட்டின் போது பின்வரும் தவறுகள் வீரர்களால் இழைக்கப் படுகின்றன.

- எதிரணியினரின் ஆடுகளத்திற்கு வெளியே தரையைத் தொடுமாறு பந்தை அடித்து விடுதல்
- எதிரணியினரின் ஆடுகளத்திற்கு செல்ல முடியாதவாறு பந்தை வலையில் அடித்து விடுதல்
- பந்தை கைகளால் பிடித்து விடுதல்
- உந்தி தள்ளுவதற்குப் பதிலாக பந்தை பிடித்து எறிந்து விடுதல்
- ஒரே வீரர் அடுத்தடுத்து இரண்டு முறை பந்தை தட்டிவிடுதல்
- ஒரே அணியினர் நான்கு முறை பந்தை தட்டி அனுப்புதல்
- ராலியின்போது அணி வீரர்கள் வலையை கைகளால் தொட்டு விடுதல்
- தொடக்கத்தில் அடித்தெறியும் போது வீரரின் பாதம் ஆடுகளத்தின் எல்லையை தாண்டி விடுதல் போன்றவை தவறுகளாகக் கருதப்படுகின்றன.

பொதுவாக கைகளால் ஆடப் படும் இவ்விளையாட்டில் வீரர்களின் பிற உடல் பாகங்களில் பந்து படுவதும் தவறாகக் கருதப்படுகிறது. கைப்பந்தாட்ட விளையாட்டில் பல்வேறு தேர்ந்த நுணுக்கங்கள் வளர்ச்சியடைந் துள்ளன. வலைக்கு மேல் பந்தை நிறுத்தி மேலெழும்பி தாக்கி அடித்தல், மேலெழும்பி வலைக்கு மேலேயே பந்தை தடுத்து திருப்பி அனுப்புதல், அடுத்தவருக்கு பந்தைக் கடத்துதல், தாக்குவதற்கு தோதாக பந்தை தலைக்கு மேலே உயர்த்திக் கொடுத்தல், தனிச்சிறப்பு ஆட்டக்காரருக்கு ஏற்றபடி இடம் அமைத்துக் கொடுத்தல், போன்ற ஆட்ட நுணுக்கங்கள் சிறப்பான முறையில் வளர்ந்து வருகின்றன.

# எமது சனசமூக நிலையம்

திரு. சி. விஜயரங்கன்
முன்னாள் நிர்வாக உறுப்பினர்
கொழும்புத்துறை சனசமூக நிலையம்



கொழும்புத்துறை எனும் ஊரிலே அழகிய தென்னந்தோப்புக்கள் தெற்கே கடலோரம் கிழக்கே முத்துமாரியம்மன் வடக்கே ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் மேற்கே ஊர்மக்களை காப்பாற்றுகின்ற அம்மன், ஐயனார் கோவில் எனும் தலம் அமையப்பெற்ற இடத்தில் வாசிப்புப் பழக்கத்தை உருவாக்க வேண்டுமென்ற எண்ணக்கருவுடன் ஓர் வாசிகசாலை 1951 ஆம் ஆண்டு அப்போதைய இருபது வயது நிரம்பிய வாலிபர்களால் ஸ்தாபிக்கப் பட்டது. அந்தக்கட்டிடம் நிரந்தரக் கட்டடமல்ல தம்பு கந்தையாவின் தகப்பனாரின் ஆதனக் கடைக்காணியில் அமைந்துள்ளது. அப்போதைய இளைஞர் களான காலஞ்சென்ற பஸ்தியாம்பிள்ளை சோமசுந்தரம் காலஞ்சென்ற தம்பு கந்தையா வேறு நபர்களும் இதில் இடம்பெற்றுள்ளார்கள். (சரியான விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை) எல்லோருடைய முயற்சியின் பிரகாரம் 2 ஆம் குறுக்குத்தெரு சந்தியில் தெற்குப்பறமாக சனசமூகநிலையம் கட்டிடத்தை வ.சோமசுந்தரத்தின் கைவண்ணத்தால் அழகான சிறிதளவு இடப்பரப்பைக் கொண்ட சனசமூக நிலையம் கம்பீரமாக காட்சியளித்தது.

கலை, கலாசாரம், பண்பாட்டு ஆகியவை நம்பத்தக்ககூடிய போதியளவு விளையாட்டுத்திடல் அங்கு அமையப் பெற்றில்லை கரபந்தாட்டம், உதைபந் தாட்டம், துடுப்பாட்டம் ஆகியவற்றை விளையாட நெடுங்குள பிள்ளையார் கோவிலடி சுடுகாடு அமைந்துள்ள துண்டி என்ற இடத்திற்கு செல்ல வேண்டும். பாரம்பரிய விளையாட்டு போட்டிகள் எல்லாம் அங்கு நடைபெற்றுபல இளைஞர்கள் ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்கி முன்னிலையாக திகழ்ந்தார்கள். இவற்றையெல்லாம் எடுத்துக்காட்டாக முன்வைத்து அரசியல்வாதிகளிடம் விளையாட்டு மைதானத்தை ஏற்பாடு செய்து தரும்படி விநியமாகக்கேட்டு கொண்டிருந்தோம். எங்களின் துரதிஷ்டமோ தெரியாது வீடற்றவர்களுக்கு காணிப் பங்கீடு வழங்கப்போவதாக நீண்ட காலத்தின் பின்னர் எமக்கு தெரிய வந்தது. பல இடர்பாடுகள் மத்தியில் எமது சனசமூகநிலையம் இயங்கிவந்தது.

பல கோரிக்கைகள் முன்வைத்து இறுதியாக சொன்னார்கள் 3 ஆம் குறுக்குத்தெருவில் 1981 ஆம் ஆண்ட ளவில் மாநகரசபை உறுப்பினரின் நிதியுதவி மூலம் உப்புக்குளத்துக்கு அருகில் சனசமூக நிலையம் கட்டடமொன்றை கட்டி அதற்கு முன்னால் உள்ள வெற்றுநிலத்தை விளையாட்டுத்திடலாக பாவிக்கும்படி சொன்னார்கள். இப்படியொரு கட்டிடம் கட்டப்போவதாக அறிந்த ஒரு சிலரின் நடவடிக்கையால் கட்டிடத்தை நிறுத்தவும் முயற்சி எடுக்கப்பட்டது. பல சிரமத்தின் மத்தியில் தம்பு கந்தையாவின் விடா முயற்சியால் 3 ஆம் குறுக்குத்தெருவில் கட்டிடம் அழகாக உருவாகியது. அதற்குரிய தளபாடவசதிகளோ இல்லை. பழைய வாசிகசாலைக்குரிய தளவாடப் பொருட்களைப் பயன்படுத்தச் சொன்னார் கள். புதிதாக உருவாக்கிய கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு தளபாடப் பொருட் களை இரவு ஊரடங்கிய பிற்பாடு

கொழும்புத்துறையில் வாடகைக்கு விடப்படும் சிறு தள்ளுவண்டியில் மூலம் தளவாடப்பொருட்களை கொண்டு செல்ல முற்பட்ட வேளை மக்கள் விழித்துக் கொண்டார்கள். முரண்பாடு கை கலப்பாக மாறுகினற நேரம் அது ஸ்ரீ சந்திர சேகரப் பிள்ளையாரின் அருளாலே ஊர்மக்கள் எழுத முடிவு சாதகமானது என்பது மறக்கமுடியாது மறுக்கவும் முடியாது என்பதை தெரிவித்து இவ் ஆக்கத்தை நிறைவு செய்கிறேன்.

"தடைக்கற்கள் எல்லாம் படிகற்கள் என்பதே மொழி"

**உசாத்துணைநூல்**

பஸ்பதியாம்பிள்ளை சோமசுந்தரம் - நினைவு மலர்
மூத்தோர் வரிசை - செல்லையா 3ம் குறுக்குத்தெரு
1981ம் ஆண்டுகாலப்பகுதி – சி.விஜயரங்கன் அங்கத்துவர்
தள்ளுவண்டியின் மூலம் பொருள்களை ஏற்றிச்சென்றவர்
கணபதிப்பிள்ளை கலாநாதன் புலம்பெயர் - (கேசன்)
மகிழ்வாக வாழ்வோமாக!

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# சீர் தூக்கும் துறையூர்



திரு. ஸ்ரீ.றமணன்
கிராம சேவகர்


எமது கொழும்புத்துறை எனும் ஊர் யாழ் பிரதேச செயலகத்தின் எல்லைக்குள் இருக்கும் ஊர்களில் மிகவும் தனித்துவமும் சிறப்பும் வாய்ந்தது. "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று கூறும் முதுமொழி ஒன்றை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் ஆலயம், முத்துமாரி அம்மன் ஆலயம், ஐயனார் ஆலயம் மற்றும் வைரவர் ஆலயம் என நான்கு ஆலயங்களை தன்னகத்தே கொண்டு சீர்தூக்கி நிற்கின்றது. எம்துறையூர் கல்விக்கு ஓர் ஆயுதமாக விளங்கும் யாழ் கொழும்புத் துறை துரையப்பா வித்தியாலயம் காணப்படுகின்றது. இவற்றைவிட சமூக ரீதியான வலியூட்டலுக்கு 68 ஆண்டுகள் சிறப்புடனும் வினைத்திறனுடனும் கொழும்புத்துறை சனசமூக நிலையம் இயங்கி வருகின்றது. இதன் தனிச்சிறப்பே ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதத்தில் ஆண்டுவிழா மேற்கொண்டு கலை, கலாசாரங்கள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகளை வலுப்படுத்தி வருகின்றது.

இதன்மூலம் உமது ஊரில் வாழும் நாடகக்கலைஞர்கள் மற்றும் பட்டிமன்ற பேச்சாளர்கள், கவிஞர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் தங்கள் திறமைகளை மேலும் பலப்படுத்தி வருவது எம் ஊரை மேலும் சீர்தூக்கி நிறுத்துகிறது. இவை மட்டுமல்லாது சனசமூக நிலையத்தால் நடத்தப்படுகின்ற கல்விசார் நடவடிக்கை எம் சமூகத்தை மேன்மையாக்குகின்றது.

இவற்றை விட பௌதிக ரீதியாக நோக்குமிடத்து உப்புக்குளம், வன்னான் குளம் போன்ற இரண்டு குளங்கள் காணப்படுவது எமது முன்னோர்களின் மழை நீர் சேகரிக்கும் அனைத்தையும் வெளிக்காட்டுகின்றது. எனது பாரிய பெறுமதி மிக்க வளமே கடல்வளம். இக்கடல்வளம் எமது ஊரின் முது கெலும்பாக காணப்பட்டது. ஆரம்ப காலம் முதல் தொண்ணூறு சதவீத மக்கள் கடல் வளத்தை நம்பியே வாழ்ந்து வந்தார்கள். கடல்வளத்தை மையமாகக் கொண்டு இரண்டு பிரதான தொழில்களை மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வந்தார்கள். இதில் கடற்றொழில் மற்றையது தும்புக் கைத்தொழில். முன்னைய காலத்தில் பெண்களுக்கு பாரிய வருமானத்தை ஈட்டித்தந்தது. தற்போது தும்புக் கைத்தொழில் மிக மிக அருகிய நிலையில் காணப்படுகின்றது. ஒரு சிலரே இன்று தும்புக்கைத்தொழிலை மேற்கொண்டு வருகின்றார்கள். அதேபோல் கடற் றொழிலும் மிகவும் அருகிய நிலையிலே காணப்பட்டு வருகின்றது. இதற்கு பல காரணங்களை முன்வைக்கலாம். நாம் முன்காலத்திலும் பிரதானமாக இரண்டு காரணங்களே புலப்படுகின்றது. ஒன்று கல்விசார் முன்னேற்றம், மற்றையது வெளிநாட்டு வேலைவாய்ப்பு போன்றவை.

இவற்றைவிட சமூக அமைப்புக் களாக இன்று பிரதேச செயலக மட்டத்தில் திறம்பட இயங்கிவரும் கொழும்புத்துறை கிழக்கு மாதர் சங்கம், முதியோர் சங்கம், விநாயகர் விளையாட்டுக்கழகம் மற்றும் சிறுவர் கழகங்கள் காணப்படுகின்றன.

இவற்றை விட பாலர் பாடசாலை கலையரங்கம், விளையாட்டு மைதானம் போன்றவை எம் ஊரின் கட்டமைப்பை பேணி வருகின்றது. இவற்றுக்கும் மேலாக ஆலயபரிபாலன சபை மற்றும் கடற் றொழில்சங்கம் சிறப்பாக இயங்கி வருவதை நாம் காணலாம். அதுமட்டும் இல்லாது எம் ஊரின் கட்டமைப்பையும் சமூக வலுவூட்டல்களையும் கூறிக் கொண்டே சொல்லலாம். அந்த வகையில் துறையூராம் கொழும்புத் துறையில் பிறந்தமைக்கு நாம் மனதார பெருமைப் படவேண்டும்.



# என் உள்ளத்திலிருந்து ...



திரு. கி. குருதர்ஷன்
முன்னாள் கிராம சேவையாளர்

அரச சேவையில் சில வருடங்கள் கொழும்புத்துறை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் கொழும்புத்துறை கிராமத்துக்கு சேவையாற்ற எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் போது நான் கண்டுகொண்டது என்னவெனில் இக்கிராமம் அநேகமாக பூர்வீக குடிகளை கொண்டுள்ளதுடன் கிராமிய கட்டமைப்பையும் கொண்டு நகருக்கு அண்மையில் காணப்படுவது சிறப்பம்சமாகும். அத்தகையஒரு ஊரில் இச் சனசமூக நிலையம் ஆற்றும் சேவைகள் அளப்பரியதாகும். யுத்தத்தின் கொடிய பாதிப்பினால் பலர் தமது உறவுகளை இழந்தும் வெளிநாடுகளுக்கும் அனுப்பி வாழ்கின்ற துன்பகரமான தன்மை பொதுவாக இங்கு காணப்படுவது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தின் ஓர் காலத்தில் “கொழும்புத்துறை துறைமுகம்” இங்கு காணப்பட்டது. அதனைவிட மக்கள் தமது கலை, கலாசார பண்புகளை பேணுவதில் உறுதியாகவும் உள்ளனர்.

இது போலவே நாம் எல்லோரும் அறிந்தபடி உலகில் தொழில்நுட்ப வசதி காரணமாக “உலகம் ஒரு கிராமமாக மாறியுள்ளது” என கூறப்படுகிறது. கடந்த காலங்களைப் போலல்லாது நிகழ்கால இளைய சந்ததி இனிவரும் காலங்களில் எதிர்நோக்க வேண்டிய சவால்கள் / போட்டிகள் அதிகமாக உள்ளன. அத்தகைய சவால்கள் எவை என துல்லியமாக இனம்கண்டு அவைகளை எதிர்நோக்க கூடிய மன பொருளாதார வலிமை கொண்ட எதிர்கால சந்ததியை நாம் உருவாக்க அயராது திட்டமிட்டு உழைக்க வேண்டும்.

இதற்கு மிக மிக அடிப்படையாக கல்வி காணப்படுகிறது. ஆகவே கல்வியை பிள்ளைகளுக்கு வாரி வழங்கவேண்டும். பொருளாதார ரீதியில் ஒருவரோ ஒரு இனமோ, ஒரு நாடோ பயனடைய வில்லை என்றால் மற்றைய எல்லாம் வீணே. ஆகவே இந்த தீர்க்க தரிசன பார்வை கொண்டவர்களாக தீர்க்கதரிசன பார்வையுடையவர்களை அணுகி அவர்களின் ஆலோசனையில் இச் சனசமூக நிலையம் புதிய பரிமாணத்தை எதிர்காலத்தில் அடைந்து மேலும் மேலும் பல சமூக சேவை விடயங்களை ஆற்ற முன்வர வேண்டும். இதற்கு ஊரின் ஒற்றுமையை பேணுவது மிக முக்கிய மானதாகும். ஒற்றுமையை பாதிக்கும் விடயங்களை தவிர்த்து பொதுநோக்குடன் மேலும் சிறந்து பயணிக்க எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

“God Bless You”

## 2019ம் ஆண்டு இல்லங்களுக்கான போட்டிகள்




















## 2019ம் ஆண்டு சித்திரை கொண்டாட்ட கலை போட்டிகளும் கலை நிகழ்வுகளும்







## 2019 ஆம் ஆண்டு இல்லங்களுக்கான கடற்போட்டி






## 2019 ஆம் ஆண்டு மாதர்களுக்கான போட்டிகள்







## 2019ம் ஆண்டு இல்லங்களுக்கான போட்டிகள்

### உதைபந்தாட்ட அணியினர்









தாச்சி அணியினர்



# இன்றைய கொழும்புத்துறை



**திரு.கா. புஷ்பநாதன்**
கொழும்புத்துறை

இப்போது குடாநாடாக விளங்கும் யாழ்ப்பாணம் கிறிஸ்துவுக்கு அநேகவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இரண்டு தீவுகளாகவிருந்தது. மேற்கே நாகதீபம், மணி நாகதீபம், மணிபுரம், மணி பல்லவம் என்னும் நாமங்களால் வழங்கப்பட்ட பெருந்தீவும் கிழக்கே எருமை முல்லைத்தீவு, எருமைத்தீவு என்று பெயர் பெற்ற சிறு தீவும் ஆக இரு பிரிவாக இருந்தது. காலாகாலம் ஏற்பட்ட பூகம்பங்கள் பிரளயங்களினால் பெருந் தீவகம் பல தீவுகளாகப் பிரிக்கப்பட்டது. காரைதீவு, வேலணை, மண்டைதீவு, புங்குடுதீவு, அனலைதீவு, நயினை தீவு, நெடுந்தீவு முதலிய தீவுகளும் வலிகாமமும் அப்பெருந் தீவகத்தின் பகுதிகளேயாம். இவ்வாறு கிழக்கே ஒன்றாக இருந்த சிறு தீவகம் களப்புக்கடல்களால் வடராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி என்னும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. பண்ணைக் கடல், பூநகரிக்கடல், ஆனையிறவுக்கடல் ஆகிய களப்புக்கடல்கள் முன்னே வங்களாக் குடாக் கடலுடன் சேர்ந்து ஆழமும் அகலமும் உள்ளனவாயிருந்தன. அக்கால மேலைத்தேச, கீழைத்தேச, சீனக் கப்பல்கள் போக்குவரத்து செய்யும் வழியாகவும் சோளகம், வாடைக் காலங்களில் உண்டாகும் புயல்களுக்கு அவற்றின் ஒதுக்கிடமாகவும் இருந்தன.

இது அவ்வாறிருக்க இந்தியாவின் தென்கோடியிலமைந்த தமிழகம், கேரளம் இலங்கை ஆகியன ஒரே கலாசாரக் கூறாகக் காணப்பட்டதோடு கடல்வழிப் போக்குவரத்து மூலமாக தமிழகம், கேரளம் ஆகியன வடபகுதியுடன் இணைப்புப் பெற்றிருந்தன. வத்தைகள் என்றழைக்கப்படும் கடற்கலங்கள் மூலமாகத் தமிழ் நாட்டிலிருந்து ஓடு, மட்பாண்டங்கள் மற்றும் பல பொருட்கள் வடபகுதிக்குக் கொண்டு வரப்பட்டன.

அக்காலத்தில் வட இந்தியாவில் மகத நாட்டை அரசாண்ட அசோகனும் இலங்கை வேந்தனாகிய தேவநம்பிய தீசனும் ஒரே காலத்தவர்களே. அசோகன் புத்த மதத்தை உலகெங்கும் பரப்புவதற்கென பல பிக்குககளை நான்கு பக்கத்திலுமுள்ள தேசங்களுக்கும் அனுப்பினான். அசோகனின் மகனான மஹிந்தன் இலங்கைக்கு வந்து தேவநம்பிய தீசனையும் அவன் மந்திரி குழாம், குடும்பம், குடிசனங்கள் யாவரையும் புத்த மதத்தினராக்கினான். பலரைப் பிக்குகளாக்கிய பின் பிக்குணிகளை உருவாக்கும் நோக்குடன் அசோகனின் நட்பைப் பெற்று வெள்ளரச மரக்கிளையுடன் ஒரு பிக்குனியை அனுப்பி வைக்கும்படி வேண்டினான். அவ்வேண்டுகோளுக்கு இணங்கி வெள்ளரசுக் கிளையொன்றை பொற்கலத்திலமைத்து புத்த பிக்குனியான தனமகள் சங்கமித்தாவை பரிவாரங்களுடன் அனுப்பி வைத்தான். அவர்கள் ஏறிவந்த கப்பல் தற்போது ஜம்புகோளப் பட்டினம் என அழைக்கப்படும் மாதகல் கடற்கரையில் அமைந்துள்ள சம்புத்துறையை வந்தடைந்தது.

இவர்களை வரவேற்க தேவநம்பிய தீசன் அனுராதபுரத்திலிருந்து பூநகரியூடாக சம்புத்துறையை சென்றடைந்தான். இப்பயணம் வழுக்கையாறு வழியாக கடலையடைந்து பூநகரி சென்று அமைந்திருந்தது.

யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட தமிழ் அரசனின் கர்வத்தை அடக்குமாறு மன்னாரில் தங்கியிருந்த தனது படைகளுக்கு ஆதரவாக மேலதிக படைகளை கோவாவிலிருந்து பறங்கித் தளபதி அனுப்பி வைத்தான். கி.பி. 1591 ஆம் வருடம் ஒக்ரோபர் மாதம் 26ம் திகதி 1400 பேரைக் கொண்ட பறங்கிப் படையுடன் கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட 3000 சிங்களப் படையுடனும் 43 மரக்கலங்களிலும் 250 வள்ளங்களிலும் ஏறி யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கேள்வியுற்ற புவிராச பண்டார மன்னன் அரியாலைக் கரையில் படைவகுத்துக் காத்திருந்தான். எனினும் பறங்கிப் படை கொழும்புத்துறையை வந்தடைந்து எதிர்த்து நின்ற தமிழ்ப்படையை அழைத்து வெற்றி கொண்டது. இவ்வாறு வந்திறங்கிய படையினர் சாந்த டொமினிக் கன்னியாஸ்திரி மடத்துக்கு அருகில் தங்கி விட்டு 10000 கண்டி நெல்லையும் 400 கண்டி அரிசியையும் எடுத்துச் சென்றனர்.

கொழும்புத்துறைக்கும் பூநகரிக்கும் இடையே கடல் வழிப்போக்குவரத்து நடைபெற்று வந்தவேளை நெல் அரிசி போன்ற பொருட்கள் கொண்டு வரப்பட்டன. பூநகரிக்கு போய் வருபவர்களும் மீன்பிடிக்கப் போகும் ஒவ்வொரு தோணியும் தலைக்கொரு பெரியகாசு (150/-) வரியாகச் செலுத்த வேண்டும்.

கொழும்புத்துறை ஆரம்பத்தில் மணலியம்பதி என்னும் பெயரில் அழைக்கப்பட்டதோடு "மணலியந்துறை" என துறைமுகம் அழைக்கப்பட்டது. கொழும்பு செல்லும் மக்கள் இத்துறைக்கு வந்து படகேறி பூநகரி சென்று அங்கிருந்து கொழும்பு செல்வதால் பிற்காலத்தில் கொழும்புத்துறை எனப் பெயர் பெற்று அழைக்கப்பட்டு வருகிறது.

1965 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணம் - கண்டி செல்லும் தற்போதைய A9 வீதி கிளிநொச்சிக்கு இப்பால் இல்லை. அக்காலப் பகுதியிலேயே கொழும்புத்துறை - பூநகரி சாவகச்சேரி தேர்தல் தொகுதியுடனேயே இணைந்து இருந்தது. தமிழ் காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்டு வென்று பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு.குமாரசாமி அவர்களது காலத்தில் யாழ்ப்பாணம் - கண்டி A9 வீதியை குடாக்கடலூடாக யாழ் பெருநிலப் பரப்புடன் இணைப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது அவ்வீதி கொழும்புத்துறை - கிழக்கரியாலை - அறுகுவெளி - கேரதீவு - சங்குப்பிட்டி - குஞ்சுப்பரந்தன் ஊடாகவே அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் தனது பிரதேசமான சாவகச்சேரியின் அபிவிருத்தியை கருவூலமாகக் கொண்டு திரு.குமாரசாமி அவர்கள் திட்டத்தை மாற்றி அமைத்து தற்போதைய A-9 வீதி உருவாகி சாவகச்சேரி - பளை - ஆனையிறவு - ஊடாக அமைக்கப்பட்டது.

A-9 வீதியினூடாக போக்குவரத்து இடம்பெற ஆரம்பித்த பின்னர் கொழும்புத்துறை - பூநகரிக்கான கடல்வழிப் போக்குவரத்தும் நின்று விட்டது. கொழும்புத்துறையின் முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகமும், அதன் தெருவும் அழிந்து கொண்டே போகின்றது. கொழும்புத்துறை துறைமுகச் சந்தியில் பறங்கியரால் கட்டப்பட்ட பங்களாவும் அழிந்துவிட்டது.

ஒரு கிராமத்தின் அபிவிருத்தியும் வளர்ச்சியும் அக்கிராமத்தில் வசிக்கின்ற மக்களது கைகளிலேயே தங்கியுள்ளது. அவர்கள் விழிப்படைவார்களேயானால் நிச்சயம் உயர்வுண்டு.

# ஊரோடு...



திரு. சுந்தரம் நவரெத்தினம்
உபசெயலாளர்
கொழும்புத்துறை சனசமூக நிலையம்

சித்திரைக் கொண்டாட்டம் ஆடியில் ஆரம்ப தின நாள் இவ்விரண்டையும் உள்ளடக்கியதான அகவை அறுபத்தியெட்டில் மலர் வெளியீட்டை வெளியிட இருக்கும் தருணத்தில் நிலையம் மென்மேலும் உயர்வடைய வேண்டும் என்று எண்ணக்கருத்தோடு சமர்ப்பிக்கின்றேன்.

யாழ்ப்பாணத்தின் கிழக்கே அமைந்துள்ள கொழும்புத்துறை கிராமமானது இங்கு இந்துக்கள் நூற்றுக்கு தொன்னூற்றியொன்பது சதவீதம் வாழுகின்றனர். கொழும்பிலிருந்து முதன்முதலில் எமது ஊருக்கு கப்பல் வந்தபடியினால் கொழும்புத்துறை என்ற பெயர் வந்தது. இக்கிராமத்தில் வயல் வளமும், கடல் வளமும் உண்டு. இப் பசுமையான கிராமத்தின் வடக்கே ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயமும், நரசிம்மவைரவர் ஆலயமும் உண்டு, தென்மேற்கே ஐயனார் அம்மன் ஆலயமும், கிழக்கே முத்துமாரி அம்மன் ஆலயமும், மத்தியில் ஞானவைரவர் ஆலயமும் கிழக்கே நாகபூசணி அம்மனும், வடகிழக்கே நெடுங்குளம் பிள்ளையார் ஆலயமும் உண்டு. இவ் ஆலயம் சங்கிலிய மன்னனால் கட்டப்பட்டது என்று முன்னோர்கள் சொல்ல கேட்டதுண்டு. அத்துடன் குளத்தையும் கட்டுவித்தான்.

எமது கிராமத்தை ஒல்லாந்தர் ஆக்கிரமிக்க வரும்பொழுது அப்பொழுது வாழ்ந்து வந்த குசன் பரம்பரைச் சமூகம் ஒல்லாந்தரிடம் போரிட்டு பல வீரர்களை மண்ணில் வீழ்த்தி வெற்றியீட்டினர். இது ஓர் உண்மை வரலாறு.

இக்கோவில்கள் சூழப்பட்ட பகுதிகளில் வாழும் எமது மக்கள் தமிழ் பாரம்பரியங்களையும், பண்பாட்டையும் பேணி பாதுகாத்து வருகின்றனர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை, அகிழ்வை, மனப்பான்மை போன்ற விழுமியங்களை கொண்டவர்கள்.

# நாடகமும் நானும்...



திரு. க.இராசதுரை
நாடகக் கலைஞர்

நான் முதலாவதாக நடித்த நாடகம் "பாசம்" இந்த நாடகத்தில் என்னை நடிக்க வைத்து நாடகத்தையும் இயக்கிய பெருமை திரு.செல்லத்துரை பாலசிங்கம் (பழம்) அவர்களையே சாரும். மேலும் கலை உலகம் எத்தனையோ பெரியோர் களையும், நண்பர்களையும், சகோதரர் களையும் எனக்குத் தந்தது. அப்பா சின்னத்துரை என்று அன்பாக அழைக்கப் படும். கந்தையா கணபதிப்பிள்ளை அவர்கள் நாடகத்துறைக்கு ஆற்றிய பணிகளை கொழும்புத்துறை மக்களால் மறக்கமுடியாது. இவர் என்னை "கண்ணகி" என்ற நாடகத்தில் அரசனாக நடிக்க வைத்து எல்லோருடைய பாராட்டையும் பெற வைத்தார்.

அடுத்து ஈழம் செவ்வந்தி (எனது அத்தான்) பண்டாரவன்னியன், யார் கொலைகாரன் ஆகிய ஐந்து நாடகங்களை இயக்கி என்னை பெருமைப்படுத்தியவர்.

ஆறுமுகம் செல்வரத்தினம் (விதானை அண்ணா), சித்தூர் ராணி, வீரபாண்டிய கட்டபொம்மன் என்ற நாடகங்களில் தானும் நடித்து என்னையும் நடிக்க வைத்து ஆயிரக்கணக்கானவர் களின் பாராட்டைப் பெறவைத்தார்.

மேலும் N.T.குணம் (குணம் அண்ணா) மணி பல்லவம், மாவிக்கபூர் போன்ற நாடகங்களில் நடிக்க வைத்து ரசிகர்களின் பாராட்டைப் பெறவைத்தார். கலாபூசணம் அருட்பிரகாசம் (எனது நண்பர்) அவர்கள் உரிமைப்போர், மனோகரா போன்ற நாடகங்களை இயக்கி எனக்கு பெருமை தேடி தந்தார். நான் கதாநாயகனாக நடித்த நாடகங்களில் என்னுடன் கதாநாயகிகளாக நடித்த ப.சாந்தகுமார், சி.சிவதர்சன், அ.அஸ்ரன், ராகவன், சி.செல்வராக போன்வர்களையும் மறக்கமுடியாது.

17.11.2016 எனது கலை சேவையை பாராட்டி யாழ் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட யாழ் ரத்தினா விருதினைப் பெறுவதற்கு எனக்கு ஊக்கம் அளித்து அந்நிகழ்ச்சிக்கும் சமூகமளித்து என்னை கௌரவித்த J.P. செ.இராசரத்தினம் (துரை அண்ணா) செயலாளர் இ.விஜயகுமார், முன்னால் கிராம சேவையாளர் குருதர்ஷன், ஏனைய நண்பர்கள், உறவினர்கள் எல்லோருக்கும் என உளமார்ந்த நன்றிகள்.

மேலும் அப்பா சின்னத்துரை (கந்தையா கணபதிப்பிள்ளை) பற்றி நோக்குவோமானால், எங்கள் ஊர் பாடசாலைப் பிள்ளைகளை இணைத்து அவர்களை நடிக்க வைத்து ரசிகர்கள் மத்தியில் பாராட்டைப் பெற வைத்தவராவார். சின்னன் என்று அன்பாக அழைக்கப்படும் குலசிங்கம் மகேந்திரன் என்பவரை முருகனாக நடிக்க வைத்து அழகு பார்த்தவர். அதேமாதிரி சிறுத்தொண்டன் போன்ற நாடகத்தை எமது ஊர்ப்பிள்ளைகளைக் கொண்டு நடிக்க வைத்து பெருமை சேர்த்தவர். எமது ஊர் இளைஞர்களைக் கொண்டு கண்ணகி என்ற நாடகத்தை கதை வசனம் எழுதி அவர்களைக் கொண்டே நடிக்க வைத்து எல்லோரினதும் பாராட்டையும் பெற்று நடித்தவர்களையும் பாராட்டும்படி செய்தார். அவரின் திறமைகளை எங்களால் மறக்கவே முடியாது. அது மாத்திரமல்ல அந்த நாட்களில் எங்கள் ஊரில் மேடை

(அரங்கு) கிடையாது. சின்னத்துரை அவர்களை "மரக்குற்றிகளை வெட்டி மரங்கள், பலகைகள் சின்னத்துரை அண்ணா எடுத்து வாருங்கள்" என்று சொன்னால் போதும் முழுவேலையையும் தானே எடுத்து எங்களுக்கு மேடை அமைத்து தருவார். ஆனால் இப்போது அவரும் இல்லை. நாடகம் நடிப்பதற்கு நடிகர்களும் இல்லை. இப்பொழுது மேடை இருக்கிறது. ஆனால் நடிப்பதற்கு நடிகர்கள் இல்லை.



# Osteoporosis



**Dr. S.Ushijenthan**
Jaffna Teaching Hospital

## Overview

Osteoporosis causes bones to become weak and brittle. so brittle that a fall or even mild stresses such as bending over or coughing can cause a fracture. Osteoporosis related fractures most commonly occur in the hip, wrist or spine. Bone is living tissue that is constantly being broken down and replaced. Osteoporosis occurs when the creation of new bone doesn't keep up with the loss of old bone.

Osteoporosis affects men and women of all races. But white and Asian women especially older women who are past menopause are at highest risk. Medications, healthy diet and weight bearing exercise can help prevent bone loss or strengthen already weak bones.

## Common Symptoms

There typically are no symptoms in the early stages of bone loss. But once your bones have been weakened by osteoporosis, you might have signs and symptoms that include:

- **Back pain**, caused by a fractured or collapsed vertebra.
- **Loss of height** over time.
- A **stooped posture.**
- A bone that **breaks much more easily** than expected.

## How Osteoporosis weakens bone

The bones are in a constant state of renewal new bone is made and old bone is broken down. When we're young, our body makes new bone faster than it breaks down old bone and our bone mass increases. After the early 20s this process slows, and most people reach their peak bone mass by age 30. As people age, bone mass is lost faster than it's created.

How likely you are to develop osteoporosis depends partly on how much bone mass you attained in your youth. Peak bone mass is somewhat inherited and varies also by ethnic group. The higher your peak bone mass, the more bone you have "in the bank" and the less likely you are to develop osteoporosis as you age.

## Risk factors

A number of factors can increase the likelihood that you'll develop osteoporosis including our age, race, lifestyle choices, and medical conditions and treatments.

### Unchangeable risks factors

Some risk factors for osteoporosis are out of your control, including:

**1.Sex.**

Women are much more likely to develop osteoporosis than are men.

**2.Age.**

The older you get, the greater your risk of osteoporosis.

**3.Race.**

You're at greatest risk of osteoporosis if you're white or of Asian descent.

**4.Family history.**

Having a parent or sibling with osteoporosis puts you at greater risk, especially if your mother or father fractured a hip.

**5.Body frame size.** Men and women who have small body frames tend to have a higher risk because they might have less bone mass to draw from as they age.

**Changeable risk facrors**

### 1.Hormone levels

Osteoporosis is more common in people who have too much or too little of certain hormones in their bodies. Examples include:

- **Sex hormones.** Lowered sex hormone levels tend to weaken bone. The reduction of "estrogen" levels in women at menopause is one of the strongest risk factors for developing osteoporosis.
  Men have a gradual reduction in testosterone levels as they age. Treatments for prostate cancer that reduce testosterone levels in men and treatments for breast cancer that reduce estrogen levels in women are likely to accelerate bone loss.
- **Thyroid problems.** Too much thyroid hormone can cause bone loss. This can occur if your thyroid is overactive or if you take too much thyroid hormone medication to treat an underactive thyroid.
- **Other glands.** Osteoporosis has also been associated with overactive parathyroid and adrenal glands.

### 2.Dietary factors

Osteoporosis is more likely to occur in people who have:

- **Low calcium intake.** A lifelong lack of calcium plays a role in the development of osteoporosis. Low calcium intake contributes to diminished bone density, early bone loss and an increased risk of fractures.
- **Eating disorders.** Severely restricting food intake and being underweight weakens bone in both men and women.
- **Gastrointestinal surgery.** Surgery to reduce the size of your stomach or to remove part of the intestine limits the amount of surface area available to absorb nutrients, including calcium. These surgeries include those to help you lose weight and for other gastrointestinal disorders.

### 3.Steroids and other medications

Long-term use of oral or injected corticosteroid medications, such as prednisone and cortisone, interferes with the bone-rebuilding process. Osteoporosis has also been associated with medications used to combat or prevent:

- Seizures
- Gastric reflux
- Cancer
- Transplant rejection

### 4.Medical conditions

The risk of osteoporosis is higher in people who have certain medical problems, including:

- Celiac disease
- Inflammatory bowel disease
- Kidney or liver disease
- Cancer
- Lupus
- Multiple myeloma
- Rheumatoid arthritis

### 5.Lifestyle choices

Some bad habits can increase your risk of osteoporosis. Examples include:

- **Sedentary lifestyle.** People who spend a lot of time sitting have a higher risk of osteoporosis than do those who are more active. Any weight-bearing exercise and activities that promote balance and good posture are beneficial for your bones, but walking, running, jumping, dancing and weightlifting seem particularly helpful.
- **Excessive alcohol consumption.** Regular consumption of more than two alcoholic drinks a day increases your risk of osteoporosis.
- **Tobacco use.** The exact role tobacco plays in osteoporosis isn't clear, but it has been shown that tobacco use contributes to weak bones.

## Complications

· **Compression fractures**

Bone fractures, particularly in the spine or hip, are the most serious complications of osteoporosis. Hip fractures often are caused by a fall and can result in disability and even an increased risk of death within the first year after the injury.

In some cases, spinal fractures can occur even if you haven't fallen. The bones that make up your spine (vertebrae) can weaken to the point of crumpling, which can result in back pain, lost height and a hunched forward posture.

## Prevention.

Good nutrition and regular exercise are essential for keeping your bones healthy throughout your life.

### Protein

Protein is one of the building blocks of bone. However, there's conflicting evidence about the impact of protein intake on bone density. Most people get plenty of protein in their diets, but some do not. Vegetarians and vegans can net enough protein in the diet if they intentionally seek suitable sources, such as soy, nuts, legumes, seeds for vegans and vegetarians, and dairy and eggs for vegetarians.

Older adults might eat less protein for various reasons. If you think you're not getting enough protein, ask your doctor if supplementation is an option.

### Body weight

Being underweight increases the chance of bone loss and fractures. Excess weight is now known to increase the risk of fractures in your arm and wrist. As such, maintaining an appropriate body weight is good for bones just as it is for health in general.

### Calcium

Men and women between the ages of 18 and 50 need 1,000 milligrams of calcium a day. This daily amount increases to 1,200 milligrams when women turn 50 and men turn 70.

Good sources of calcium include:

- Low-fat dairy products
- Dark green leafy vegetables
- Canned salmon or sardines with bones
- Soy products, such as tofu
- Calcium-fortified cereals and orange juice

If you find it difficult to get enough calcium from your diet, consider taking calcium supplements. However, too much calcium has been linked to kidney stones. Although yet unclear, some experts suggest that too much calcium especially in supplements can increase the risk of heart disease.

### Vitamin D

Vitamin D improves your body's ability to absorb calcium and improves bone health in other ways. People can get some of their vitamin D from sunlight, but this might not be a good source if you live in a high latitude, if you're housebound, or if you regularly use sunscreen or avoid the sun because of the risk of skin cancer.

To get enough vitamin D to maintain bone health, it's recommended that adults ages 51 to 70 get 600 international units (IU) and 800 IU a day after age 70 through food or supplements.


People without other sources of vitamin D and especially with limited sun exposure might need a supplement. Most multivitamin products contain between 600 and 800 IU of vitamin D. Up to 4,000 IU of vitamin D a day is safe for most people.

### Exercise

Exercise can help you build strong bones and slow bone loss. Exercise will benefit your bones no matter when you start, but you'll gain the most benefits if you start exercising regularly when you're young and continue to exercise throughout your life.

Combine strength training exercises with weight-bearing and balance exercises. Strength training helps strengthen muscles and bones in your arms and upper spine. Weight-bearing exercises such as walking, jogging, running, stair climbing, skipping rope, skiing and impactproducing sports affect mainly the bones in your legs, hips and lower spine.

Swimming, cycling and exercising on machines such as elliptical trainers can provide a good cardiovascular workout, but they don't improve bone health.



# யாவரும் நலம்

## சித்த மருத்துவ கேள்வி பதில்



வைத்தியர் கந்தையா சோதிதாசன்
முருகானந்தா வைத்திய நிலையம்

*சாதாரண மக்களுக்கு பயன்தரக் கூடிய சித்த மருத்துவக் குறிப்புக்கள் சில விளக்கம் கருதி கேள்வி பதில் வடிவத்தில் தரப்படுகிறது.*

### பசியின்மை

**கேள்வி :** *உணவுச் சமிபாடின்மை வயிற்றுப்பொருமல் பசியின்மை போன்ற நிலமைகளுக்கு சாதரணமாக என்ன சித்த மருந்துகள் பாவிக்கப்படுகின்றன?*

**பதில் :** *முறையற்ற உணவுப்பழக்கம் எண்ணெய் கொழுப்பு சார்ந்த உணவுகளை அதிகமாக உட்கொள்ளல் போன்றவற்றால் அஜீரணம் வயிற்றுப் பொருமல் பசியின்மை போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.*

*1 ஓமத்தீ நீர்,*

*2 திரிபலா சூரணம், குளிகை,*

*3 பஞ்ச தீபாக்கினி சூரணம், போன்ற மருந்துகள் பயன்தருகின்றன.*

*திரிபலா குளிகை சிறந்த பயனளிக்கும். இதை இரவில். சாப்பிட்ட பின் இரண்டு குளிகை வீதம் எடுத்து வருவதால் வயிற்று ரோகங்களில் இருந்து விடுதலை கிடைக்கும்.*

### கடுக்காய்

**கேள்வி :** *சுதேச மருத்துவத்தில் மலமிளக்கியாக செயற்படும் கடுக்காயின் வேறு மருத்துவ பயன்கள் என்ன?*

**பதில் :** *கடுக்காய்க்கு சித்த மருத்துவத்தில் சிறப்பான இடமுண்டு. கடுக்காயும் தாயும் ஒன்று என சித்தர்கள் குறிப்பிடுகின்றனர்.*

*கடுக்காய் துவர்ப்பு சுவை மிக்கது. துவர்ப்பு இரத்தத்தை விருத்தி செய்கிறது. கடுக்காய் வயிற்றில் உள்ள கழிவுகளை வெளியேற்றி ஆரோக்கியத்திற்கு உதவுகிறது.*

*கடுக்காய் · தமிழ் மருந்து கடைகளில் கிடைக்கும். இதை வாங்கி உடைத்து பருப்பை நீக்கிவிட்டு. தூளாக்கி இரவு 1 தேக்கரண்டி வீதம் சுடுநீரில் எடுத்து வர நோய் எதிர்ப்பு சக்தி உற்சாகப்படுவ துடன் வயிற்றுரோகங்கள் குணமாகும். மேலும் பார்வைக்கோளாறு, பித்த நோய்கள், வாய்ப்புண், வயிற்றுப்புண், தோல் நோய்கள் என்பவற்றுக்கு கடுக்காய் நிவாரணமளிக்கிறது என குறிப்பிடப் படுகிறது.*

*காலை இஞ்சி கடும்பகல் சுக்கு மாலை கடுக்காய் மண்டலம் உண்டால் விருத்தரும் பாலராமே என்பது பிரபலமான சித்தர் பாடல்.*

### மூட்டுக்களில் வலி

**கேள்வி :** *மூட்டுக்களில் ஏற்படுகின்ற வலி இன்று வயதானவரிடத்தே அதிகம் காணப்படுகின்றது. இதற்கான சித்த மருத்துவ நிவாரண முறைகள் என்ன?*

**பதில் :** *வயதானவரிடத்தே தோன்றுகின்ற மூட்டு வலி பல்வேறு காரணங்களால் ஏற்படுகின்றது.*

*எலும்புகளை இணைக்கின்ற சவ்வுகளில் காணப்படுகின்ற எண்ணெய்ப் பசை குறைவடைதல், மூட்டுக்கள் ஒன்றோடு*

ஒன்று உராய்வதால் தேய்வு ஏற்படுதல், உடற்பருமன் அதிகரிக்கும்போது கால் மூட்டுக்கள் அதிக அழுத்தத்திற்கு உள்ளாதல், போன்ற காரணங்களால் மூட்டுவலி ஏற்படுகின்றது. இதைவிட மூட்டுக்கள் நோய்த் தொற்றுக்குள்ளாதல், கால், கை அடிபடுதல், சுளுக்கு உண்டாதல், என்பவற்றாலும் இந்நோய் ஏற்படலாம்.

விஸ்னு சக்கரம், வாத இராட்சகன், தசமூல சூரணம், போன்ற மருந்துகளோடு தாளங்காய் எண்ணெய், நாராயண தைலம், போன்ற எண்ணெய் வகைகளும். இந் நோய்க்கான சிகிச்சையில் பயன்தருகின்றன. இவை தேர்ந்த மருத்துவரால் பரிகரிக்கப் படவேண்டியவை.

**கேள்வி :** மூட்டு வலிகளுக்கு மக்கள் இலகுவாக பயன்படுத்தக் கூடிய வைத்திய முறைகள் உண்டா?

**பதில் :** ஆம் முடக்கற்றான் கீரை, இம் மூலிகை சாதாரணமாக மக்களால் பயன்படுத்தப்படுகிறது. நன்றாக கழுவிய இலைகளை அரைத்து விழுதாக்கி காலை யில் ஒரு தேக்கரண்டி அளவு எடுக்க வேண்டும். அல்லது முடக்கற்றான் இலையை காயவைத்து தூள் செய்து ஒரு தேக்கரண்டி சுடுநீருடன் எடுத்தல். இது தவிர முடக்கொற்றான் ரசம், முடக் கொற்றான் இலைசேர்த்து தயாரிக்கப் படுகின்ற றொட்டி, தோசை போன்ற உணவுமுறைகளாலும். மூட்டுவலிக்குரிய சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

"நிமிஸ்த உஸ்ணம் வாத சமனம்." என குறிப்பிடப்படுகிறது. அதாவது எண்ணைய்ப் பூச்சு, ஒத்தட சிகிச்சைகள், இதில் அதிக பயன் தருகின்றன. நல் லெண்ணெய் மஞ்சள் உள்ளி மூன்றையும் சூடாக்கி வலி உள்ள இடத்தில் தேய்க்கலாம்.

தாளங்காய் எண்ணெயை வீக்க முள்ள இடங்களில் தேய்க்கவேண்டும். முடக்கற்றான், ஆமணக்கு, நொச்சி இலைகளை பிடடவியல் செய்து அவ்விடங்களில் ஒத்தடம் கொடுக்கலாம். இரவிலே திரிபலா சூரணம் எடுத்தல் மலச்சிக்கலை நீக்கி வாத மூட்டு வலிகளுக்கு நிவாரணம் அளிக்கும்.

## உற்சாக பானம்

**கேள்வி :** தேனீர், கோப்பி என்பவற்றுக்கு பதிலாக உடலுக்கு உற்சாகம் அளிக்கக் கூடிய சித்த மருத்துவப் பானம் ஒன்றை குறிப்பிடுங்கள்

**பதில் :** சுக்கு, ஏலக்காய், கொத்தமல்லி, கருப்பட்டி( இவற்றை அரைத்துப் பொடி செய்து ஒரு தேக்கரண்டி சுடுநீரில் கலந்து பருகலாம் உடலுக்கு உற்சாகம் தருவதோடு பசியின்மை போன்ற வயிற்று ரோகங்களுக்கும் நிவாரணம் தருகிறது.

## தொப்பை

**கேள்வி :** நடுத்தர வயதினரிடையே அழகை குறைக்கிற விடயங்களில் தொப்பை முன்னணி வகிக்கிறது. இந்த தொப்பையை நீக்க சித்தமருத்துவம் கூறும் உணவு முறைகள் என்ன?

**பதில் :** உள்ளி, இஞ்சி, மிளகு சேர்ந்த உணவுகள் பெரிதும் பலன் தருகின்றன. உடலில் கொலஸ்ரோல் அதிகமாவதால் உடற்பருமனோடு தொப்பை ஏற்படுகிறது.

எமது அன்றாட உணவிலே உள்ளி இஞ்சி, மிளகு என்பவற்றை சேர்த்துக் கொள்ள வேண்டும். வெள்ளரி, நெல்லி, கொத்தமல்லி, முருங்கை, திராட்சை, தோடை, தக்காளி, பப்பாளி, அன்னாசி, எலுமிச்சை, கொய்யா, புதினா, வெங்காயம், தர்பூசணி, கறிவேப்பிலை, வாழைத்தண்டு போன்றனவும் தொப்பையை குறைப்பதோடு உடற்பருமனையும் கட்டுப்பாட்டில் வைக்கிறது .

இது தவிர சில மூலிகைகள் விசேடமாக உதவுகின்றன .

*1.* நெல்லிக்காயை கொட்டை நீக்கி சுத்தம் செய்து, சாறு எடுத்து அதனுடன் சிறிது இஞ்சிச்சாறு கலந்து தினமும் காலையில் குடித்து வந்தால் கொழுப்பு குறையும்.

*2.* கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் (திரிபலா) இவைகளை பொடியாக்கி வெந்நீரில் கலந்து காலையில் குடித்தால் எடை குறையும்.

சிறிது வெதுவெதுப்பான தண்ணீரில் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து பருகி வந்தால் உடல் பருமன் குறையும்.

அருகம்புல் சாறெடுத்து தினமும் காலையில் வெறும் வயிற்றில் குடித்து வர தொப்பை குறையும்.

**படர்தாமரை**



**கேள்வி** : படர்தாமரை, தேமல் போன்ற சரும பிரச்சினைகளுக்கான சிகி?ச்சை என்ன?

**பதில் :** படர்தாமரை தேமல் போன்ற நோய்களுக்கு பல சித்தமருந்துகள் குறிப்பிடப்படுகின்றன. தேரையர் வாகடத்தில் சொல்லப்படுகின்ற ஒரு மருந்தில் இன்று பயன்படக்கூடிய குறிப்பை பதிவிடுகிறேன்.

*1.* ஆவாரைசேர், மஞ்சள், துளசி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி இவற்றை வெயிலில் உலர்த்தி தூள் செய்து எலுமிச்சை சாறு விட்டரைத்து தேமல் உள்ள இடத்தில் பூசி வர குணமாகும்.

**கேள்வி** : இப்போது யாழ்ப்பாணத்தில் உஸ்ணம் அதிகரித்துள்ளது. இளநீர் அதிகம் விற்பனையாகிறது. தாகம் தீர்ப்பதோடு இதில் அடங்கியிருக்கும் மருத்துவக் குணங்கள் என்ன?

**பதில் :** இது இரத்தம் சுத்தம் அடையவும் கல்லீரல் நன்றாக இயங்கவும் உதவுகிறது. இத்துடன் தோல்,முடி ,நகங்கள் ஆரோக்கியமாக வளரவும் உதவுகின்றன. இளநீர் இளமையைக் காக்கும் அரிய பானமாகும்.

பொட்டாஷியம், சோடியம், கல்சியம், பொஸ்பரஸ், கந்தகம் போன்ற தாதுக்கள் இளநீரில் உள்ளன. இளநீரில் உள்ள புரதச்சத்து, தாய்ப்பாலில் உள்ள புரதச்சத்துக்கு இணையானது.. பித்தக் கோளாறு உள்ளவர்களுக்கும் இளநீர் இயற்கையான சத்து நிறைந்த மருந்து ஆகும்.

இளநீரில், செவ்விளநீர், பச்சை இளநீர், என பல்வேறு வகைகள் உள்ளன. இளநீரில் எல்லா வகையிலும் மருத்துவக் குணங்கள் நிறைந்துள்ளன. சிறுநீரில் கற்கள் உருவாகாமல் தடுக்க இளநீர் மிகவும் உதவுகிறது. உடலில் நீர்ச்சத்து குளுக்கோஸ் குறையும் நிலையில் அதைச் சரி செய்யவும் இது உதவுகிறது. இருதயம், கல்லீரல், சிறுநீரகம், கண்கள் மற்றும் இரத்த நாளங்களில் உஷ்ணம் ஆதிக்கம் அடையாமல் இருக்க உறுதுணை யாகிறது. மூல நோய், நாட்பட்ட சீதபேதி, ரத்த பேதி, கருப்பைரணம், குருதிப் போக்குக் காரணமாக வரும் இரத்த சோகை, உற்சாகமின்மை ஆகியவற்றிற்கு இளநீர் மிகச் சிறந்த நிவாரணம் அளிக்கின்றது.

**கேள்வி :** நீரிழிவு நோய்க்கு பொன்னாவரசு சிறந்த பலன் அளிக்குமா?

**பதில் :** நீரிழிவு நோயை சித்தர்கள் மதுமேக நோய் என குறிப்பிடுகின்றனர். இதன் பாதிப்பு ஏற்படாமல் தடுக்க பல மூலிகை மருந்துகளையும் கூறியுள்ளனர். அவற்றில், பொன்னாவாரைப் பூ என்ற ஆவாரம்பூ மிகச் சிறந்த மருந்தாக பயன்படுகிறது.

**தங்கம் எனவே சடத்திற்குக் காந்திதரும்**
**மங்காத நீரை வறட்சிகளை-அங்கத்தாம்**
**மாவைக்கற்றாழை மணத்தை அகற்றிவிடும்**
**பூவைச்சேர் ஆவாரம் பூ**

**அகத்தியர் குணவாகடம்**

பொருள் - நீரிழிவு, வறட்சி, உடலின் வியர்வை நாற்றம் இவற்றைப் போக்கும். உடலுக்கு பொற்சாயலைக் கொடுக்கும்.

மதுமேக நோயாளிகளுக்கு பொன்னாவாரைப் பூ மிகுந்த பலனளிக்கக் கூடிய பூவாகும்.

பொன்னாவாரைப் பூ - 10 கிராம்
மிளகு - 5
திப்பிலி 3சுக்கு
சிற்றரத்தை - 1 துண்டு

இவற்றை இடித்து பொடியாக்கி ஒரு குவளை நீரில் போட்டு பாதியாக வற்றக் காய்ச்சி காலை வேளையில் அருந்தினால் இரத்தத்தில் குளுக்கோசின் அளவு கட்டுப்படுவதுடன், கை கால் விறைப்பு, உடல் சோர்வு, மயக்கம், படபடப்பு, கண் பார்வைக் கோளாறு முதலியவை படிப்படியாகக் குறையும்.

பொன்னாவாரைப் பூவுடன் பச்சைப்பயறு சேர்த்து அரைத்து உடலெங்கும் பூசி குளித்து வந்தால் சர்க்கரை நோயினால் முழங்காலுக்குக் கீழே உண்டான சரும கருப்பு நீங்கி சருமம் பழைய நிலையை அடையும்.

பொன்னாவரை தேனீர்

பொன்னாவாரைப் பூவை உலர்த்தி தூள் செய்து வைத்துக்கொண்டுதேனீருக்கு பதிலாக இதனை கஷாயம் செய்து பனங்கற்கண்டு கலந்து அருந்தலாம்.

**கேள்வி :** இப்போது பரீட்சைக்காலம். மாணவரது ஞாபக சக்தியை வழங்கும் வல்லாரையின் மருத்துவ குணங்கள் என்ன?

**பதில் :** வல்லாரையில் அதன் இலைதான் மருத்துவ பயன் மிகுதியாக கொண்டது.

நினைவாற்றல், ஞாபகசக்தி பெற வல்லாரை இலையைக் காயவைத்து அரை கிலோ அளவில் எடுத்துக்கொள்ளவும். இத்துடன் 50 கிராம் சீரகம், ஐந்து கிராம் மஞ்சள் சேர்த்துத் தூள் செய்து சலித்து வைத்துக் கொள்ளவும். இதில் காலை, மாலை உணவுக்கு முன்பாக இரண்டு கிராம் அளவில் சாப்பிட்டு, சூடான பசும்பால் அருந்தி வர, அறிவு மேம்படும். நினைவாற்றல் பெருகும். மூளை பலம் உண்டாகும்.

**வல்லாரை தைலம்**

வல்லாரையை இடித்தெடுத்துப் பிழிந்த சாறு அரைலீட்டர் நல்லெண்ணெய் அல்லது தே.எண்ணெய் அரைலீட்டர் இரண்டையும் கலந்து அடுப்பில் வைத்து எரிக்க, அடிமண்டி மெழுகு போல விரலால் உருட்டும் போது திரளும் பதத்தில் இறக்கி வடிகட்டி தினந்தோறும் தலையில் தடவியும், தேய்த்துக் குளித்தும் வர, மூளைத்தெளிவு, குளிர்ச்சி தந்து நரையைத் தடுக்கும்.

**கேள்வி :** நீரிளிவு நோயாளர்கள் பாதங்களில் புண்ஏற்ப்படாமல் பார்க்க வேண்டும் என அறிவுறுத்தபடுகிறார்கள் இவர்களுக்கு பாதங்களில் புண் ஏன் ஏற்படுகிறது?

**பதில் :** பாதங்களில் புண்கள் ஏற்படுவதற்கு, போதுமான அளவு பாதத்துக்கு ரத்த ஓட்டம் இன்மை, நோய்த்தொற்று ஆகியவை முக்கிய காரணங்கள்.

இரத்தத்தில் உள்ள அதிகப்படியான குளுக்கோஸ், பாதம் மற்றும் காலில் உள்ள நரம்புகளைப் பாதிப்படையச்செய்கிறது. இதனால், பாதத்தில் எரிச்சல், கூச்சம் மற்றும் உணர்வற்ற தன்மை ஏற்படுகிறது. இந்த சூழலில், பொருத்தமற்ற காலணி அணியாமை, வெறும் காலில் நடப்பது போன்ற தவறான செயல்கள் காரணமாக புண் ஏற்படுகின்றன. அதிலும், குறிப்பாக, காலில் உணர்வு இல்லாத நிலையில், வெறும் காலில் நடக்கும்போது காயம் ஏற்பட்டாலும் தெரிவது இல்லை. இந்த புண்கள் எளிதில் ஆறுவதும் இல்லை. கவனிக்காமல் விடும்போது, கடைசியில் பாதத்தையே அகற்ற வேண்டிய நிலை ஏற்படுகிறது

**கேள்வி :** நார்சத்து மலசிக்கலைபோக்கும் என அறிந்தேன் நார்ச்சத்து என்பது என்ன? இது கிடைக்க நாம் எவ்வகையான உணவுகளை உண்ணவேண்டும்

**பதில் :** நார்ச்சத்து என்பது எல்லாத் தாவரங்களிலும் காணப்படும் ஊட்டச் சத்தாகும். உணவுகளில் காணப்படும் மற்ற அநேக ஊட்டச் சத்துக்களைப் போலல்லாமல், நார்ச்சத்து உடலால் ஜீரணித்துக் கொள்வதில்லை. அதாவது, நார்ச் சத்தானது வெறுமனே சமிபாட்டுத் தொகுதியினூடாகச் செல்லும். இதனாற் தான் நார்ச்சத்து உங்களுக்கு நல்லது. இது உங்கள்சமிபாட்டுத்தொகுதியைச் சுத்தம் செய்ய உதவும்.

பச்சை நிறக் காய்கறிகள், கீரைகள், இலைகள் கொண்ட காய்கறிகள் அதாவது முள்ளங்கி, கரட், பீட்ஷரூட், வெங்காயத் தாள் போன்றவற்றில் நார்ச்சத்து அதிகமாக உள்ளது. மற்ற காய்கறிகளில் மிதமான அளவில் உள்ளது.

எல்லா பழங்களிலும் நார்ச் சத்துக்கள் உள்ளன. பழங்களை அப்படியே சாப்பிட்டால், நார்ச்சத்து உடலுக்குள் சேரும். ஜூஸாகத் தயாரிக்கும்போது, நார்ச்சத்து சிதைந்துவிடும். வெறும் வைட்டமின், தாதுஉப்பு உள்ளிட்ட ஊட்டச்சத்துக்கள் மட்டுமே கிடைக்கும்.

பழங்கள், காய்கறிகளில் உள்சதையைவிட தோலில்தான் அதிக அளவு நார்ச்சத்து இருக்கிறது. ஆர்கானிக் காய்கறியாக இருந்தால், தோலைச் சீவாமல் பயன்படுத்துவது நல்லது.

வாழைப்பழத் தோலில் அதிக அளவு நார்ச்சத்து உள்ளது. தோலை நாம் தவிர்த்தாலும், மெல்லிய இழை போன்ற தோலில் ஒட்டியிருக்கும் படிமத்தை எடுத்துச் சாப்பிட்டு வர, நார்ச்சத்து அதிக அளவில் கிடைக்கும்.

பருப்பு, பயறு, ஆகியவற்றிலும் நார்ச்சத்து இருக்கிறது.

கைக்குத்தல் அரிசி, குரக்கன், போன்ற சிறுதானியங்களில் நார்ச்சத்து நிறைவாக உள்ளது.

**கேள்வி :** நான் வீட்டில் மருந்துச் செடிகளை வளர்க்க விரும்புகிறேன்

**பதில் :** எத்தகைய செடிகளை வீட்டிலே வைக்கலாம். அவற்றின் பொதுவான மருத்துவக்குணங்களையும் குறிப்பிடுங்கள்.

துளசி

துளசி, சளியைப் போக்கும் சிறந்த நிவாரணி. மேலும் சிறந்த கிருமி நாசினியான துளசிச் செடியை வளர்ப்பதால், வீட்டைச் சுற்றிலும் உள்ள விஷ ஜந்துகள் மற்றும் கிருமித் தொற்றுகள் வரவு கட்டுப்படும்.

ஒக்சிசனை அதிகளவில் வெளிவிடும் திறன்கொண்ட துளசிச் செடியால், சுவாசிப்பதற்கு தூய்மையான காற்று கிடைக்கும்.

தினமும் இரவு செம்பு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி, அதில் 10 துளசி இலைகள்

போட்டுவைத்து, மறுநாள் காலையில் துளசியை மென்று, அந்த நீரையும் பருகிவர, ஆரோக்கியம் வளரும்.

சரும நோய்களுக்கு மஞ்சள் மற்றும் துளசியை தண்ணீர் சேர்த்து அரைத்து பாதிக்கப்பட்ட இடங்களில் தடவிவர பலன் கிடைக்கும்.

**கற்றாழை**

சோற்றுக் கற்றாழை யின் மருத்துவ குணம் வாய்ந்த சதைப் பகுதியை பலமுறை நன்றாகக் கழுவி எடுத்து சாப்பிடலாம். இதன் மூலம் உடல் சூடு குறையும். பெண்களுக்கு மாதவிடாய் பிரச்சனைகள் சீராகும். கற்றாழையின் சதைப் பகுதியை ஆண்கள், பெண்கள் அனைவரும் உடலில் தடவி சிறிது நேரம் கழித்துக் குளித்துவர, சரும வறட்சி நீங்கி தேகம் பளபளப்பாகும் முகப் பருக்கள் குறையும். அடிபட்ட இடங்களில் சோற்றுக் கற்றாழை சதையை வைத்துக்கட்டினால், ரத்தம் கட்டுதல் ஏற்படாது.

**கற்பூரவள்ளி**

கற்பூரவள்ளி இலை அல்லது சாறு, சளிக்கு சிறந்த மருந்து. குறிப்பாக, பச்சிளம் குழந்தைகளுக்குச் சளி, ஏற்பட்டால், தாய்ப்பாலுடன் கற்பூரவள்ளி சாற்றைக் கலந்து கொடுக்க உடனடி குணம் கிடைக்கும்.

**தூதுவளை**

அடிக்கடி, இருமல் ஏற்படுபவர் கள், நெஞ்சு சளி உள்ளவர்கள் தூதுவளை இலையுடன் இஞ்சி சேர்த்து துவையல் செய்து சாப்பிட்டுவர (வாரத்துக்கு இரு வேளை மட்டும்) நல்ல பலன் கிடைக்கும்.

**பிரண்டை** (இதை பின் வேலியில் வளர்க்கலாம்)

பிரண்டையின் நரம்புபோன்ற பகுதியை நீக்கி, சிறு சிறு துண்டுகளாக்கவும். பிறகு, சாதாரண அல்லது புளித்த மோரில் சிறிது நேரம் ஊறவைக்க, அதன் காரத்தன்மை குறையும். பின்னர் அதனுடன் உளுத்தம் பருப்பு சேர்த்து துவையல்செய்து சாப்பிட்டால்... மூட்டுவலி, எலும்புத் தேய்மானம் குறைந்து எலும்பு பலமாகும், வயிற்றுப் புண் குணமாகும். மேலும், கர்ப்பிணிப் பெண்கள், குழந்தை பெற்ற தாய்மார்களின் இடுப்புவலி குறையும்.

பிரண்டைத் துவையல் பசியை அதிகரிக்கும் திறன்கொண்டது. சரியாகச் சாப்பிடாத குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்.

**வெற்றிலை**

வெற்றிலைக் கொடியை வீட்டில் வளர்க்க அதிக இடம் தேவையில்லை. அவ்வப்போது கொடியைக் கத்தரித்து தேவையான அளவுக்கு வளர்த்துக் கொள்ளலாம். இதுவும் விஷ ஜந்துகளை அண்டவிடாது.

வெற்றிலைச் சாறு, அனைத்து வயதினருக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். மதியம் சாப்பிட்டவுடன் வெற்றிலையுடன் பாக்கு, ஒரு கிராம்பு, ஒரு ஏலக்காய், சுண்ணாம்பு சேர்த்து வாயில்போட்டு மென்றால். ஜீரண மண்டலம் பலம்பெறும். ஜீரணக் கோளாறுகளும், சளியும் சரியாவதுடன், தொண்டை வலியும் குணமாகும்.

''அதிக இட வசதி இருந்தால் அறுகம்புல், மணத்தக்காளி முருங்கை மற்றும் கீரை வகைகள், என்று இன்னும் சில மூலிகைகளை வளர்த்து பலன் பெறலாம்.

# உயர்தர பரீட்சைக்குப் பின்பான பயணம்



செல்வி நீலுகா மதியாபரணம்
ஆசிரியர்

உயர்தர பரீட்சைக்குப் பெறு பேறுகள் வெளியாகின்றன. வடபுலத்தின் பெறுபெறுகள் திருப்தியாக அமைந் துள்ளன என்பது பொதுக்கருத்து. உரிய பகுப்பாய்வுகள் செய்யும் போதே பெறுபேற்றின் தன்மையை மதிப்பிட முடியும். எனினும் உரிய பல்கலைக்கழக அனுமதி கிடைக்கின்ற மாணவர்கள் தவிர்ந்த ஏனைய மாணவர்களின் எதிர்காலம் குறித்துக் கவனம் செலுத்துவது மிக அவசியமாகும்.

பொதுவாக இலங்கையின் கல்வி முறையானது அரச உத்தியோகத்தை எதிர்பார்த்தது என்ற குற்றசாட்டுக்கள் தாராளமாக உள்ளன. சமகாலக் கல்விமுறை சுயதொழில் முயற்சிகள், கம்பனி கட்டமைப்புக்கள், உற்பத்தி தொழில் முயற்சிகள் உள்ளிட்ட துறைகளுக்கு ஆளணியைத் தரவில்லை என்று குற்றம் சாட்டப்படுகிறது.

இந்நிலையில் க.பொ.த. உயர் தரத்தில் தோற்றி பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத, ஆனால் பரீட்சையில் சித்தியடைந்த, சித்தியடையாத ஏகப்பட்ட மாணவர்களுக்கு உரிய வழிகாட்டல்கள் வழங்கப்படாத பட்சத்தில் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குரியதாக இருக்கும் என்பது மறுக்கப்படாத உண்மை.

பொதுவில் க.பொ.த. உயர் தரத்தில் சித்தி, பல்கலைக்கழக அனுமதி, பட்டத்தை நிறைவு செய்தல், வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் அங்கத்துவம் பெறுதல், போராட்டங்களை நடத்தி அரச உத்தியோகங்கள் பெறுதல் என்ற ஒழுங்கில் எங்கள் இளைஞர்களின் ஆற்றல்கள், ஆளுமைகள், செயற்றிறன்கள் பாழாகிப் போகின்றன.


அரசசேவை என்பது கடந்து புதிய தொழில்துறைகளில் துணிவோடு இறங்கி சாதனை படைக்க நினைக்கின்ற தற்துணிவையும் ஆற்றலையும் உரு வாக்குகின்ற கட்டமைப்புகள் எங்கள் மண்ணில் தேவைப்படுகிறது. எங்கள் வடபுலத்தை எடுத்து நோக்குகின்ற போது எத்தனையோ தொழில்துறைகளில் வேலை வாய்ப்புக்கள் இருந்த போதிலும் தொழில் துறைசார் அறிவுடையவர்கள் எங்களிடம் இல்லை என்ற குற்றசாட்டை சாதாரண எவரும் கருதிவிடலாகாது.

A9 பாதை திறக்கப்பட்டதை தொடர்ந்து எங்கள் மண்ணில் ஏற்பட்ட வேலை வாய்ப்புக்களுக்காக தென் பகுதியில் இருந்து மனித வளத்தை வரவழைக்க வேண்டிய நிலைமை இருக்கின்றது. இத்தகைய நிலமைகள் தொடர்பில் யார் கவலை கொண்டாலும் அது அர்த்தமற்றது. ஏனெனில் எங்களிடம் இருக்கக்கூடிய உழைக்கும் வர்த்தகத்திற்கு நாங்கள் உரிய தொழில்சார் அறிவை வழங்கத் தவறிவிட்டோம்.

எனவே இத்தகைய தவறுகளை தொடர்ந்தும் விடாமல் எங்கள் மாணவர்கள், இளைஞர்களின் வாண்மையை விருத்தி செய்வதற்கான கட்டமைப்புக்களை உருவாக்குவது அவசியம்.

இது தவிர தொழில்சார் பயிற்சிகளை வழங்கக்கூடிய அமைப்புக்கள்

வடபுலத்தில் இயங்குகின்ற போதிலும் அதன் மூலம் பயன்பெறுவதில் இளைஞர்களிடம் ஆர்வமும் அக்கறையும் இல்லாத சூழ்நிலை காணப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. எனவே க.பொ.த. உயர்தர பரீட்சைக்குப் பின்பான எங்கள் பிள்ளைகளுக்கான வழிகாட்டல்கள் தொடர்கல்விக்கான சந்தர்ப்பங்கள் குறித்து கவனம் செலுத்துவது மிகவும் அவசியமானதாகும். தொழிற்படை என்ற வகுதிக்குள் அடங்கக்கூடிய மனித வளம் கவனிப்பின்றி விடப்படுமாக இருந்தாலும் அது எங்கள் பண்பாட்டு கலாசாரங்களில் கடும் எதிர்த்தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது உணரப்பட வேண்டும்.



# வாழ்வினை எழுதுதல்
## அச்சுக்கலை சில குறிப்புகள்

திரு. லோ. கோபிகிருஸ்ணா
முன்னாள் செயலாளர் (2017-2018)
கொழும்புத்துறை சனசமூக நிலையம்



### அறிமுகம்

தாள், துணி அல்லது வேறு பொருள்களின் பரப்பில் எழுத்து, படம் அல்லது ஓவியங்களைப் பதிக்கும் கலையும் அத்தொழில்நுட்பமும் அச்சுக்கலை என வழங்கப்படுகின்றது. அசையும் எழுத்துக் களின் உருவாக்கத்துடன் தான் அச்சுக்கலை முழுமையான நிலையை அடைந்தது. இலச்சினைகளை இடுதல், முத்திரைகளைப் பொறித்தல், கல்வெட்டிலிருந்து நகல் எடுத்தல், பட்டில் அச்சடித்தல், செதுக்குத் தகடுகள், கல்லச்சுப் படிமைகள், மர அச்சுப் படிமைகள் முதலியவற்றிலிருந்து பிரதி எடுத்தல், நாணயத்தாள், சீட்டு அட்டை, வழிபாட்டுப் படங்கள் போன்றவற்றை அச்சடித்தல் ஆகிய பல வழிகளில் பல படிகளைக் கடந்த பின்னரே அசையும் எழுத்துக்களைக் கண்டுபிடிக்க நேர்ந்தது.

15ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அடுக்கிக் கோக்கக் கூடிய உலோக அச்சு எழுத்துக்களின் கண்டுபிடிப்புடன் மேலை நாட்டில் அச்சடித்தல் செய்முறை தொடங்கியதாகும். அச்சடித்தலின் கண்டு பிடிப்புப் பற்றிய செய்திகள் பெரும்பாலும் கூட்டன்பேர்க்கை இணைத்தே பேசப் படுகின்றன. ஏனெனில் அச்சடித்த எல்லா நூல்களையும்விட மிகவும் பெயர்பெற்ற நூலாகக் கருதப்படுவது கூட்டன்பேர்க் வெளியிட்ட விவிலிய நூலாகும். டச்சு நாடு அச்சடிப்பின் கண்டுபிடிப்பினை லோரன்சு, ஜான்சூன் காஸ்டர் என்ற ஹார்லம் நகரத்தைச் சேர்ந்த அறிஞருடன் இணைத்துக் கூறுகிறது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள அரும்பொருட் காட்சியகங்களில் தொட்டில்முறை அச்சடிப்பாலான அச்சுச் சிதிலங்கள் காக்கப்பட்டு வருகின்றன. கி.பி 764ல் ஜப்பான் நாட்டில் சொட்டாக்க அரசில் முதன்முறையாகப் பேரளவு அச்சடிப்புச் செயல்முறை தொடங்கியது. வழிபாட்டுப் பாடல்களின் கோடிக்கணக்கான படிகள் களிமண்ணால் செய்யப்பட்ட எழுத்துக் களின் மேல் உலோக மேற் பூச்சுப் பூசி அந்த எழுத்துக்களைக் கொண்டு அச்சடிக்கப் பட்டன.

### தமிழ் அச்சிடல்

தமிழ் அச்சிடல் அறிமுகமும் வளர்ச்சியும் திருத்துதுப் பணிக்காக இந்தியா வந்திருந்த சமயப் பரப்புரையாளர் களாலும் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் முயற்சிகளாலும் நிகழ்ந்தது. இந்தத் தொடக்க கட்ட வளர்ச்சிக்கு முதன்மையாளர்களாக இயேசு சபை இறைப்பணியாளர்களும் பின்னர் சீர்திருத்தத் திருச்சபையின் போதகர்களும் இந்து அறிஞர்களும் குறிப்பிடப்படுகிறார் கள். புதிதாகக் குடிபுகுந்தவர்கள் உள்ளூர் மொழியின் முக்கியத்துவத்தினை உணர்ந்தவர்களாகத் தங்கள் சமய போதனைகளை உள்ளூர் மொழிகளில் பரப்ப எடுத்த முயற்சிகள் தென்னிந்தியா வில் நாட்டுமொழிகளில் அச்சிடும் பண்பாட்டை அறிமுகப்படுத்தியது.

கிழக்கிந்தியக் கம்பனி வைத்திருந்த தடைகள், காலனித்துவ சூழ்நிலைகள், நடைமுறைச் சிக்கல்கள், கல்வி இல்லாமை,

சாதிய ஒடுக்குமுறைகள், அக்கறையின்மை எனப் பல்வேறு காரணங்களால் தமிழ் அச்சுக்கலை மந்தமாகவே வளர்ச்சி பெற்றது. இதனால் பெருந்தொகை இலக்கியங்கள் பாதுகாக்கப்படாமலே அழிந்து போயின.

## அச்சிடப்பட்ட முதல் தமிழ் நூல்

முதல் தமிழ் புத்தகம் 1554ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் நாள் லிசுபனில் வெளியானது. அதை ஆக்கியோர் வின்சென்ட் தெ நாசரெத், ஹோர்கே கார்வாலோ மற்றும் தோமா த குருசு ஆகியோர் ஆவர். இம்மூவரும் தமிழ் அறிந்த இந்தியர்களே என்றும் அவர்களுடைய கிறித்தவப் பெயர்களே நமக்குத் தெரிந்துள்ளன. தமிழில் முதன் முதலில் அமைந்த திருமறைச் சிற்றேடு என்னும் தலைப்பில் வெளியான அந்நூலில் தமிழ்ச் சொற்கள் இலத்தீன் எழுத்துக்களில் அச்சுக் கோக்கப் பட்டிருந்தன. இந்த நூல்தான் வரலாற்றிலேயே முதலில் அச்சேற்றப்பட்ட தமிழ் நூல்

## பரமார்த்த குருவின் கதை

வீரமாமுனிவரின் பரமார்த்த குருவின் கதை பாரசீக அராபிய இரவுகள் அல்லது வட இந்தியாவின் பஞ்சதந்திரக் கதைகள் போன்று பரவலான ஈர்ப்பைப் பெற்றது. தமிழ் நாட்டுப்புற செவி வழிக்ககதை சொல்லும் பாங்கையும் மேற்கத்திய கதைசொல்லும் பாங்கையும் ஒன்றிணைத்த கற்பனை வளத்துடன் புனையப்பட்ட கதைகளாகும். 1776ஆம் ஆண்டிலேயே இதனை எழுதி முடித் தாலும், தரவுகளின்படி வீரமாமுனிவர் முதலில் தமிழில் எழுதிப் பின்னர் இலத்தீனிற்கு மொழிபெயர்த்தார். இதனை உள்ளூர் மக்களுக்கும் சமய போதகர்களுக் கும் மனமகிழ்வைத் தரவே எழுதியதாக அவர் கூறினாலும் அச்சிட்ட நூல்கள் மிகப்பலரையும் எளிதாகக் கவரும் என்ற உண்மையால் எழுத்துப்பிழையற்ற சமூகத்தை வளர்க்க விரும்பிய வீரமா முனிவர் தமது அகராதிகளுக்கும் இலக்கண நூலுக்கும் இதனால் ஓர் அறிமுகம் கிடைக்குமென நம்பினார்.

## கிழக்கிந்தியக் கம்பனியின் தமிழர் அச்சகங்களுக்கான தடை

பிரித்தானிய கிழக்கிந்திய கம்பனி தமிழ்நாட்டை கைப்பற்றியபோது அவர்கள் ஐரோப்பிய அல்லது தமிழ் கிறித்தவ சமய போதகர்களைத் தவிர பிறர் அச்சகங்களை வைத்திருக்கவோ, நூல் வெளியிடவோ அனுமதிக்கவில்லை. இந்தத் தடை 1835 வரை அமுலில் இருந்தது. இத்தகைய தடைகளாலும், வேறுபல காரணங்களாலும் அச்சுக்கலை தமிழ்நாட்டுக்கு வந்து சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு வளர்ச்சி பெறாமலேயே இருந்தது. இதனால் பெரும்தொகை தமிழ் ஆக்கங்கள் அழிந்து போயின. மிஞ்சிய தமிழ் ஆக்கங்களே (இன்று கிடைக்கும் தமிழ் இலக்கியங்கள்) 19 ம் நூற்றாண்டின் நடுவிலிருந்து பதிக்கப்பட்டு இன்று கிடைக்கின்றன.

## செவிவழிக் கதைகள் தமிழில் அச்சிடல்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன்பகுதியில் இந்தியாவின் அச்சு வரலாற்றில் பல செவிவழி இலக்கியங்கள், முக்கியமாக நாட்டுப்புறக் கதைகள் பதிப்பிக்கப்பட்டன. 1800ஆம் ஆண்டு முதல் 1835 ஆம் ஆண்டு வரை தமிழில் பதிப்பிக்கப் பட்டவற்றில் பெரும்பான்மை யாக, அகரமுதலிகளையும் இலக்கணங்க ளையும் தவிர்த்து, செவிவழிக் கதைகளின் தொகுப்புகள் இருந்தன. புகழ்பெற்ற இலக்கிய நூல்களான திருக்குறள், நாலடியார் போன்றவை பதிப்பிக்கப் பட்டன என்றாலும் இவற்றை விடப் பலமடங்கு செவிவழிக் கதைகளே பிரசுரமாயின. 1822ஆம் ஆண்டு

இலண்டனிலிருந்து தமிழ்,ஆங்கிலம் இருமொழிகளிலும் "பரமார்த்த குருவின் கதை" (குரு சிம்பிள்டன்) வெளியானது. 1826ஆம் ஆண்டு தமிழில் "பஞ்சதந்திரக் கதை"களும் 1833ஆம் ஆண்டு மற்றொரு செவிவழிக்கதைகளின் தொகுப்பான "கதாசிந்தாமணி"யும் பதிப்பிக்கப்பட்டன. ஆங்கிலம், பிரெஞ்சு மற்றும் ஈசாப் கதைகள் மொழிமாற்றம் செய்யப்பட்டு 1850களில் வெளியிடப்பட்டன.

## ஆறுமுக நாவலர்

ஆறுமுக நாவலர் இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் சைவ சித்தாந்த சொற் பொழிவில் முதன்மையாக விளங்கினார். கிறித்தவ சமய போதகர்களின் கட்டுப் பாட்டுக்குள் இருந்த அச்சுத்துறையில் ஆறுமுக நாவலர் ஒரு பாரிய உடைவை ஏற்படுத்தினார். தமிழ் மொழிக்காகவும் சைவக் கோட்பாடுகளுக்காகவும் யாழ்ப்பாணம், சிதம்பரம் மற்றும் சென்னையில் பல பள்ளிகளைத் தவிர அச்சகச் சாலைகளையும் நிறுவினார். அவரது காலகட்டத்தில் தமிழில் சிறந்த பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் இருந்தார். அவரது வாக்குவன்மையை பாராட்டி 27வது அகவையிலேயே "நாவலர்" என்றழைக்கப்பட்டார். பழந்தமிழ் இலக்கியங்களைத் தொகுத்து பதிப்பித்தார். அவற்றில் முதன்மை யானவை: விளக்கவுரையுடன் மண்டலப் புரத்தாரின் சூடாமணி நிகண்டு (1849), உரையுடன் பழந்தமிழ் இலக்கண நூலான நன்னூல் (1851), நக்கீரரின் திருமுருகாற் றுப்படை, மாணிக்கவாசகரின் திருவாசகம் மற்றும் திருக்கோவையார், பரிமேலழகர் உரையுடன் திருக்குறள் (1861).

தமிழ் புத்தகப் பதிப்பில் சில புதுமைகளை ஆறுமுக நாவலர் அறிமுகப் படுத்தினார். நிறுத்தற்குறிகளை தமிழில் முதன்முதலாகப் பயன்படுத்தினார். படிப்பதற்கும் புரிதலுக்கும் எளிதாக இருக்க கூட்டு சந்திகளைப் பிரித்து அச்சிட்டார்.

## இஸ்லாமிய பதிப்பாக்கங்கள் (1835)

1835 இல் கிழக்கிந்தியக் கம்பனியின் பதிப்புச் சட்டம் விலக்கப்பட்ட பின் இசுலாமிய தமிழ் நூல்கள் பதிப்புப் பெறுவது முனைப்புப் பெற்றது. தமிழ் இசுலாமிய எழுத்தாளர்கள் கணிசமான அரபி மற்றும் பாரசீக சொற்களைப் பயன்படுத்தினர். இதனால் முஸ்லிம் இல்லாத வாசகர்களை எட்டுவது சற்றுக் கடினமாக இருந்தது. மேலும் சிலர் அரபி எழுத்துக்களைத் தமிழ் எழுதப் பயன் படுத்தினர். இலங்கையில் பேருவளையைச் சேர்ந்த செய்கு முஸ்தபா வலியுல்லா என்பவர் அரபுத் தமிழில் எழுதிய மீஸான் மாலை எனும் நூல் 1868 இல் வெளியானது.

## அயோத்திதாசர், பௌத்த வெளியீடுகள் (1890 - 1950)

கிறித்தவர்கள் அச்சுக்கலையை தமிழ் மொழிக்கு அறிமுகம் செய்து வைத்தனர். இந்துக்களும் விரைவில் அந்தத் தொழிநுட்பத்தை தமது சமய தேவை களுக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள். பௌத்தர்கள், தலித்துக்கள் ஆகியோரும் அச்சுக்கலையை பயன்படுத்தி தமது கருத்துக்களை வெளியிடலாயினார். 1890 களில் அயோத்திதாசர் பௌத்தம் தழுவினார். இவர் தானே முன்னின்று பல அரிய தமிழ் நூல்களைப் பதிப்பித்தார். இவர் தமிழ்நாட்டிலும் பிற மா நிலங்களிலும் பௌத்த சங்களையும் உருவாக்க உதவி, அந்தச் சங்கங்கள் ஊடாகவும் பல நூல்கள் வெளிவந்தன. அதுவரை புறக்கணிக்கப்பட்டு வந்த பல பெறுமதி மிக்க பௌத்த, சமண, மற்றும் சமயம் சாரா நூல்கள் இவர்களின் முயற்சிகளால் அச்சேறின.

## கணனி முறை அச்சாக்கம்

பல்லாயிரம் கோடி மடங்கு பணப்புழக்கமுள்ள இவ் அச்சடிப்புத் தொழிலில் கணணி அச்சுமுறை கண்டு பிடித்ததும் மிக எளிமையாக படிகளை உருவாக்க முடிகிறது. அச்சடிப்பாளரின் கணணி தொழில்நுட்ப வசதியைப் பொறுத்து எளிய செலவில் குறைந்த காலத்தில் எண்ணற்ற செய்திகளைப் பரப்ப உதவியது. இதனால் எழுத்தறியாமையைப் போக்கி கல்வி பரவலாகியது. தொடக்க காலத்தில் இது ஒரு மாயமந்திரமாகவே கருதப்பட்டது. எனவே அச்சுத் தொழிலுக்கு அதன் தொடக்க காலத்தில் "கரும்பேய்க் கலை" என்ற பெயர் நிலவியது. அச்சடிப்புத் தொழில் தற்கால முன்னேற்றங்களால் மனிதகுல நாகரிகத்தின் மதிப்பு வாய்ந்த செய்தித் தொடர்பு அமைப்பாக வளர்ந்துள்ளது.

அச்சுக்கோப்புத் தொழிலில் ஏற்பட்டுள்ள நேரடிப்பதிவு முறைகளும் ஒளிப்பட முறைகளும் உலோக உருக்கு முறைகளுடன் போட்டியிடவல்லன. தற்காலத்தில் தட்டுப்பதிவு முறையால் தாளில் அல்லது காந்தநாடாவில் அச்சடிப்புப் பக்கத்தில் படியை உருவாக்க முடியும். அவற்றை கணிப்பொறிக்குள் ஊட்டி எல்லா வரிகளையும் சரிப்படுத்தித் திருத்தி அச்சுத்தட்டு உருவாக்குவதற்கு ஏற்ற படியை அல்லது நகலை உருவாக்க முடியும். தன் முகவரித்தாள்கள் (letter-head), பன்னிற அச்சடிப்புகள், ஒற்றை வரித்தாள்கள் (monograms) ஆகியவற்றை ஒற்றைப்பதிவு முறையால் அச்சிட முடியும். அரைவரித்திரை இன்றியே நிறத்தையும் தொடர் வரியையும் (continuous tone) மீளாக்கம் செய்யக்கூடிய திரையிலாக் கல்லச்சு வரைமுறை தற்காலத்தில் (screenless lithography) உருவாக்கப் பட்டுள்ளது. நிலைமின் செயல்முறைகளால் வண்ணநகலை உருவாக்கல். செய்தித் தாள்களிலும் பல வண்ணங்கள் அச்சடிக்கப் படுகின்றன. அதற்கான முன்னடிப்புச் செயல்முறைகள் (pre-printing processes) தற்காலத்தே உருவாகியுள்ளன. ஒரு தொழிலகத்தின் தேவைகளுக்கு நகல்வரை முறையால் (xerograph) ஒரு சில படிகளை எடுத்துக் கொள்ளமுடியும். விரிந்து வளர்ந்து வரும் நெளிவியல்புடைய தன்மையால் அச்சுத்தொழில் ஒரு முறையிலிருந்து மற்றொரு முறைக்கு மாறிக்கொண்டே இருப்பதால் ஒவ்வொரு முறையையும் அதனுடைய விலை, தரம், அளவு ஆகிய பண்புகளை ஒப்பிட்டு மதிப்பிட முடியாது. அச்சுத் தொழிலில் ஏற்பட்டுள்ள ஒவ்வொரு வளர்ச்சியும் ஒவ்வொரு குறிப்பிட்ட தேவையை நிறைவு செய்கிறது. அந்த அளவில் அது நாட்டுப் பொருளாதாரத்திற்கு வலுவூட்டுகிறது (அறிவியல் களஞ்சியம் 2005). உருவரை தகட்டுப் பதிப்பு, ஒளிப்படக் கலை, செதுக்கு அச்சுக்கலை, பட அச்சுக்கலை, புடைப்பு அச்சுக்கலை, தள அச்சுக்கலை, நிற அச்சுக்கலை, புடைப்புக் கைச் செதுக்குக்கலை ஆகியவற்றின் ஒன்றிணைந்த சேர்க்கையாகவே அச்சுக்கலை கருதப்படுகிறது.

# விடியலுக்காக...



திரு.பு.டிசாந்
பொறியியலாளர்

மனங்களில் ஓலமிடும் மட்டற்ற துயரங்களின்
கோர்வைகளாய் பொங்கி பிரசவிக்கும்
உணர்வலைகளில் படம் போடப்பட்டு
புரையோடிக் கொக்கரிக்கும் புனிதமில்லாத்
தன்மை புலப்படுகிறதா....

உன் விழிகளில் தெரியும் கேள்விக் கணைகள்
என் இருதயத்தையும் எத்தனையோ தடவைகள்
எத்தி எத்திக் குத்திக் குத்தி எகிறி எறிந்த நாட்கள்
இன்னும் ஆழமாய் என்னுள்....
ஆயினும் இங்கு எழுதப்பட்ட விதி இதுதானே யான் அறியேன்....

சாதிமத பூசல்களும் வெளிநபர்களின் ஆதிக்கமும்
உள்ளவர்களின் உடைவுகளும்
போரிட்டுப் போரிட்ட போதும் இனி
சமாதானமே சரியான வழி என்றிருந்த போதும்
வேண்டும் என்றே அவிழ்த்து விடப்படும் பிணக்குகள்
வந்திங்கே ஆட்கொண்டு வதைக்குதடா.....

மழையில் மட்டும் நிரம்பும் கிடங்குகளை
குளங்கள் என்று நினைப்பதனால் தான்
வெயிலிலும் வேளாண்மை உதவும்
குளங்களை பலர் மறந்து விடுகின்றனர்
நாம் இருக்கும் நிலையில்
இது தேவையா என்று
இழந்த சந்தோஷங்கள் தான் இங்கு அதிகம்

வானுயர்ந்த கோபுரங்களிலும்
அளவில்லா ஆடம்பரங்களிலும்
வெற்றியில்லை என்று மற்றவரை
நகைப்பதில் எமக்கு கிடைத்தது
ஏனோ பொழுதுபோக்கு மட்டும்தான்


வரம் வாங்கி வந்த பிள்ளைகள் வாழ்வும் அழியுதடா
ஆசைகள் அள்ளி வைத்து
பாசமுடன் காத்திருந்த பெற்றோரின்
கதறல்கள் கனக்குதடா மனதில்.....

எம் உப்புக்காற்றின் ரோசம் உன்னில் இருந்தால்
எழுந்து வா நீயும்
பொல்லாத புழுதி படிந்த
இம் மண்ணின் அழுக்காறுகளைத்
துடைத்தெறிவோம்.

## 2017 ஆம் ஆண்டு கலை போட்டிகளும் மைதான விளையாட்டுக்களும்











# 2017 அம் ஆண்டு நிலைய திருத்த வேலையும் அதன் பின்னரான பொங்கல் நிகழ்வும்






2017ம் ஆண்டு சித்திரைக் கொண்டாட்ட கடற் போட்டி





பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# கனவுகளின் அறுவடை

திருமதி ப.துஸ்யந்தன்
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
யாழ்ப்பாண பிரதேச செயலகம்.



மின்னல் பளிச்சிடும் உத்வேகம்
உணர்வெங்கும்
கரைபுரள மக்கள் சேவைக்காக
அர்ப்பணிப்பின் விரிபுலமாய்
இளையோர் இதயங்கள் கணந்தோறும்
சமூகத்தின் நிலைக்களனாய் நிமிரும்!

செழும் புனலும் தீங்காற்றும்
தாலாட்டும் எங்கள்
கொழும்புத்துறை சனசமூக
நிலையத்தின் மக்கள் பணிக்கு
மகுடம் சூட்டும்
அகவை அறுபத்து எட்டு இல்
பெருவிழா – அது
எமக்கெல்லாம் இன்பத்திருவிழா!

எமது மண்ணில்
அச்சம் விட்டு உயர்வின்
உச்சம் தொடும்
ஒரு இளஞ்சமூகம் முகைவிரிக்க
எமது நிலையம்
பட்டை தீட்டும்
உழைப்புப் பாசறை
ஒரு நாள்
விடியல் பூவாய் விரியும்

புலமைப்பரிசில்
பரீட்சையில் கூட ஒரு
புதுமைப் புரட்சிக்கு
கால் கோளாய் எமது
சனசமூக நிலையம்
அறிவைப் பரிசளிக்கும்
நெடுநற்பணி எமது மாணவ மணிகளின்
கல்விப்புலத்தில்
ஒரு பதுமைப் பூங்கனியின்
அறுவடையாய் மிளிரும்

உளத்திற்கு மட்டுமல்லாது
ஆற்றல் உடலில் அக வளர்ச்சிக்கும்
விடிவெள்ளியாய் தமது
பொது வாழ்வை ஆகுதியாக்கி
அர்ப்பணிக்கும் எமது நிலையம்
எமது கிராம வானின்
ஒளிகுன்றா ஆயிரம் தாரகைகளாக
கதிரொளியிலும் ஒரு
புதிரொளியாய் புலப்படும்!

மக்கள் நேயத்தை
இள மனங்களின் இதய தாகமாய்
வரித்துக் கொண்டு,
பகைமைத்தீயை படரவிடாது
தொலைதூரம் விரட்டி
அன்பின் ஆட்சியில்
உள்ளங்கள் நிறைய
ஒற்றுமைக்கு உயிரூட்டி
கிராமத்து மண்ணை
அமைதிப் பூங்காவாகப்படைக்கும்
எமது சனசமூக நிலையத்தின்
புலர் பொழுது போலும்
தளர் வறியாத சகப்பணி
மனித மாண்பை கொலுவிருத்தும்!

# வணிக வங்கிகள்



திரு. சி. றஜீவன்
முன்னாள் தலைவர்
கொழும்புத்துறை சனசமூக நிலையம்

## அறிமுகம்

இலாபத்திற்காக செயல்படும் ஒரு நிறுவனமே வணிக வங்கியாகும்.

வணிக வங்கிகளின் தொன்மைப் பணிகளாவது, பொதுமக்களின் வைப்பு நிதிகளை ஏற்றுக் கொள்வது, பல்வேறு துறைகளுக்கு கடனுதவி அளிப்பது ஆகியவை ஆகும். எனினும், நவீன வங்கிகளின் எழுச்சியாலும், வங்கியியல் முறை வளர்ந்து வருவது பொருளாதார வளர்ச்சியில் ஒரு இணைச் செயல்பாடாக வும் உள்ளதாலும் வணிக வங்கிகளின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க வகையில் மாற்றம் ஏற்பட்டது. வணிக வங்கிகள் நுகர்வோருக்கு இவ்வாறு பலவகை வங்கிப் பணிகளைச் செய்யத் தொடங்கியது. வணிக வங்கிகளின் அடிப்படை இயல்புகள் மாறாமலேயே இருந்தது.

முற்காலத்தில் வணிக வங்கிகள் கூட்டு நிறுவனங்களாகவே இலாப நோக்குடனேயே செயல்பட்டன. அவை குறுகியகால மற்றும் நடுத்தரகால கடன் களையும், வணிகர்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் கடனுதவி செய்து அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்தது. நவீன காலத்தில் வங்கிகள் நீண்டகால கடன்களை வியாபாரிகளுக்கும், தொழி லதிபர்களுக்கும் வழங்குகிறது.

## வணிக வங்கிகளின் பணிகள்

வைப்பு நிதியை ஏற்றுக் கொள்ளுதல் (அல்லது) ஈர்த்தல் மக்களின் சேமிப்பைத் திரட்டி வைப்பு நிதியை உருவாக்குகிறது. இந்த வைப்புநிதி மூவகைப்படும்.

### அ) சேமிப்பு வைப்பு நிதி :

இது மக்களுக்கு சாதாரணப் பணத்திற்கான பாதுகாப்புப் பெட்டகம் ஆகும். இவை சேமிப்புக் கணக்கில் வைக்கப்படுகிறது. வைப்புத் தொகைக்கு பெயரளவுக்கு வட்டி அளிக்கப்படுகிறது. மேலும் பணம் தேவைப்படும்போது வைப்புதாரருக்கு பணம் வழங்கப் படுகிறது. வழக்கில் குறிப்பிட்ட காலத்திற்கு குறிப்பிட்ட அளவு பணம், குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டும் பணம் திரும்பப் பெறலாம் என உள்ளது. காசோலைவசதிகளும் வைப்புதாரர்களுக்கு வழங்கப்படுகிறது.

### ஆ) நடைமுறை வைப்பு :

காசோலை மூலம் பணக்கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் தேவைப் பாடு உடையவர்களின் கணக்கு இது வாகும். இவ்வகைக் கணக்கு மீது வங்கிகள் வட்டி ஏதும் அளிக்காது. மாறாக, இவ்வகை கணக்குகளை வைத்திருப்பவர் களுக்கு சேவைக் கட்டணம் மேலதிக வட்டி விதிக்கிறது.

### இ) நிரந்தர வைப்பு :

இதனைக் கால வைப்பு என்றும் அழைக்கலாம். ஒப்பந்த காலத்திற்கு முன் வைப்பு நிதியைப் பெற இயலாது. இத்தகைய வைப்பு தொகைக்கு அதிக வட்டி வழங்கப்படுகிறது.

## கடன் வழங்குதல்

வங்கிகள் கடன் மற்றும் முன்பணம் வழங்குவதற்கு பல வழிமுறைகளைக் கையாளுகிறது. இச்செயல்பாடுகள் பலவகையாகும்.

*அ) ரொக்கக் கடன்*

தனி நபருக்கோ, நிறுவனங்க ளுக்கோ பிணையப் பத்திரங்களைப் பெற்று வங்கிகள் கடன் கொடுத்துதவு கிறது. கடன் வாங்குபவரின் கணக்கில் கடன் தொகை செலுத்தப்படுவதால் கடன் வாங்குபவர் தனக்குத் தேவைப்படும் போது அதனைப் பெற்றுக் கொள்ளலாம். கடன் தொகையின் உச்ச அளவு கடன் வாங்குபவரின் செலுத்து நிலையைப் பொருத்து வங்கி தீர்மானிக்கிறது. கடன் வாங்குவோர் தனது கடனை அதன் அளவுக்குள்ளோ அல்லது அதற்குள் ளடங்கியோ பெற்றுக் கொள்ளலாம். கடன் பெறுபவர் பெற்ற கடனுக்கு மட்டுமே வட்டியளித்தல் போதுமானது.

*ஆ) மிகைப்பற்று வசதி*

நம்பிக்கைக்கும், மரியாதைக்குரிய வாடிக்கையாளர் இச்சலுகையைப் பெறு கின்றனர். வாடிக்கையாளர் தமது வங்கிக் கணக்கில் பணம் இல்லையென் றாலும் தனது தேவைக்கு ஏற்ப காசோலையை வழங்கி மிகைப்பற்றாக பணத்தைப் பெறலாம்.

*இ) மாற்றுச் சீட்டுக்களை கழிவு செய்தல்*

சாதாரண மூன்று மாதங்களுக்கு, வணிகப் பத்திரங்களையோ, உறுதிப் பத்திரத்தையோ மற்றும் மாற்றுச் சீட்டுகளை மறுகழிவு செய்தோ இச்செயல் பாடு வணிக வங்கிகளால் மேற்கொள்ளப் படுகிறது. உண்டியல்களின் முகமதிப்பிற் கேற்ப வட்டி மற்றும் சேகரிப்புக் கட்டணத்தை விதித்தது போக மீதம் உள்ள தொகையை வாடிக்கையாளரிடமே அளித்து விடுகிறது. மாற்றுச்சீட்டு உண்டியல் முதிர்வுறும்போது வாடிக்கை யாளரிடமிருந்து பணம் பெறப்படுகிறது.

## கடன் உருவாக்கம்

வங்கியாளரால் வழங்கப்படும் கடன் ஒரு வைப்புத்தொகையை உருவாக் குகிறது. ஏனெனில் வங்கி கடனை வழங்கும்போது வாடிக்கையாளர் பெயரில் ஒரு கணக்கு தொடங்கப் பெறுகிறது கடன் தொகை அவர் கணக்கில் செலுத்தப்படுகிறது. கடன் வாங்கியவர் தனது தேவைக்கேற்ப அதனை வங்கி யிலிருந்து எடுத்துக்கொள்ளலாம். இவ்வகை வைப்புத்தொகை பணஇருப்பை அதிகரித்து அதன்மூலம் பண சுழற்சி யானது புதிய பணப்புழக்கத்தை ஏற்படுத்தும்.

## இதரப் பணிகள்

வணிக வங்கிகள் ஆற்றும் இதர முக்கியப் பணிகளைப் பார்ப்போம்.

*அ) நிதியை மாற்றுதல்*

நவீன காலத்தில் வர்த்தகம் மற்றும் வாணிபத்தால் நிதியை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவது கடினமாகிறது. வங்கிகள் காசோலை வரைவோலை, வங்கி ஆணை, பயணியர் காசோலை போன்ற சாதனங்களால் இவ்விடர்ப்பாட்டை போக்குகிறது. இதனை சரிசெய்தல் என்கிறோம். இப்பணி வங்கிகளினால் செம்மையாக நிறைவேற் றப்படுகிறது.

*ஆ) முகமைப் பணிகள்*

தனது வாடிக்கையாளருக்கு நிதி முகர்வர்களாக வணிக வங்கிகள் செயல் படுகின்றன. ஆயுள் காப்பீட்டுத் தொகை,

ஓய்வூதியம், பங்குத்தொகை மூலதனத் தேவை போன்ற அனைத்துத் தேவைகளையும் வணிக வங்கிகள் வாடிக்கையாளர்களுக்காக செய்து தரு கிறது. இதுபோல், அவை தங்கம், வெள்ளி மற்றும் பாதுகாப்புப் பத்திரம் போன்றவற்றை வாங்கவும், விற்கவும் செய்கின்றன.

இ) பொது பயன்பாட்டுச் சேவைகள்

1) பொது பயன்பாட்டுச் சேவைகளான, வாடிக்கையாளர்களின் மதிப்புமிக்க பொருள்களை பாதுகாப்புப் பெட்டக வசதி ஏற்படுத்தித் தருகிறது.

2) கடன் கடிதம் வாடிக்கையாளருக்கு வழங்குகிறது.

3) பொது நிறுவனங்கள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்கள் பங்குகளை வாங்கி காப்பீட்டு செய்து நற்பணியாற்றுகிறது.

4. வர்த்தகம், வணிகம் தொழில் சார்ந்த தகவல் மற்றும் புள்ளியியல் ஆதாரங்களைத் தொகுத்தளிக்கிறது.

இவ்வாறு வணிக வங்கிகள் சமுதாயத்திற்கு பல மதிப்புமிக்க சேவைகளைப் புரிகின்றன. வளர்ந்த வங்கியியல் முறை தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும். சிறந்த பொருளாதார சமுதாயத்தை உருவாக்க வங்கிகள் உயிரோட்டமாக உள்ளன. இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் வணிக வங்கிகளை "வளர்ச்சி வங்கியியல்" என்றும் அழைக்கலாம். இவ்வங்கிகள் தங்களின் நிதி ஆதாரம் மூலம் முன்னுரிமைத் துறைக்கும், வலிமை குன்றிய துறைகளுக்கும் மற்றும் வேலை வாய்ப்புச் சார்ந்த திட்டங்களுக்கும் முதலீடு செய்து நாட்டின் வளர்ச்சியில் முக்கியப் பங்கேற்கிறது.

# மனித செயற்பாடுகளும் இயற்கையும்



**செல்வி வ.லோஜினி**
மாணவி - சட்டத்துறை
கொழும்பு பல்கலைக்கழகம்

கல்தோன்றி மண்தோன்றா முன்தோன்றும் காலத்தினைத் தழுவியவர்களாக எமது தமிழ் மூதாதையர்களானவர் காணப்படுகின்றனர். இவர்கள் அன்றைய காலங்களில் இயற்கையினையே தமது தெய்வங்களாகவும், தமது ஆற்றல்களினைப் பலப்படுத்திக்கொள்வதற்குமான உந்துதல் சக்தியாக இயற்கை தெய்வங்களினை உருவகப்படுத்தி தமது மனதில் நினைத்து வழிபட்டு வந்தனர். இயற்கையின் உடைய சீற்றத்தினால் எதிர்கொள்ளும் இன்னல்களினையும் வெறுமனே அழிவுகளாக மட்டும் கருதாது தம்முடைய தவறுகளின் காரணத்தினாலேயே இயற்கை அன்னை அழிவினை ஏற்படுத்தியிருப்பர் என்று கருதினார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக சூரியன், இடி, மின்னல், மழை என்பவற்றினை வழிபட்ட தன்மையினைக் குறிப்பிடலாம். இவ்வாறு வழிபட்டு வந்தவன் காலங்கள் செல்லச் செல்ல அவனுடைய தேவைகள் மற்றும் விருப்புக்கள் அதிகரித்தமையினால் அவனது தேவைகளினை பூர்த்தி செய்வதற்காக இயற்கையினை தன்னுடைய செயற்பாடுகளின் ஊடாக திணிப்பதற்கு ஆரம்பித்தான் எனலாம்.

கிரேக்க காலத்தை சேர்ந்த கிரேக்க மக்களால் தமது அனைத்து செயற்பாட்டின் விருத்தியினைப் பயன்படுத்துவதற்காக இயற்கை தெய்வங்களிற்கு உருவம் கொடுத்து அவற்றினை வழிபட்டு வந்தனர் என தொல்லியல் மூலாதாரங்களானவை வெளிப்படுத்தி நிற்கின்றன. இவற்றிற்கு ஆதாரமாகக் கடல்களின் அதிபதியாக நெப்ரியூன், காதல்களின் அதிபதியான வீனஸ், காற்றின் அதிபதி வருணனையும் வழிபட்டு வந்தமையினைக் குறிப்பிடலாம். இதனையடுத்து வந்த உரோமர் காலத்திலும் கூட இயற்கைக்கு பயந்து, அவற்றினை தெய்வங்களாக வழிபட்டே தமது தேவைகளினைப் பூர்த்தி செய்தனர்.

காலங்கள் மாறமாற மனிதன் தன்னுடைய தேவைகளை நிவர்த்தி செய்வதனைக் காட்டிலும் விருப்பங்களிற்கே அதிக முன்னுரிமையினை வழங்குவதற்கு ஆரம்பித்தான். இதனால் தனது விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கு தவறுகின்ற பட்சத்தில் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக இயற்கை அன்னையினுடைய வளங்களினை சுரண்டுவதற்கு தலைப்பட்டன. ஆரம்பத்தில் இச்சுரண்டல் நிலைமையானது சிறியளவில் காணப்பட்ட போதிலும் பின்னைய இன்றைய காலங்களில் இவ் இயற்கையை சுரண்டுகின்ற போக்கானது சட்டவிரோதமான செயற்பாடுகளின் ஊடாகவும் இடம்பெறுகின்ற தன்மையினை தினந்தோறும் நாம் காணுகின்ற ஊடகங்கள் மற்றும் தொடர்பாடல் சாதனங்களின் ஊடாக அறிந்து கொள்ள முடிகின்றது என்றே கூறலாம்.

மனித செயற்பாடுகளானவை இயற்கை அன்னையின் நிலை பேண்தகு தகைமையினை எவ்வகையில் மாற்றத்திற்கு உட்படுத்துகின்றது என்பதனை நாம் பின்வருமாறு நோக்குவோம். அதாவது, நீர் வளத்தினை எடுத்து நோக்குகையில், "நீரின்றி அமையாது உலகு" என எமது வள்ளுவப் பெருந்தகை கூறிய வாக்கிற்கமைய மனிதனது ஜீவனோபாய தேவையைப் பூர்த்தி செய்வதாக இவ் நீரானது அமைகின்றது எனலாம். இதனை ஆரம்பகால மன்னர்கள் உணர்ந்து

கொண்டதன் காரணத்தினாலேயே நீர்ப்பாசனத்துறையினை மேம்படுத்துவதற்காக குளங்கள் மற்றும் கால்வாய்களினை அமைத்தான் என மன்னர்களுடைய கல்வெட்டுக்கள், தொல்பொருட்களானவை சான்று பகர்கின்றன எனலாம். இதற்கு எடுத்துக்காட்டாக 1ம் பராக்கிரமபாகு மன்னனால் "ஒரு துளி நீரையேனும் விவசாயத்திற்கு பயன்படுத்தாமல் வீணே கடலைச் சென்றடைய விடமாட்டேன்" என கூறியமையினைக் குறிப்பிடலாம்.

ஆனால் தற்போது இதனை அறியாத எமது மானிட சமூகம் நீர்நிலைகளினை மாசுபடுத்தல், குப்பைக்ளைக் கொட்டுதல், தொழிற்சாலை கழிவுகளை நீர்நிலைகளுடன் கலத்தல் போன்ற அநாகரிக செயற்பாடுகள் ஊடாக மேற்குலக நாடுகளிடம் நீரினை கடனாகப் பெறுகின்ற நிலைமையானது உருவாகின்றது. இதனையே எமது விஞ்ஞானிகள் சமூகத்தினரால் 2025 ஆம் ஆண்டளவில் ஏறத்தாழ 250ற்கு மேற்பட்ட நாடுகள் நீர்தட்டுப்பாட்டை எதிர்நோக்க வேண்டி நேரிடும் என்று அறிக்கையினை வெளியிட்டனர் எனலாம்.

அடுத்தததாக நிலத்தினை மனித விருப்புக்கள் எவ்வழியில் குந்தக நிலைமையினை உண்டாக்குகின்றன என்பதனை கீழ்வருமாறு நோக்குவோம். ஏதாவது முறையற்ற விதத்தில் காடுகளினை அழித்தல், நிலத்தினை தேவையற்ற வகையில் ஆழமாக்கி மணல் மற்றும் கனியவளங்களை அகழுதல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றன தன்மையினைக் குறிப்பிடலாம். இதனாலேயே எமது அரசாங்கம் பொதுமக்கள் இயற்கை வளத்தினை தேவைக்கதிகளவில் சுரண்டுவதனை தடுப்பதற்காக மணல், கனிய வளங்களை அகழுகின்ற போது அரசின் அனுமதியுடனே மேற்கொள்ள வேண்டும் எனக் கூறுகின்றது. அவ்வாறு மீறுவோரை அரசு பல வழியில் தண்டனைக்குட்படுத்துவோம் என்று சட்டங்களினை உருவாக்கிய போதிலும் கூட இத்தகைய செயற்பாடுகள் ஆனவை இன்றும் கூட சட்டவிரோத வழியில் இடம்பெற்ற வண்ணந்தான் இருக்கின்றன.

வளியினை மனித செயற்பாடுகளானவை எவ்வகையில் பாதிப்பிற்கு உட்படுத்துகின்றன என்று நோக்குகையில், தேவையற்ற வகையில் வாகனப்புகை, தொழிற்சாலைப்புகையினை வளியுடன் கலக்கி விடுதல் போன்ற செயற்பாடுகளானாலேயே வளியானது மாசடைந்து வருகின்றது எனலாம். ஏனெனில் மனிதன் வாகனங்களினை கொள்வனவு செய்கின்ற போது தனது போக்குவரத்து தேவையினை மட்டும் பூர்த்தி செய்வதனை நோக்குகின்றானா அல்லது விருப்பினை வெளிப்படுத்துகின்றானா எனில் விருப்பினையே பெருமளவில் வெளிப்படுத்தி நிற்கின்றான் என்றே கூறலாம். ஆனால் இதனை இழிவளவாக்கும் நோக்கில் அரசு சட்டங்கள், விழிப்புணர்வை ஏற்படுத்தினாலும் கூட மனித செயற்பாடுகளினை கட்டுப்படுத்த முடியாமலே போகின்றன எனலாம்.

எனவே மேற்கூறப்பட்ட விடயங்களினைத் தொகுத்து நோக்குவதனூடாக, மனித செயற்பாடுகள் ஆரம்ப காலம் போன்று தேவையினை மட்டுமே பூர்த்தி செய்கின்றவாறே காணப்படவேண்டும். மாறாக விருப்பங்களினை அதிகளவில் முதன்மைப்படுத்தாமல் இயற்கை வளங்களினை தேவைக்கேற்றாற் போன்றே பயன்படுத்த முனைய வேண்டும். ஆனால் தற்போதைய நவீன கால யுகத்தை அனுபவித்து வருகின்ற மக்கள் பொது நலனைக் காட்டிலும் சுயநலப் போக்கிற்கே செல்கின்றனர் என்பதால் இயற்கை அன்னையின் வளங்களானவை அதிகளவில் சுரண்டலிற்கு ஆளாகின்றன என்பதால் சட்டங்கள் இறுக்கத் தன்மையினை மேலும் கடைப்பிடிக்க வேண்டும் எனத் தெரிய வருகின்றது என்றே கூறலாம்.

# மனம் தொட்ட வரிகள் ...



**திருமதி துஷியரூபி கோபிகிருஸ்ணா**
கொழும்புத்துறை

- *தாயிடமிருந்து வரும் ஒரு ஆறுதல் வார்த்தையே போதுமானது எத்தகைய கவலைகளில் இருந்து விடுபடுவதற்கு.*

- *அப்பாவின் வண்டியில் முன் அமர்ந்து வேகமாய் முட்ட வரும் காற்றோடு சண்டையிடும் ஆனந்தத்தை எந்தப்பயணமும் தந்துவிடாது.*

- *ஒரு ஏழைக்கு நல்ல புத்தகம் எதுவும் தேவையில்லை! அப்பாவின் வாழ்க்கை அனுபவம் என்ற புத்தகம் மட்டும் போதுமானது!!*

- *வாழ்க்கையில் தியாகம் செய்பவர் "தந்தை" வாழ்க்கையையே தியாகம் செய்பவர் அம்மா.*

- *அம்மாவின் திட்டுகள் அனைத்துமே அப்பாவின் திட்டுக்களில் இருந்து பாதுகாக்கவே.*

- *பெரும்பாலும் அப்பா நமக்காக வாங்கி வரும் ஒவ்வொரு பொருளும் அவர் காலத்தில் அவருக்கு அது கிடைக்கப் பெறாதவையாகவே இருந்திருக்கும்.*

- *சாப்பிட்டியா? என்பது அம்மாவின் பாசமென்றால், சாப்பிட்டானான்னு கேளு என்பது அப்பாவின் பாசம்.*

- *வீடு திரும்பும் தங்கள் அப்பாவின் வண்டி சத்தம் மட்டும் குழந்தைகளுக்கு தனித்து கேட்கிறது.*

- *பெட்ரோல் ராங்கில் தூங்கிச் செல்லும் குழந்தையை தூக்கம் கலைக்காமல் வண்டியோட்டும் ஒவ்வோர் அப்பாவிற்குள்ளும் அழகாய் ஒளிந்துள்ளது தாய்மை.*

- *08 புள்ளி கோலத்தினை குறுக்கும் நெடுக்குமாய் இணைக்கும் மனைவி கை தேர்ந்த ஓவியனாகிறாள். தவறியும் அதை மிதிக்காது தாண்டும் கணவன் சிறந்த ரசிகனாகிறார்.*

- *"இன்று ஏன் அம்மா இந்த சாப்பாடு?" அப்பாவுக்குப் பிடிக்கும் தம்பி அண்ணா உனக்கு பிடிக்கும் என்னிக்குமே தனக்கு இது பிடிக்கும்னு சொன்னதே இல்ல அம்மா.*

- *புண்பட்ட மனம் எல்லாவற்றிலிருந்தும் ஒதுங்கி தனியே நிற்கிறது. புண்பட்ட மனம் தேவையற்றதை ஒதுக்கி ஓரமாய் கடந்து செல்கிறது.*

# தமிழர் பண்பாட்டில் மறந்தவையும் நலிந்தவையும்



**செல்வி ரவிச்சந்திரன் கஸ்தூரி**
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
தரம் - 8

மனிதனை மனிதத்துவமுடையவனாக்க அவனாலேயே உருவாக்கப்பட்ட எண்ணிலடங்காத விழுமியங்கள், பழக்கவழக்கங்கள், நல் ஒழுகலாறுகள், நடை, உடை, பாவனை என்ற ஏராளமான சமூக நடத்தைகளை ஒருங்கே கொண்டு அமைந்த ஒரு எண்ணக்கருவையே 'பண்பாடு' என வரையறை செய்யலாம். மனிதனுள் மனிதம் பேணுவதில் இன்றியமையாத இப்பண்பாடு, அவ்வங் இனக்குழுமங்களிடையே வழக்கில் இருக்கும் மொழி, கலாசாரம் என்பவற்றை மூலாதாரமாக அடியொற்றியே கட்டியெழுப்பப்படுகின்றது என்பதன் உட்கிடையில் சங்கம் அமைத்து தமிழ் எனும் அரும்பொக்கிஷத்தை காக்க எண்ணுவதற்கு விளைந்த எம் 'தமிழ் மொழி' தனித்தன்மையைப் பெறுவது வெளிப்பட்டமை உண்மை. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்தகுடியாய் நம் தமிழ்க்குடி தனக்கெனக் கொண்டிருந்த பண்பாட்டு அடையாளங்கள் முழு உலகத்தாலும் வியந்து போற்றக்கூடிய வகையில் அமைந்தவை. அவற்றுக்கு இன்றளவிலும் இருக்கின்ற செல்வாக்கு யாவராலும் அறியப்பட்டதே. இருந்தும் காலம் தன்னகத்தே மாற்றங்களை உள்வாங்க உள்வாங்க எம் இனிய மொழியின் வழியே எம்மவர் கட்டியெழுப்பிய பண்பாட்டு அம்சங்கள் மறந்தவையாகவும், நலிந்தவையாகவும் போய்க்கொண்டு இருக்கின்றமையை தொடர்ந்தும் விமர்சித்து வருகின்றமையும் கண்கூடு.

ஒரு மொழி தனக்கேயுரிய தனித்தன்மையைக் கொண்டு தனக்கென்று அமைக்கவேண்டிய எத்தனை அம்சங்களைக் கொண்டிருக்கவேண்டுமா அத்தனையிலும், எத்தனையாம் மொழியை அடியாதாரமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட பண்பாடு கொண்டிருக்க வேண்டும் என்ற கேள்வி தமிழ் மொழி முன்னே இல்லை. ஏனெனில் அத்தனையும் கொண்ட அரும்பொக்கிசம் எமது தமிழர் பண்பாடு ஆகும். மனிதனின் உடை, நடை, பாவனை என சமூக இருப்புக்கு அவனுக்கு இன்றியமையாத பலவற்றை எம்மொழி வடித்துத் தருமாற்றைக் கொண்டது.

"கற்க கசடறக் கற்க கற்றவை
கற்றபின் நிற்க அதற்குத் தக"

எனும் திருக்குறளினூடு தமிழ் இலக்கியம் கூறும் எந்த நன்னெறியை நாம் பின்பற்றுவோம். எமது செம்மொழி கற்பித்த எதனை நடைமுறைப்படுத்துகிறோம் என்ன கேள்வி எம்மவரிடையே ஏற்படுத்துகிறது.

"மாற்றம் ஒன்றே மாறா விதி" என்னும் எண்ணக்கருவின் கீழ் "பழையன கழிதலும் புதியன புகுதலும்" எனும் சிந்தனையின்கீழ் நாம் செய்யும் எமது பண்பாட்டுக்கு எதிரான செயற்பாடுகளை தனி மனித மனதளவில் மாற்றம் ஏற்படுத்துவதன் மூலம் மாற்றி அமைத்துப் பண்பாடு பேணுவோமாக.

# பசுமைத் தாயகம் நோக்கி ...



**செல்வி ச.துஷானி**
தரம் - 11
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

இன்றைய உலகிலே எமது சூழலானது மிகவும் பசுமையின்றி மாசிற்கு உட்பட்டு காணப்படுகின்றது. முன்னைய காலத்திலே எமது சூழலானது எங்கும் பசுமை நிறைந்த சூழலாக காணப்பட்டது. ஆனால் தற்போது மனித செயற்பாடுகளின் காரணத்தால் மட்டுமன்றி இயற்கை அனர்த்தங்கள் என்பவற்றால் பச்மையின்றி வரட்சியாக வரண்டு காணப்படுகின்றன. பச்சைப் பசேலாக காணப்பட்ட மரங்கள், செடிகள், கொடிகள், புல்வெளிகள் போன்றன தற்போது அழிவடைந்து வரண்ட பூமியாக காணப்படுகின்றது.

இவ்வாறு மாசடைந்து காணப் படுகின்றன. நீரானது தொழிற்சாலை யிலிருந்து வெளிவிடப்படும் கழிவுகள், நச்சுப்பதார்த்தங்கள் என்பன நீருடன் கலப்பதன் மூலமும், விவசாயக் கழிவுகள் மற்றும் விலங்குக் கழிவுகள் என்பன கலப்பதன் மூலமும், குளங்கள், ஆறுகள் என்பவற்றில் விலங்குகளை குளிப்பாட்டு வதன் மூலமும் நீர் மாசடைந்து வருகின்றது. இவ்வாறு நீரானது மாசடைந்து வருவதால் சூழலில் நீர்ப்பற்றாக்குறை ஏற்படுகின்றது. மக்களின் அன்றாட தேவைகளிற்கு நீர் இல்லாமல் மற்றும் விவசாய, வசதிகள், கைத்தொழில் வசதிகள் என்பவற்றுக்கு நீர் கிடைக்காமல் போவதனால் எமது உலகின் பசுமை குறைவடைந்து போகின்றது. இவ்வாறு நீர்மாசடைவதற்கு மனிதர்களாகிய நாம் முழுக்காரணமாக அமைகின்றோம்.

இவ்வாறு நீர் மாசடைதலைக் குறைத்து எமது பசுமையை போக்க நீரை கவனமாக பாதுகாத்து வருதல் அவசியமாகும். அல்லாவிடின் நீரின்றி மரங்களும் அழிவடைந்து போய்விடும். பின்பு நாம் காபனீர்ரொட்சைட்டு வாயுவானது சூழலில் அதிகரிப்பதன் மூலம் வளி மாசடையும். இதனால் தூய்மையற்ற வளியை நாம் சுவாசிப்பதன் மூலம் பல்வேறு புற்றுநோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. மற்றும் எமக்கு தாவரங்களால் வெளிவிடப்படும் ஒட்சிசன் வாயு எமக்கு கிடைக்காமல் சுவாசித்தல் இன்றி உயிர் இழந்து விடுவோம். இவ்வாறு பல பிரச்சினைகளை தடுப்பதற்கு மரங்களை வெட்டுதல் கூடாது. இவ்வாறு மரங்களை வெட்டி விடுவதன் மூலம் ஒட்சிசன் வாயு அதிகரித்து சூழல் வெப்பமடைகிறது. இவ்வாறு வெப்பமடைவதன் மூலம் துருவ பனிக்கட்டிகள் வெப்பமடைந்து ஆவியாக நீராக மாற்றமடைகின்றன. இதன்மூலம் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றன. வெள்ளப்பெருக்கு போன்ற காரணங்க ளால் பயிர்கள் அழிவடைந்து பசுமை சீரழிகின்றது.

மற்றும் தொழிற்சாலையிலிருந்து வெளிவிடப்படும் புகைகள், வாயுக்கள், வாகனங்களில் இருந்து வெளிவிடப்படும் புகைகள் போன்ற காரணங்களால் வளிமாசடைகின்றது. அதுமட்டுமன்றி தற்போது சிலர் வாயினாலும் புகை விடுகின்றனர். இவ்வாறு புகை விடுவத னால் அதனை நாங்கள் சுவாசிப்பதனால் எமக்கு புற்றுநோய்கள் ஏற்படுகின்றது. வளியானது பல்வேறு வகையில்

மாசடைகின்றது. இதனை தடுக்க தொழிற்சாலையில் வெளியிடப்படும் புகைவளியுடன் சேரவிடாது தடுத்தல், மற்றும் வாகனப் புகைகளை வளியுடன் சேரவிடுவதை தடுத்தல் போன்ற காரணங்களால் வளிமாசடைதலை தடுக்கமுடியும்.

மேலும் மனிதர்களாகிய நாம் மரங்களை வெட்டிய பின்னர் புதிய கட்டடங்களை அமைக்கின்றோம். இவ்வாறு அமைப்பதன் மூலம் சூழற் வெப்பநிலை அதிகரிக்கின்றது. வெப்பநிலை அதிகரிப்பதன் மூலம் மழையானது கிடைக்காமல் மண்வளம் குன்றும். பயிர்கள் அழிவடையும். இப் பல பிரச்சனைகளின் மூலம் பசுமையற்ற சூழலாக காணப்படுகின்றது. மேலும் இரத்தினக்கற்களை அகழ்வதன் மூலம் நிலம் மாசடைகின்றது. மேலும் பிளாஸ்ரிக் பொருட்களை நிலத்தினுள் புதைப்பதன் மூலமும், கடற்கரை பிரதேசத்திலுள்ள மண்ணை அகழ்வதன் மூலமும், கனியவளங்களை அகழ்ந்தெடுப்பதன் மூலமும் நிலமானது மாசடைந்து காணப்படுகின்றது.

இதனை தடுப்பதற்கு பிளாஸ்ரிக் பொருட்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்தல் வேண்டும். அல்லாவிடின் பிளாஸ்ரிக்கை எரிப்பதன் மூலம் காபனோரொட்சைட்டு வாயு வெளிவிடப்படும் இதன்மூலம் வளி மாசடைகின்றது. மற்றும் மனிதன் கைத்தொழில் பயன்படுத்தி கட்டடங்களை உருவாக்குவதன் மூலம் நச்சுவாயுக்கள், பார உலோகங்கள் என்பன உருவாக்கப் படுகின்றது. இதன்மூலம் வளி உணவுகளுடன் கலக்கப்படுவதால் கலப்படம் உருவாகின்றது.

மேலும் நாம் மனித செயற்பாடுகளால் பசுமையாக உள்ள சூழல் பசுமையற்று காணப்படுகின்றது. இதனை தடுத்து பசுமை சூழலை உருவாக்கி நல்லதோர் சூழலை உருவாக்குவோம்.

## நினைவு கூருகின்றோம்



கடந்த வருடம் பங்குனி 12 ஆம் திகதி அமரத்துவம் அடைந்த கடந்த கால நிர்வாக உறுப்பினரும் விளையாட்டுக்கழக வீரருமாகிய அமரர் கு.தனுஷன்

# சுற்றாடலும் நாமும்



செ. வைஷாலி
யா/வேம்படி உயர்தர பாடசாலை

இன்றைய சூழலில் சுத்தமான காற்றை சுவாசிக்க முடிவதில்லை சுத்தமான நீரைப் பருகமுடியாத நிலையும் உள்ளது. நீர், நிலம் ஆகிய இரண்டும் தனது தன்மையை இழந்துள்ளதால் நாம் இவ்வாறான பல இன்னல்களை சந்திக்க வேண்டியுள்ளது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் எமது முன்னோர்கள் அனுபவித்து வந்த இயற்கை வளங்கள் இன்று அருகி வருவதைக் காண்கின்றோம். நீர், மலைத்தொடர்கள், ஆறுகள், கடல்கள், தாதுக்கள் என எண்ணற்ற இயற்கை வளங்களே அவையாகும். மனிதன் முற்காலத்தில் இயற்கையை சார்ந்தே வாழ்ந்து வந்தான். அதனாலேயே அவன் இயற்கையை தெய்வமாகக் கருதி வழிபட்டு வந்தான். மனித இனத்தில் பெருங்கொடை இயற்கை வளங்களேயாகும்.

இன்றைய தொழினுட்ப வளர்ச்சியின் காரணமாகவும் மனிதனுடைய பல்வேறு தேவைகளுக்காகவும் இயற்கை வளங்கள் அழிவடைவதைக் காண்கின்றோம். நீரானது உலகில் எழுபது சதவீதம் காணப்பட்டாலும் கூட படிப்பறிவுள்ள சமூகத்தினராகிய நாம் எமது அறியாமை காரணமாக நீரை வீணாக்குகின்றோம். உதாரணமாக நீரினுள் குப்பை இடுதல், தூய நீரைக் கொண்டு பறவைகள், மிருகங்களைக் குளிப்பாட்டுதல் போன்ற செயற்பாடுகளின் காரணமாக நீரானது நுகர்வுக்குப் பொருத்தமற்ற விதத்தில் மாறுகின்றது.

தற்காலத்தில் பிளாஸ்ரிக், பொலித்தீன் ஆகியவற்றின் பாவனை சூழலில் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றது. கடந்த ஆண்டு சுற்றாடல் தினத்தின் கருப்பொருள் யாதெனில் "பிளாஸ்ரிக் பாவனையை ஒழிப்போம்" மனிதர்களாகிய எமக்குள் எழும் கேள்வி யாதெனில் "நாம் பொலித்தீன் பிளாஸ்ரிக்குப் பதிலாக எதனை உபயோகிப்பது என்று?" எமது மூதாதையர்கள், பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனைக்கு வரும் முன் எதனைப் பாவித்தார்கள் என்றால் பனையோலை, துணியினாலான பைகள், உலோக அல்லது கடதாசிப் பெட்டிகள் என்பவற்றையே ஆகும். எனவே நாம் பிளாஸ்ரிக் பாவனையை ஒரு படியளவில் குறைப்பதோடு, அவற்றை எரிப்பதைத் தடுக்க வேண்டும். நாம் பிளாஸ்ரிக் பைகளை எரிப்பதால் தீங்கு விளைவிக்கும் வாயுக்களான காபனோரொட்சைட், கந்தகவீரொட்சைட், நைதரசனீரொட்சைட் என்பன வெளியேறும். இவை வெளியேறுவதன் காரணமாக வளிமாசடைதல் ஏற்படும். நாம் இவ்வாறான தூய்மையற்ற வளியைச் சுவாசிப்பதனால் சுவாசப் புற்றுநோய்கள் ஏற்படக் கூடிய சான்றுகள் உண்டு. எனவே இவ்வாறான இயற்கையைச் சீரழிக்கும் நிகழ்வுகள் மீது மக்கள் விழிப்படைய வேண்டும் என்பதுடன் மீறுவோர் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# செவ்வானம்



**செல்வி ரவிச்சந்திரன் கஸ்தூரி**
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
தரம் - 8


*செவ்வானம் சிவக்குது பார்*
*மனதில் புது இன்பம் தோன்றுது பார்*
*கதிரவன் வருகை பார்*
*பாரெங்கும் இன்பம் பொங்குது பார்*

*பசுங்கன்று துள்ளி ஓடுது பார்*
*தாயின் அரவணைப்பை நாடுது பார்.*
*பூக்கள் மலர்ந்தன பார், புதுமணம் வீசுது பார்*


*வைகறை துயில் நீங்கி எழுந்து பார்*
*பாரினில் புது இன்பம் தோன்றுது பார்*
*காலையும் ஆனது பார்*

*மக்கள் மனதில் புதுத்தென்றல்*
*மனதில் கஷ்டம் பறந்தது பார்*
*விடியலைத் தேடுகிறேன் நானும்*
*நாளை மலரும் காலை யிலே*

# 2016 ஆம் ஆண்டு வருடாந்த சித்திரைக் கொண்டாட்ட இல்ல நிகழ்வுகள்



## 2016ம் ஆண்டு முன்பள்ளி சிறார்களின் பிரியாவிடை நிகழ்வு





# ஒழுக்கம் உயர்வு தரும்




**செல்வன் சு.பாவலன்**
தரம் - 6
யா/ இந்துக்கல்லூரி

நாம் எப்போதும் ஒழுக்கம் உடையவராக இருக்க வேண்டும். அதாவது நகத்தை வெட்டுதல், தினமும் குளித்தல், தினமும் பல்துலக்குதல் போன்ற செயற்பாடுகளை காலை /மாலை என ஒரு தடவையாவது. இவ்வாறான செயற்பாடுகளை செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் எமது வாழ்வில் ஒரு எண்ணம் உருவாகும். பெரியார், பெற்றோர் முன்னிலையில் தீய வார்த்தைகளை பேசுவதும், தவறானதொன்றாகும். இந்த ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தால். எமது வாழ்வின் உயர்வை அடையலாம். இதற்காகத் தான் மகாத்மா காந்தி தனது தாயிடம் "நான் எனது வாழ்வில் மதுபானம் அருந்த மாட்டேன்" என்று கூறினார். இதற்காக ஒரு புலவர் "சுகாதாரக் கும்பி" என்ற பாடலைப் பாடியுள்ளார். நாம் எமது வாழ்விலே உண்மை பேசக் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் ஆலயங்கள் மற்றும் பொது நூலகங்களில் அமைதியாக இருக்கப்பழக வேண்டும். எமது வாழ்விலே வெற்றி தோல்விகளை மதித்து வாழ வேண்டும். எனவே சிறுவர்களாகிய நாம் "ஒழுக்கம் உயர்வு தரும்" என்பதற்கிணங்க ஓர் ஊறுதிமொழி எடுத்து மகிழ்வாக வாழ்வோமாக!

## நீண்டகாலமாக தினசரி வார பத்திரிகை வழங்குவோர்கள்

| | |
|---|---|
| உதயன் பத்திரிகை | - கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் |
| வீரகேசரி பத்திரிகை | - திரு. சி.ரஜிவன் |
| வலம்புரி பத்திரிகை | - திரு. ச.லினோர்த்தன் |
| தினக்குரல் பத்திரிகை | - செல்வி .கா.சஞ்சனா |
| மெட்ரோ பத்திரிகை | - மெகா பதிப்பகம் |
| மித்திரன் | - திருமதி. இ. அருளையா |

# பத்திரிகை



செல்வன் ஜோ.சிந்துஜன்
தரம் 9

காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான் இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்
ஊரினை நாட்ட இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறிவாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே.

அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்மை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
தெழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்
நறுமண இதழ்ப்பெண்ணே உன்
நலம்காணார் ஞாலம் காணார்

கடும்புதர் விலக்கிச் சென்று
களாப்பழம் சேர்ப்பார் போலே
நெடும்புவி மக்கட் கான
நினைப்பினிற் சென்று நெஞ்சிற்
படும்ப நுணுக்கம் சேர்ப்பார்
படித்தவர் அவற்றை யெல்லாம்
"கொடும்" என அள்ளி உன்தாள்
கொண்டார்க்குக் கொண்டுபோவாய்

வானிடைநிகழும் கோடி
மாயங்கள், மாநிலத்தில்
ஊனிடை உயிரில் வாழ்வின்
உட்புறம் வெளிப்பறத்தே

ஆனநற் கொள்கை, அன்பின்
அற்புதம் இயற்கைக் கூத்துக்
தேனிதழ் தன்னிற் சேர்த்துத்
தித்திக்கத் தருவாய் நித்தம்!

# எமது கிராமத்து வாழ்க்கை



திருமதி ரிஷ்யந்தி றொபேட்
கொழும்புத்துறை

வானம் முட்டும் கடல்
கடலை ஒட்டிய பிரதான சாலை
சாலையை ஒட்டிய பனைமரங்கள்
பனைமரங்களில் விளைந்த பனங்காயும்
பங்குபோட்டு உண்ட நண்பர்களும்

கடற்கரையோரம் தென்னந்தோப்பு
அழகழகாய் அணிவகுக்க
கொத்துகொத்தாய் தேங்காயும் இளநீரும்
வெட்டிகொடுத்த வேலைக்கார
தாத்தாவும் நீந்திப்பழகிய கடலும்

நிலமெல்லாம் பசுமைபோர்த்தி
எங்கெங்கும் வயல்வாசம்
களையெடுக்கும் பெண்களங்கே
பாடியிருக்கும் நாட்டுப்பாட்டும்

காலையில் கூவி எழுப்பும்
கோழியின் குரலும் கொக்கும்,
பறவை கூட்டங்களும்
பாடும் குயிலும்

ஊர் ஒட்டாய் வீதி அருகில்
உணவு தேடும் பசுமாடுகள்
கடலில் மீன் பிடித்து
ஆக்கி தின்ற கூட்டான் சோறும்

உலுக்கி சாப்பிட்ட நாகர்ப்பழமும்
சுட்டு சாப்பிட்ட புளியங்காயும்
திருடி சாப்பிட கொய்யாபழமும்
அடித்து உண்ட விளாங்காயும்

வீதியோரம் பெண்களின்
தொழிலாம் சிறுகைத்தொழில்
செய்யும் அழகான காட்சியும்
ஊர் கோவில் திருவிழா
அங்கு விற்ற பொம்மைகள்
அதைகேட்டு அழுத நிமிடங்களும்
கிட்டி புல்லும் கபடிக்குழுவும்

கிரிக்கெட் மட்டையும்
கன்னாம்பூச்சியும்
நீச்சல் விளையாட்டும்

ஆட்டோடும் மாட்டோடும்
செல்லமாய் கழித்த நாளும்
பொங்கலன்று குடும்பத்தோடு
பொங்கிய பானைசோறும்

சுட்டெரிக்கும் வெயிலிலும்
இதமான கிராமத்து காத்தும்
சுத்தமான சுவாசம்
சுத்தமான மனங்களும்

வறுமையானது தான் என்றாலும்
வசந்தமான வாழ்க்கை!
நடை பயண கஷ்டம் கூட,
இளம் தென்றலால் இஷ்டமாகும்.

தாரிடப்படாத தாய் பூமியை,
முத்தமிட்டுத் திளைக்கும் பாதங்கள்
கிராமத்துக் காதல்களின்,
அரங்கேற்ற மேடைகளாய்
வயல்வெளிகள்!

முதுமையின் கனிமையும்,
இளமையின் இனிமையும்,
இணைந்து உறவாடும் இல்லறம்..
மலருடன் விளையாடும் பூங்காற்று,

மண்மணம் மாறாத பெண்மை..!
கூடி உண்ணும் சுவையில்
குழந்தைகளின் சந்தோஷம்...!!
பெரும் வளர்ச்சி கண்ட

நகரங்களோடு ஒப்பிட்டாலும்..,
பொய்யற்ற அன்பில்,
புகழாரம் சூடி நிற்கிறது..
"கிராமத்து வாழ்க்கை"!!!

# விஞ்ஞானத்தின் விந்தையும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியும்



செல்வி நிதுஷிகா சசிகுமார்
கொழும்புத்துறை

"அண்டங்கள் கடந்தும் அணுவையே துளைத்தும்

விந்தைகள் செய்திபட விஞ்ஞானம்"

என விஞ்ஞானத்தைப் போற்றும் விஞ்ஞான யுகத்தில் தற்போது நாம் தடம் பதித்திருக்கின்றோம். விஞ்ஞானம் ஒன்றும் இருபத்தோராம் நூற்றாண்டில் திடீரென்று வந்து குதித்த குழந்தை அல்ல. மனிதனின் தோற்றத்தோடு தோன்றி அவனது வாழ்க்கையோடு வளர்ந்து இன்று விஸ்வரூபம் எடுத்திருக்கும் விருட்சம் விஞ்ஞானம் ஆகும்.

ஆரம்ப காலத்தில் மிருகங்களோடு மிருகங்களாக மனிதன் வாழ்ந்தபோது, விஞ்ஞானம் என்பது அவனுக்கு எட்டாத புதிராய் இருந்தது. எனினும் கல்லிலிருந்து நெருப்பை கண்டுபிடித்தமை ஆனது விஞ்ஞான வளர்ச்சிக்கு அத்திவாரமிட்டது. பின்னர் படிப்படியாக சில்லின் கண்டுபிடிப்பு, நீராவி இயந்திரத்தின் கண்டுபடிப்பு என்பன விஞ்ஞான வளர்ச்சிக்கு திறப்புவிழா வைத்தது.

குழந்தை ஒன்று பிறந்து, தவழ்ந்து, தளிர்நடை பயின்று பின்பு வலுவுடன் எழுவதைப் போல தொழில்நுட்பம் படிப்படியாக வளர்ச்சிகண்டு இன்று மனித வாழ்வில் ஒரு அங்கமாகி விட்டது. பல்கிப் பெருகியிருக்கும் பல துறைகளில் இன்று தொழில்நுட்பம் இல்லாத ஒரு துறை கூட இல்லை என்றே சொல்லாம்.

விஞ்ஞானத்தின் விந்தையானது கல்வித்துறையிலும் தன் பங்களிப்பினை ஆற்றியுள்ளது. புத்தகங்கள் ஊடாக வேண்டிய தகவல்களை சேகரித்த காலம் போய் ஒரு வசதியான இடத்திலிருந்து வசதியாக விதத்தில் முழு உலகையும் பார்ப்பதற்கான அதிஷ்டம் நமக்கு கிடைத்தது. விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றின் வளர்ச்சியால் என்றால் மிகையாகாது. தொழில் நுட்பவியலின் முன்னேற்றத்துடன் எந்தவொரு நாட்டிலிருந்தும் ஒருவர் தனக்கு விருப்பம் ஆனவாறு ஒரு கல்வி நிறுவகத்துடன் தொடர்பு படுவதனூடாக மிகைக்குறைந்த செலவுடன் உயர் பாடநெறியை கற்ககூடிய வசதியை உலகம் பெற்றுவிட்டது.

அடுத்து தொடர்பாடல் துறையினை எடுத்து நோக்கினோமெயானால் இவ் விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் போன்ற சமூக வலைத்தளங்கள் மூலம் உலகமே Viber, Whatsapp, Facebook, skype மற்றும் Google போன்ற சமூக வலைத்தளங்கள் மூலம் உலகமே ஒரு விரல் நுனியில் இயங்குகின்றது என்றால் மிகைமையாகாது. Facebook, Twitter, Google போன்ற சமூக வலைத்தளங்களின் ஊடாக உள்நாடு, வெளிநாட்டு செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள முடிவதுடன் ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் முடிகின்றது. அதுமட்டுமல்லாமல் வெளிநாட்டில் இருக்கும்போது எமது உறவினர், நண்பர்கள் உடன் நேரே பேசுவது போல Skype மூலம் உரையாடவும் உதவுகின்றது.

அடுத்து தொழினுட்பவளர்ச்சியின் பங்களிப்பினை வர்த்தகத்துறையில் எடுத்து நோக்கினால் தகவல் தொடர்பாடல்

தொழினுட்ப வளர்ச்சியின் காரணமாக வணிகத்துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கருவிகளின் பயன் பாட்டினால், பல்வேறு வணிக நட வடிக்கைகள் உருவாகியுள்ளன. தற் காலத்தில் இலத்திரனியல் ஊடகத்தின் வளர்ச்சியினால் நிலையம் இன்றி வணிக நடவடிக்கைகளை நடத்திச் செல்ல முடியும். இதற்காக இணையம் பயன் படுத்தப்படுகின்றது.

மேலும் இதன் வளர்ச்சியின் காரணமாக வணிக நடவடிக்கைகளை நிறைவேற்றிக்கொள்வதில் பல்வேறு புதிய நிலைமைகள் காணப்படுகிறன்றது. விசேடமான பலமான போட்டி நிலைகளினூடாக நுகர்வோர்களுக்கு மிகவும் இலகுவாக அமையும் விதத்தில் தமது வணிக நடவடிக்கைகளை விரிவு படுத்துவதற்கு வணிகம் முயற்சிக்கிறது. தகவல் தொடர்பாடல் தொழினுட்ப முன்னேற்றத்தின் காரணமாக இலத்திரணி யல் வணிகம் (e-shopping) அதாவது கொள்வனவு, விற்பனை நடவடிக்கை களுக்காக இணையத்தினூடாக நட வடிக்கைகளை மேற்கொள்வதை அவதானிக்க முடியும்.

வங்கிகளைக் கூட தொழில்நுட்ப வளர்ச்சி ஆக்கிரமித்து விட்டது. அதாவது வங்கியிலொன்று தனது அனைத்து வங்கி கிளைகளின் வாடிக்கையாளர்களுக்கும் எந்தவொரு கிளையின் மூலமும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய வாறு இலத்திரனியல் ஊடகத்தின் மூலம் தொடர்புறும் வகையில் வலையமைப்பு ஒன்றை கொண்டிருத்தல் ஒற்றை வங்கி அமைப்பு முறை எனவும் அழைக்கப்படும். பல்வேறு வணிக வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்கு எந்தவொரு வங்கிக்கிளைகளின் மூலமும் நடவடிக்கை களை மேற்கொள்வதற்கு முடியுமான வகையில் இலத்திரனயில் ஊடகத்தின் மூலம் தொடர்புறும் வலையமைப் பொன்று கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இவையெல்லாம் சாத்தியமானதற்கு காரணம் நவீன தொழில்நுட்ப வளர்ச்சி ஆகும்.

போக்குவரத்து துறையிலும் விஞ்ஞானம் தன் வியத்தகு சாதனைகளை நிலைநாட்டியுள்ளது. ஆரம்பகாலங்களி லும் கால்நடையாகவும் மிருகங்களை பூட்டியும் பயணம் செய்த மனிதன் இன்று போக்குவரத்து கருவிகளின் பயன்பட்டால் இலகுவாகவும் விரைவாகவும் பிரயாணங் களை மேற்கொள்கின்றான்.

கடுகதியில் போக்குவரத்தை மேற்கொள்ளக் கூடியவாறு வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் கண்டங்களை இணைத்து தரைவழியாகவும், சுரங்க வழியாகவும், நீர் வழியாகவும் போக்கு வரத்து பாதைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இப் போக்குவரத்தானது தெருப் போக்குவரத்து, புகையிரதப் போக்கு வரத்து, நீர்ப்போக்குவரத்து, ஆகாயப் போக்குவரத்து, குழாய்ப்போக்குவரத்து, கேபிள்போக்குவரத்து, விண்வெளிப் போக்குவரத்து என்பவற்றைக் குறிப்பிடலாம்.

ஆரம்பகாலங்களில் கால்நடை யாகவும், மிருகங்களை பூட்டியும் பயணம் செய்த மனிதன் இன்றைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சியால் தரை மூலமாக பல வகையான வாகனங்களில் பயணம் செய்கின்றான். தெருப் போக்குவரத்தானது அதிவேக நெடுஞ்சாலைகள், அதிவேக வாகனங்கள் என தினம் தினம் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுக் கொண்டிருக் கின்றன. அதேபோல புகையிரதப் போக்குவரத்து ஆனது நிலக்கரிமூலம் இயங்கத்தொடங்கி இன்று நவீன தொழில்நுட்ப வசதியினால் சுரங்க வழிப்புகையிரதம், கடுகதி மின்சார

புகையிரதம், மின்காந்தப்புகையிரதம் என இதன் வளர்ச்சி பெருகிக் கொண்டேயிருக் கிறது. நீர்ப்போக்குவரத்து ஆனது ஆரம்பகாலத்தில் கட்டு மரம் மூலம் பயணம் செய்து பின்னர் படிப்படியாக படகு, கப்பல், மோட்டார் கப்பல் என வளர்ச்சியடைந்தது. இன்று நீர்மூழ்கிக் கப்பல் வரை வியாபித்துள்ளது. அத்துடன் ஆகாயப் போக்குவரத்தானது இன்றைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சியால் விமானம், Helicopter, ஜெட்ரக விமானங்கள் என வளர்ந்து கொண்டே செல்கிறது. அன்று சந்திரனில் கால் வைத்தார் நீல் ஆம்ஸ்ரோர்ங் அதன்பின் விண்வெளியில் பல்வேறு கண்டு பிடிப்புக்கள் நடைபெற்றன. இதன்மூலம் செவ்வாய் கிரகத்தில் நீர் இருப்பது கண்டறியப்பட்டது இன்று செவ்வாய் கிரகத்திலோ அல்லது வேறு கிரகத்திலோ மனிதர்கள் வாழ்கிறார்கள் என கண்டறிவ தற்காக செய்மதிகளையும் றொக்கட்டு களையும் அனுப்பி நாட்டுக்கு நாடு போட்டி போடுவதற்கெல்லாம் காரணம் இந்த விண்வெளிப்போக்குவரத்தில் ஏற்பட்ட நவீன தொழில்நுட்ப வளர்ச்சியே என்பதில் ஐயமில்லை.

அடுத்ததாக மருத்துவத்துறையை எடுத்து நோக்கினால் அன்றைய காலத்தில் பச்சிலைகளையும் மருத்துவச் செடிகளை யும் நாட்டு வைத்தியரையும் மட்டுமே நம்பி வாழ்ந்த மக்கள் இன்று மருத்துவத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியை எண்ணி வியந்தாலும் மிகையாகாது. மருத்துவத் துறையிலும் விஞ்ஞானத்தின் பணி அளவிடற்கரியதாகவோ காணப்படுகின் றன. பல நோய்களுக்கும் உரிய புதிய புதிய மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கதிர்கள் மூலம் ஹீமோதெரபி, ரேடியோ தெரபி, இருதயமாற்று சத்திரசிகிச்சை, பைனல்கோட் சத்திரசிகிச்சை MR Scan, CT Scan, X-tray மூலமான சிகிச்சை, பரிசோதனைக்குழாய் குழந்தை என்பன மருத்துவத்துறையில் அறிமுகப்படுத்தப் பட்ட புதிய நுட்பங்களாகும்.

இயந்திர மனிதனை (Robot) கண்டுபிடித்தமையும் விஞ்ஞான தொழில் நுட்பத்தின் மகத்தான சாதனை எனலாம்.

இவையெல்லாம் விஞ்ஞானம் எமக்களித்த கொடைகள் எனலாம். இவற்றால் பல நன்மைகள் இருப்பினும் கலாச்சார சீரழிவு, கல்வியில் பின்னடைவு உளநோய்கள், கணனி நச்சுநிரல், தகாத நட்புகள், உடல் ரீதியான நோய்கள் போன்ற சில தீமைகளும் இருக்கவே செய்கின்றன.


# 2015ம் ஆண்டு நிகழ்வுகள்














# 2015ம் ஆண்டிற்கான கலை நிகழ்வுகளும் அரங்க நிகழ்வுகளும்








# 2014ம் ஆண்டு பதிவுகள்



தைப்பொங்கலின் போது



முன்பள்ளி சிறார்களின்
பிரியாவிடையின் போது



சிரமதானத்தின் போது





சித்திரை கொண்டாட்ட அரங்க நிகழ்வு



கரபந்தாட்ட அணி

# 2014 ஆம் ஆண்டு மைதான நிகழ்வுகள்









# 2013 ஆம் ஆண்டு சித்திரைக் கொண்டாட்ட பொது நிகழ்வுகளும் மைதான நிகழ்வுகளும்













# 2013 ஆம் ஆண்டு சித்திரைக் கொண்டாட்ட மைதான நிகழ்வுகள்









# 2013ம் ஆண்டு சித்திரைக் கொண்டாட்ட மைதான நிகழ்வுகள்






## நிலைய நூலக திறப்புவிழாவின் போது










# 61வது ஆண்டு சித்திரைக் கொண்டாட்ட நிகழ்வுகள் - 2012













## முன்பள்ளி புனரமைப்பின் பின்னரான திறப்புவிழாவின் போது











# கடந்த காலங்களில் கொழும்புத்துறை சனசமூக நிலைய நிர்வாகத்தில் கடமை புரிந்தவர்கள்

| ஆண்டு | தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| 1951 | செல்லையா | செ.யோகநாதன் | வே.யோகநாதன் |
| 1952 | செல்லையா | செ.யோகநாதன் | வே.யோகநாதன் |
| 1953 | செ.பரம்சோதி | செ.யோகநாதன் | வே.யோகநாதன் |
| 1954 | செ.மாணிக்கவாசகர் | செ.பரமசாமி | - |
| 1955 | செ.மாணிக்கவாசகர் | செ.பரமசாமி - | |
| 1956 | பொ.நடராசா | செ.பரமசாமி | - |
| 1957 | த.சுப்பிரமணியம் | செ.யோகநாதன் | வே.தங்கவேல் |
| 1958 | த.சுப்பிரமணியம் | செ.யோகநாதன் | வே.தங்கவேல் |
| 1959 | த.சுப்பிரமணியம் | செ.யோகநாதன் | வே.தங்கவேல் |
| 1960 | த.சுப்பிரமணியம் | செ.யோகநாதன் | வே.தங்கவேல் |
| 1961 | த.சுப்பிரமணியம் | செ.யோகநாதன் | வே.தங்கவேல் |
| 1962 | த.கந்தையா | செ. கந்தசாமி | |
| 1963 | த.கந்தையா | செ. கந்தசாமி | |
| 1964 | த.கந்தையா | செ. கந்தசாமி | |
| 1965 | த.கந்தையா | செ. கந்தசாமி | |
| 1966 | செ.இராசரெத்தினம் | | |
| 1967 | க.நடராசா | | |
| 1968 | க.நடராசா | | |
| 1969 | சி.கணேஸ் | | |
| 1970 | சி.கணேஸ் | க. குணரட்ணம் | - |
| 1971 | சி.கணேஸ் | | |
| 1972 | செ.இராசரெத்தினம் | | |
| 1973 | செ.இராசரெத்தினம் | | |
| 1974 | செ.இராசரெத்தினம் | | |
| 1975 | செ.இராசரெத்தினம் | | |
| 1976 | செ.இராசரெத்தினம் | | |
| 1977 | செ.இராசரெத்தினம் | | |
| 1978 | செ.இராசரெத்தினம் | | |
| 1979 | செ.இராசரெத்தினம் | - | |
| 1980 | க.கலாநாதன் | சி.மகேசன் | - |
| 1981 | ஆ.செல்வரெட்ணம் | இ.இராசசிவன் | சி.அன்னலிங்கம் |
| 1982 | ஆ.செல்வரெட்ணம் | இ.இராசசிவன் | சி.அன்னலிங்கம் |
| 1983 | ஆ.செல்வரெட்ணம் | ஆ.சண்முகதாசன் | - |
| 1984 | க.தெய்வேந்திரம் | கோ.பாஸ்கரன் | - |
| 1985 | க.தெய்வேந்திரம் | ஆ.சண்முகதாஸ் | - |
| 1986 | க.தெய்வேந்திரம் | கோ.பாஸ்கரன் | - |
| 1987 | க.சிவசம்பு | - | - |
| 1988 | க.சிவசம்பு | - | - |

| ஆண்டு | தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| 1989 | க. சிவசம்பு | - | - |
| 1990 | க. தெய்வேந்திரம் | - | - |
| 1991 | க. தெய்வேந்திரம் | சி.இராஜநாதன் | சி.அன்னலிங்கம் |
| 1992 | க. தெய்வேந்திரம் | சி.இராஜநாதன் | சி.அன்னலிங்கம் |
| 1993 | க.நடராசா | க.தில்லைநாதர் | சி.அன்னலிங்கம் |
| 1994 | க.நடராசா | க.தில்லைநாதர் | க.குண ரட்ணம் |
| 1995 | க.நடராசா | க.தில்லைநாதர் | க.இராசதுரை |
| 1996 | செ.இராசரெத்தினம் | | |
| 1997 | செ.இராசரெத்தினம் | | |
| 1998 | செ.இராசரெத்தினம் | | |
| 1999 | செ.இராசரெத்தினம் | | |
| 2000 | இடப்பெயர்வு காரணமாக இயங்கவில்லை | | |
| 2001 | | | |
| 2002 | | | |
| 2003 | க.நடராசா | சா.சயந்தன் | இ.சசிக்குமார் |
| 2004 | க.நடராசா | பா.சசிகரன் | இ.சசிக்குமார் |
| 2005 | க.நடராசா | பா.சசிகரன் | இ.சசிக்குமார் |
| 2006 | க.நடராசா | பா.சசிகரன் | இ.சசிக்குமார் |
| 2007 | க.நடராசா | பா.சசிகரன் | இ.சசிக்குமார் |
| 2008 | க.நடராசா | பா.சசிகரன் | இ.சசிக்குமார் |
| 2009 | க.நடராசா | பா.சசிகரன் | - |
| 2010 | க.நடராசா | பா.சசிகரன் | - |
| 2011 | வி.காங்கேயன் | பா.சசிகரன் | ச.லினோர்த்தன் |
| 2012 | வி.காங்கேயன் | பா.சசிகரன் | ச.லினோர்த்தன் |
| 2013 | சி.றஜீவன் | சி.விஜிந்தன் | வி. காங்கேயன் |
| 2014 | வி.காங்கேயன் | ச.லினோர்த்தன் | து.துஜிக்காந் |
| 2015 | கு.மகேஸ்வரன் | சி.விஜிந்தன் | ச.லவதீபன் |
| 2015 | (பிற்பகுதி) க.இராசதுரை | இ.விஜயகுமார் | ச.லினோர்த்தன் |
| 2016 | செ.இராசரெத்தினம் | இ.விஜயகுமார் | வி.காங்கேயன் |
| 2017 | மா.கமலநாதன் | லோ.கோபிகிருஷ்ணா | ந.கோபிராஜ் |
| 2018 | மா.கமலநாதன் | லோ.கோபிகிருஷ்ணா | ந.கோபிராஜ் |
| 2019 | வி. காங்கேயன் | இ.விஜயகுமார் | மா.கமலநாதன் |

# வருடா வருடம் நடைபெறும் சித்திரை கொண்டாட்ட நிகழ்வுளின்
# போட்டி அனுசரணையாளர்கள்

| | |
|---|---|
| 1. கல்வி சார் போட்டி | அமரர்.செ.இராசரத்தினம் ஞாபகார்த்தமாக அவரது குடும்பம் |
| 2. உதைபந்தாட்ட போட்டி | அமரர் கனகேஸ்வரி ஞாபகார்த்தமாக அவரது மகன் ஜெ. யோகசுகிர்தன் |
| 3. கரப்பந்தாட்ட போட்டி | அமரர் பொன்னுத்துரை குணசிங்கம் ஞாபகார்த்தமாக அவரது குடும்பம் |
| 4. துடுப்பாட்ட போட்டி | அமரர் நடராசா கமலநாதன் ஞாபகார்த்தமாக அவரது மருமகன் வா.கேதிஸ்வரன் |
| 5. தாச்சிப்போட்டி | அமரர் திருமதி இராசம்மா பொன்னுச்சாமி ஞாபகார்த்தமாக அவரது மகன் பொ.சிவகுருநாதன் பெறுமதியான பரிசில்கள் |
| மாதர் சங்கம் போட்டி | அமரர் செல்வி சுகந்தினி ஞாபகார்த்தமாக பெற்றோர் பரமேஸ்வரி ஸ்ரீஸ்கந்தராசா |
| கடல்சார் போட்டி<br>நீச்சல் போட்டி மேற்பிரிவு<br>இல்லங்களுக்கிடையிலானது | அமரர் சிதம்பரநாதன் செந்தில்நாதன் ஞாபகார்த்தமாக அவரது மகன் செ.செந்தாளனால் வழங்கப்பட்டது |
| கீழ்ப்பிரிவு<br>இல்லங்களுக்கிடையிலானது | அமரர் பேரம்பலம் கனகம்மா ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் வழங்கப்பட்டது தங்கப்பதக்கம் மற்றும் பெறுமதியான பரிசில்கள் |
| நீச்சல் போட்டி<br>பொதுப்பிரிவு | அமரர் சின்னத்துரை நடராசா ஞாபகார்த்தமாக அவரது மகன் ந.நகுலேஸ்வரன் அவர்களால் வழங்கப்பட்டது |
| 2ம் 3ம் இடம் | மயில்நிதி களஞ்சியம் |
| வள்ளப்போட்டி அனுசரனை | அனுசரனை செ.ஜெயகாந்தன் |

**இல்லபோட்டி**

| | |
|---|---|
| ஓட்டப் போட்டிகள் | அமரர் சி.பொன்னுச்சாமி ஞாபகார்த்தமாக அவரது மகன் பொ.குகதாசன் |
| நீளம் பாய்தல் | அமரர் சி.ஆறுமுகம் ஞாபகார்த்தமாக அவரது மகன் ஆ.சண்முகாநந்தன் |
| உயரம் பாய்தல் | அமரர்கள் நடராசா வள்ளிமுத்து ஞாபகார்த்தமாக மகள் திருமதி வசந்தராணி இராசநாயகம் |
| தட்டு எறிதல் | அமரர் நா.இராசு ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் |
| குண்டு போடுதல் | அமரர் இ.நிமலன் ஞாபகார்த்தமாக அவரது மகன் திவாகரன் |
| ஈட்டி எறிதல் | திருமதி அஜந்தா வித்தியகாந் குடும்பத்தினர் |

## மரதன் ஓட்டம்

| | |
|---|---|
| கீழ்ப்பிரிவு-<br>1ம் இடம் | அமரர் கணபதிப்பிள்ளை அன்னம்மா ஞாபகார்த்தமாக அவரது மகன் க.நடராசா தங்கப்பதக்கம் |
| 2ம் இடம் | அமரர் சின்னத்தம்பி கந்தசாமி ஞாபகார்த்தமாக அவரது மகன் க.ஜெகநாதன் |
| 3ம் இடம் | அமரர் தம்பு பரமசாமி ஞாபகார்த்தமாக அவரது மருமகன் வி.குணபாகன் பெறுமதியான பரிசில்கள் |
| மேற்பிரிவு-1<br>1ம் இடம் | அமரர் சின்னையா துரைராசா ஞாபகார்த்தமாக அவரது மகன் து.சௌந்தரராஜா தங்கப்பதக்கம் |
| 2ம் இடம் | அமரர் வேலாயுதம்பிள்ளை சரவணபவன் ஞாபகார்த்தமாக அவரது மகன் ஸ்ரீதரன் தங்கப்பதக்கம் |
| 3ம் இடம் | அமரர் தம்பு பரமசாமி ஞாபகார்த்தமாக அவரது மருமகன் வி.குணபாகன் பெறுமதியான பரிசில்கள் |
| பொதுப்பிரிவு-3<br>1ம் இடம் | அமரர்கள் சின்னத்தம்பி நடராசா மனோன்மணி ஞாபகார்த்தமாக அவரது மகள் திருமதி வரதலட்சுமி நடராசா தங்கப்பதக்கம் |
| 2ம் இடம் | அமரர் ஆறுமுகம் செல்வராசா தங்கம்மா ஞாபகார்த்தமாக அவரது மகன் செ.ஜெயபாலன் |
| 3ம் இடம் | அமரர் திருமதி வாசுகி நல்லையா ஞாபகார்த்தமாக அவரது மகன் ந.விஜிந்தன் பெறுமதியான பரிசில்கள் |


| | |
|---|---|
| மைதான நிகழ்வுகளுக்கு அனுசரணை 13.04.2019 | அமரர்கள் இராசையா இராசலட்சுமி ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் |
| அரங்க நிகழ்வுகளுக்கு அனுசரணை 14.042019 | திருமதி தேவிகா லோகேஸ்வரன் |
| முதியோர்களுக்கான போட்டி அனுசரணை | அமரர் சு.சிவலோகநாதன் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் |
| மைதான நிகழ்வுகளுக்கும் அரங்க நிகழ்வுகளுக்கும் குளிர்பானங்கள் அனுசரணை | Rasaratnam Soosairajah<br>Fonder-Mayilan groups of company and Mayilan travels,<br>Rasaratnam Mahinthan<br>Director Mayilan Equipment pvt ltd and mayilan travels |

## மைதான நிகழ்வுகள்

| | |
|---|---|
| முன்பள்ளி விளையாட்டுக்கள் | அமரர் கணபதிப்பிள்ளை தெய்வேந்திரன் ஞாபகார்த்தமாக அவரது குடும்பம் |
| முன்பள்ளி விளையாட்டுகளுக்கான ஆறுதல் பரிசில்கள் | அமார் மு.சிவஞானம் ஞாபகார்த்தமாக அவரது மகன் சி.ஸ்ரீகாந்தன் |
| அஞ்சலோட்டம் | அமரர் குசேலராசா தனுசன் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினால் வழங்கப்பட்டது 10000 பெறுமதியான பரிசில்கள் |
| தடை ஓட்டம் | மா.துரைசிங்கம் குடுப்பத்தினர் |
| முட்டி அடித்தல் | நா.விநாயகராசா குடும்பத்தினர் |
| தலையனை சண்டை | ஸ்ரீ. நிஜேந்தன் |
| சங்கீத கதிரை | அமரர் ஆறுமுகம் சுபதர்சன் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் மற்றும்<br>திருமதி சூரியகலா செல்லக்குமார் குடும்பம் |
| முட்டை எறிதல் | அனுசரணை சி.பிரகாஸ் குடும்பம் |
| வழக்குமரம் ஏறுதல் | நா.சண்முகராசா குடும்பம் அனுசரணை |

இம் மலருக்கு அனுசரணை வழங்குவோர் ....



இம் மலருக்கு அனுசரணை வழங்குவோர் ....


# NAVEEN CERAMIC

DIRECT IMPORTERS OF QUALITY TILES / SANITARYWARE

**FRANCHISE DEALER: -**

## Uthayas Ceramic

**No.125, Stanley Road, Jaffna, Sri Lanka.**

**Hot Line: 0212219789, 0729715385**

**No.21/2, Stanley Road, Jaffna. T.P: 0212219788**



www.naveen.lk    Naveen Ceramic

ARPICO · Macktiles LANKA · Rocell · DAMRO · LANKATILES · SWISSTEK · JOHNSON

இம் மலருக்கு அனுசரணை வழங்குவோர் ....




# MEGA PRINTERS

Professional Printing & Designing Center

மெகா பதிப்பகம் 41, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

021 221 7939

megamail2012@gmail.com

Mega Printers

# Thambippillai & Son
## தம்பிப்பிள்ளை அன் சன்

கால்நடை மருந்து வகைகள்
முட்டைக் கோழிக்குஞ்சுகள் (நெல் பாம்)
இறைச்சி கோழிக்குஞ்சுகள் (பகிரா பாம்)
பேட்டுக்குஞ்சுகள் , ஊர்க்குஞ்சுகள்
ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

343, K.K.S.Road,Jaffna.
0212223353

V.GUNAPAGAN - 0773757271



# SV DEVELOPMENTS & CONSTRUCTIONS Pvt (Ltd)

COMMITTED TO SUPERIOR QUALITY AND RESULTS

## C - Lings

**Interior Design**
- Painting,
- Ceiling Work

(Expert in Plaster board Design Ceilings, Gypsum Molding & Etc..)

**Construction**
(Luxury house, Modern house, Hotels, Wedding halls & Etc..)

**Welding Works**
(Modern gates, Roof work & Etc..)

**Fitting Works**
(Aluminium, Tempered glass, Cladding works & Etc..)

**Material Supply**
(Lights, Plaster boards, GI bar, Moldings, Nails & Etc..)



FB ID : C- Lings SV Development
Page : SV Developments & Constructions.Pvt(Ltd)
Email : svdevelopmentsc@gmail.com

T.P : 077 844 9777, 021 222 3353
1st Floor 343 K.K.S.Road Jaffna.
(on top of Thampplai & Sons)



KSRI
PRINTING SOLUTION
All kind of Photocopy Machines Repair and Sales
Tonners & Parts
RICOH
SHARP
TOSHIBA
Leading Innovation
Canon
hp
EPSON
62/11 Nedunkulam Road, Colombuthurai, Jaffna | Tel - 071 944 1122 / 077 618 4031 | Email - ksrijaffna@gmail.com




பனர் பிறின்டிங்
டிஜிற்றல் பனர்கள்
டிஜிற்றல் ஸ்ரிக்கர்ஸ்
விளம்பரப் பலகைகள்
டிஜிற்றல் பெயர்ப் பலகைகள்
AN DIGITAL IMAGE
DIGITAL & OFFSET PRINTING
உயர்தர பிறின்டிங் சேவை
077 18 35 309
114/2 Colombuthurai, Jaffna
andigital95@gmail.com

இம் மலருக்கு அனுசரணை வழங்குவோர் ....







இம் மலருக்கு அனுசரணை வழங்குவோர் ....










31 JAN 2020
1838

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
வண்ணார்பண்ணை கிளை நூலகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.







பதிப்பு :
மெகா பதிப்பகம்
றக்கா வீதி , யாழ்ப்பாணம். 021 221 7939